பக்கங்கள் : இருபத்து எட்டு + 6

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 04 புதன்கிழமை (20.07.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 236



02 எங்கே பஸ்கள்?



09 மக்களை ஏமாற்றும் அரசு



14 கரையோரங்களை ஆக்கிரமிக்க அரசு திட்டம்

# அரசியல் சுதந்திரம் வடக்கில் இல்லை

## தேர்தலில் எதிர்க்கட்சிகளுக்கு இதனால் பாதிப்பு - கபே

கொழும்பு, ஜூலை 20

தெற்குடன் ஒப்பிடும் போது வடக்கில் அரசியல் சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம், நடமாடும் சுதந்திரம் என்பன நெருக்கடிக்குள்ளாகி உள்ளன என்று சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே) தெரிவித்துள்ளது.

வடக்கின் இத்தகைய நிலை உள்ளூராட்சித் தேர்தலில் "எதிர்க்கட்சிகளுக்கும் அதன் வேட்பாளர்களுக்கும் பாதகமாக உள்ளது" என்றும் கபே தனது அறிக்கையில் கூறி உள்ளது.

இன்னும் மூன்று தினங்களில் நடக்க உள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பாக முன் கூட்டியே இடைக்கால அறிக்கை ஒன்றை கபே அமைப்பு வெளியிட்டுள்ளது. 17 பக்கங்களைக் கொண்ட அந்த அறிக்கையில் பெரும்பாலான பகுதிகள் வடக்கின் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கே ஒதுக்கப்பட்டுள்ளன.

வடக்கில் உள்ள 20 உள்ளூராட்சி சபைகளுக்கு நடத்தப்படும் இந்தத் தேர்தலில் அரச தரப்பால் வன்முறைகள், விதி மீறல்கள் நிகழ்த்தப்படுவதாகவும் அரச வளங்கள் (27 ஆம் பக்கம் பார்க்க)

## இலவசங்களை நம்பி வந்தோர் ஏமாற்றம் திட்டித் தீர்த்தனர் அரச அதிகாரிகளை!

யாழ்ப்பாணம், ஜூலை 20

உதவிப் பொருள்களும் இலவசங்களும் வழங்கப்படும் என்று தெரிவித்து ஜனாதிபதியின் பிரசாரக் கூட்டங்களுக்கு அழைத்து வரப்பட்ட தமிழ் மக்கள் எதுவும் வழங்கப்படாது ஏமாற்றப்பட்டனர்.

இதனால் கோபமடைந்த அவர்கள் தம்மை அழைத்த அதிகாரிகளைத் திட்டித்தீர்த்தனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் இரண்டாவது பிரசாரக் கூட்டம் நேற்று கோப்பாயில் நடைபெற்றது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

ஜனாதிபதி கலந்து கொள்ளும் கூட்டங்களுக்கு ஒவ்வொரு சமுர்த்தி அலுவலரும் கிராம அலுவலரும் ஆள்களைத் திரட்டி அனுப்ப வேண்டும்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்று விளையாட்டு அரங்கா தேவை?

### ரணில் கேட்கிறார்

கொழும்பு, ஜூலை 20

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு அனைத்தையும் இழந்த வடக்கு மக்களுக்கு இன்று தேவைப்படுவது 325 மில்லியன் ரூபா செலவில் நவீன விளையாட்டரங்கு அல்ல, அடிப்படைத் தேவைகளான வீடு மற்றும் வாழ்வாதாரமே.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தமிழ் ஊடகவியலாளர்களைச் சந்தித்துப் பேசிய எதிர்க்கட்சித்தலைவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

விளையாட்டு அரங்குகளை நிர்மாணிப்பதன் மூலம் உழைக்கத் திட்டமிடுகின்றனர்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டை கூறுபோடவிடமாட்டேன்



### கோப்பாயில் மஹிந்த

யாழ்ப்பாணம், ஜூலை 20

எவர் எதைச் சொன்னாலும் நாட்டைத் துண்டு துண்டாகக் கூறுபோடுவதற்கு ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன்; விடவும் மாட்டேன்.

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ நேற்று அழுத்தம் திருத்தமாகக் கூறினார்.

கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தில் ஊவா மாகாண சபையின் நிதியுதவியுடன் 5 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இரண்டு மாடிக்கட்டடத்தை திறந்துவைத்த பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

(27 ஆம் பக்கம் பார்க்க)

## டக்ளஸ் தெய்வமாம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மனிதனே அல்லர் அவர் ஒரு தெய்வம் என்று புகழ் பாடினார், ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகிவிட்டு அரசு பக்கம் தாவிய பிரபா கணேசன்.

டக்ளஸ் தேவானந்தாவை ஒரு தமிழனாக அல்ல; மனிதனாக மதிப்பதே வெட்கக்கேடு என்று ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்த கருத்துக்குப் பதில் அளிக்கும் வகையிலேயே பிரபா கணேசன் இதனைக் கூறினார்.

(27 ஆம் பக்கம் பார்க்க)

### கோப்பாய் கூட்டத்தில் பிரதமரின் 'சரித்திரக் கதை'

# ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தே இந்து மதம் பின்பற்றப்பட்டு வருகின்றது

### பௌத்தமோ 2500 ஆண்டுகளுக்கு முந்தையது



யாழ்ப்பாணம், ஜூலை 20

2,500 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்து பௌத்த மதம் பின்பற்றப்பட்டு வருகின்றது. 1,000 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்து இந்து மதம் பின்பற்றப்பட்டு வருகின்றது. 800 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்து இஸ்லாம் மதம் பின்பற்றப்பட்டு வருகின்றது. அந்தக் காலத்தில் சிங்கள மன்னர்களின் கீழ் தமிழ் மன்னர்கள் இருந்தார்கள்.

- இவ்வாறு இலங்கைப் பிரதமர் டி.எம்.ஜயரத்ன புதிய சரித்திர விளக்கம் ஒன்றை தெரிவித்தார்.

கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தின் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்ட வரலாற்று விளக்கத்தை அளித்தார்.

(27 ஆம் பக்கம் பார்க்க)

உடல் சிதறி குருதி சிந்திய இனத்தின் வாக்குகளும் சிதறவேண்டுமா?

இலங்கைத் தமிழரசுக் கட்சி

வீட்டுக்கு வாக்களித்து அமோக வெற்றியடையச் செய்யுங்கள்

'தமிழரசுக் கட்சியின் வெற்றி தமிழர்களின் வெற்றி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com

# டக்ளஸும் கருணாவும் அமைச்சர்கள் அல்லர் அவர்கள் ஜனாதிபதி மஹிந்தவின் சேவகர்களே!

## யாழ்ப்பாணத்தில் சிறிதுங்க ஜயசூரிய

யாழ்ப்பாணம், ஜூலை 20

டக்ளஸும், கருணாவும் அமைச்சர்கள் அல்லர். அவர்கள் சிங்களப் பேரினவாத அரசின் ஜனாதிபதி மஹிந்தராஜ பக்ஷவின் சேவகர்கள் எனக் குறிப்பிட்டார் ஐக்கிய சோசலிஸக் கட்சியின் செயலாளர் நாயகம் சிறிதுங்க ஜயசூரிய.

நேற்றுமுன்தினம் யாழ். நகரில் பஸ்தியன் ஹோட்டலில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரசபைத் தேர்தலில் ஐக்கிய சோசலிசக் கட்சி போட்டியிடுகிறது.

இந்தக் கட்சியின் வேட்பாளர்களான எஸ்.நகுலராசா, கா.சிவரஞ்சன், சி.கந்தசாமி சகிதம் பிரசன்னமாகியிருந்த சிறி துங்க ஜயசூரிய மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யுத்தம் முடிந்த பின்னரும் வடபகுதி மக்கள் தேசிய சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் இழந்துள்ளனர். அதிகாரத்தைப் பகிர்ந்தளித்து தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு தயாரில்லை.

வட பகுதியில் இராணுவ ஆட்சியே இடம்பெறுகிறது. சகல விடயங்களிலும் இராணுவத் தலையீடுகள் அதிகரித்துள்ளன. இதே நிலைமைதான் தென்னிலங்கையிலும் படிப்படியாக வருகிறது.

வடக்கு மக்கள் திறந்த வெளிச்சிறைச் சாலையில் வாழ்வதனைப் போன்று இராணுவ அடக்குமுறையில் அகப்பட்டுள்ளனர். வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தம் தொடர்பான போர்க்குற்ற அறிக்கை மற்றும் சனல் - 4 வீடியோ ஆகியவற்றுக்குப் பதில் கூற வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது.

அரசின் பக்கமே வடபகுதி மக்கள் என்பதைச் சர்வதேசத்துக்கு உணர்த்த முழு மூச்சில் அரசு பொய்ப் பிரசாரங்களை முன்னெடுத்துள்ளது. மக்கள் அவற்றை நம்பிவிடக்கூடாது - என்றார். (த-2-14)




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானம் காணப்படும் சாத்தியம்.

# ஆலயங்களில் ஆடுகள் வெட்டுவதை தடுப்பது தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 20

ஆலயங்களில் அதிகரித்து வரும் ஆட்டுக் கடாக்களை வெட்டிச் சரிக்கும் நிகழ்வுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் கலந்துரையாடல் ஒன்று, நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நாளை வியாழக் கிழமை நடைபெறவுள்ளது.

சிவத்தமிழ் மானிடவிடியற் கழகத்தின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன முதல்வர் ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் முன்னிலையில் நாளை பிற்பகல் 3.30 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் இந்து சமயத் துறவிகள், சமய அமைப்புகளின் பெரியவர்கள், நீதித்துறை சார்ந்தவர்கள், பேராசிரியர்கள், வைத்தியர்கள், அரச அதிகாரிகள், மனிதநேய அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர் என சிவத்தமிழ் மானிடவியல் கழகம் அறிவித்துள்ளது.

கடந்த ஒரு மாத காலமாக கவுணாவத்தை ஆலயம் உட்படப் பல ஆலயங்களில் இடம்பெற்று வரும் ஆட்டுக் கடாக்களை வெட்டிச் சரிக்கும் நிகழ்வுகளைத் தடுத்து நிறுத்துவதற்குக் காத்திரமான செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பாக ஆராயவே இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது எனவும் அந்தக் கழகம் தெரிவித்தது. (த-14)

# எங்கே இந்தப் பஸ்கள் எல்லாம்...?



இங்கே காணப்படும் காட்சி யாழ். பஸ் நிலையம் தான். இந்தப் படம் நேற்று பிற்பகல் வேளை பிடிக்கப்பட்டது.

போக்குவரத்துச் சபையினர் நேற்று திடீர் வேலை நிறுத்தம் என்று நினைத்து விட்டீர்கள் போலும்: இல்லை; இல்லை.

பஸ்கள் எல்லாம் ஆளும் கட்சியின் பிரசாரப் பணிக்காக எடுத்துச் செல்லப்பட்டுவிட்டன. பொதுமக்களைத் திரட்டிப் பிரசாரக் கூட்டத்துக்கு ஏற்றிச் செல்லவே இந்த ஏற்பாடு. இதனால் பயணிகள் மணித்தியாலக் கணக்கில் பஸ் நிலையத்தில் தவம் கிடக்க நேரிட்டது.

இதேவேளை, யாழ். பஸ் நிலையத்தில் இருந்து வடமராட்சிக்கான சேவை முற்பகல் 11 மணிக்குப் பின்னர் இடம்பெறவில்லை என்றும் பருத்தித்துறை டிப்போ பஸ்கள் முற்பகல் 11 மணிக்குப் பின்னர் யாழ்ப்பாணம் வரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

சுமார் 40 பஸ்கள் பிரசாரத் தேவைகளுக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என்று போக்கு வரத்துச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-4)

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை பூ யாழ்ப்பாணம்
ஆடி 19, 2011
பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6675.70↓
மிலங்கா(MPI) 6198.20↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 1.6Bn
பங்குகளின் அளவு(No.) 57.69Mn
வியாபாரம்(No.) 19286
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
ஹட்டன் நஷனல் பாங் 8.00
ஹட்டன் நஷனல் பாங் 7.80
சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ் 70.00
ஹொட்டல் சேர்விசர்ஸ் 22.80
எஸ் எம் பி லீசிங் 0.80
குறைவு(Top 5 losers) - விலை Rs.
சிலோன் லெதர் 5.90
சதோசா மோட்டர்ஸ் 206.20
பிபுத் 83.00
சுவர்ணமகால் 104.90
கண்டி ஹொட்டல் 210.00
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# கூட்டமைப்புடன் பேசுவதாக சர்வதேசத்துக்கு அரசு பாசாங்கு

## நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் சாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 20

மஹிந்த ராஜபக்ஷ அரசு நமது பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். உறுதியான ஒரு அரசியல் தீர்வை ஏற்படுத்த வேண்டும் என்ற இதய சுத்தியுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களை நடத்த முன்வரவில்லை. இந்த அரசிடம் உறுதியான தீர்வுத்திட்டம் ஒன்று இல்லை. பேசுகின்றோம் என்று சர்வதேச சமூகத்துக்குப் பாசாங்கு காட்டுகின்றது என சாடுகின்றார் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

நேற்றுமுன்தினம் சாவகச்சேரியில் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

சாவகச்சேரி பிரதேச தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதம அமைப்பாளர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தொடர்ந்து பேசிய சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் கூறியவை வருமாறு:-

நாடாளுமன்ற தேர்தல் முடிந்தவுடன், இன்றைய அரசு எடுக்கும் நல்ல விடயங்களுக்கு ஆதரவளிக்கின்றோம். எமது பிரச்சினைகள் தொடர்பாக அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு அரசுடன் பேச தயாராக இருக்கின்றோம். என்று அறிவித்தோம். ஆனால் அரசு அதனை அசட்டை செய்துவிட்டது. எந்த விதமான பதிலையும் தரவில்லை.

ஆறு, ஏழு மாதங்கள் பேச்சு மூச்சு இல்லை. அதன் பின் சர்வதேச சமூகம், நிபுணர் குழு மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் அழுத்தம் காரணமாகவே எம்முடன் பேச வந்தது.

இந்தப் பேச்சுக்களும் உண்மைத் தன்மையுடன் நடைபெறவில்லை. ஒன்பது சுற்றுகள் பேசிவிட்டோம். பேச்சு வார்த்தைக்கு வரும் அமைச்சர்கள் எந்த விதமான முன் ஏற்பாடுகளுடனோ, ஆலோசனைகளுடனோ வருவதில்லை. ஏனோ தானோ என்று பேச்சில் வந்து பொழுதைக் கழித்துவிட்டுப் போய் விடுவார்கள்.

சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் சிறைக் கைதிகளின் விடுதலை, காணாமல் போனவர்களின் விவகாரம், சரண் அடைந்தும் விடுவிக்கப்படாதவர்களின் விவரங்கள் தொடர்பாக எழுத்து மூலம் தரும்படி கேட்டோம். அதனைக்கூட இழுத்தடிக்கின்றனர்.

வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் விவரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

அதன்படி வவுனியாவுக்கு சென்ற உறவுகள் இராணுவத்தினால் அடித்து விரட்டப்பட்டனர்.

இந்த அரசை நம்பமுடியுமா அல்லது இந்த அரசுக்கு காவடி தூக்கும் டக்ளஸ் தேவானந்தாவைத் தான் நம்ப முடியுமா?

இன்று இதற் கெல்லாம் ஒரு தீர்வு காணும் வகையில் தான் ஐ.நா. நிபுணர் குழுவின் போர் குற்ற அறிக்கையும் முள்ளி வாய்க்கால் இனப்படுகொலை தொடர்பான சனல் - 4 ஒளி நாடாவும் வெளிவந்துள்ளன.

சர்வதேசத்தின் முன் பதில் அளிக்க வேண்டிய கட்டாயமும் நிர்ப்பந்தமும் இலங்கை அரசுக்கு ஏற்பட்டுள்ளது. இதில் இருந்து விடுபட முடியாத அரசு இன்று நம்மிடம் வந்து மண்டியிடுகின்றது.

நமது வாக்குகளைக் கொண்டே போர்க்குற்ற அறிக்கையும் சனல் - 4 ஒளிநாடாவும் பொய்யானது என்று காட்ட முனைகின்றது. தன்னையும் ஒரு தமிழன் என்று கூறிக் கொள்ளும் டக்ளஸ் தேவானந்தா தனது அமைச்சுப் பதவியைப் பாதுகாத்துக் கொள்ள அரசுக்கு துணை போகின்றார்.

வெண்ணெய் திரண்டு வரும் போது தாழியை உடைப்பது போல் நமக்கு ஒரு விமோசனம் ஏற்படவுள்ளவேளையில் நாம் வெற்றிலையின் மாயைக்கு மயங்கிவிடக்கூடாது.

நாம் உறுதியாக நின்று நமது வீட்டு சின்னத்துக்கே வாக்களித்து டக்ளஸின் முகமூடியை கிழித்து எறிய வேண்டும் என்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன். (த-2)

# நிகழ்வுகள்

## உள்ளூராட்சி வார கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 20

கோண்டாவில் பொது நூலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட உள்ளூராட்சி வார சிறப்புக் கருத்தரங்கு இன்று முற்பகல் 10 மணிக்கு கோண்டாவில் மேற்கு வேதபாராயண சன சமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நல்லூர் பிரதேச சபை செயலாளர் மே.சாந்தசீலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி எஸ்.சந்திராதேவி கலந்துகொள்வார். (ஐ)

## முன்பள்ளி சிறார் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 20

வலி.மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் சங்கானைக் கோட்டம் அராலிக் குடும்ப முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அராலி மேற்கு மலரும் மலர்கள் முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

திருமதி சிவநாயகம் சறோசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன் டாக்டர் ச.சதாசிவமும், கௌரவ விருந்தினராக ஆரம்பப் பிள்ளைப் பருவ கல்வி அபிவிருத்திப் பிரிவின் உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.குகனேசனும், வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் சு.புத்திரசிகாமணியும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல் 2011 - ஜூலை 23

## அழைக்கின்றோம் நம் தமிழரே வாருங்கள்
## வீட்டுக்கே வாக்களிப்போம்

# எங்கள் நிலம் எமக்கு வேண்டும்

போர் என்று தமிழர் நிலமெல்லாம்
பாதுகாப்பு வலயங்கள் -இன்றும்
அதனால் பல இலட்சம் தமிழ்மக்கள்
நிலமிழந்து, சொத்திழந்து, உயிரழிந்து
நிற்கின்றார்.

போர் முடிந்தும் எங்கள் நிலத்தில் இராணுவம்
குடியிருக்கிறது,
முகாம் அமைத்துக் குடியேற்றம் நடக்கிறது.
அரசே எங்கள் நிலத்தை எங்களிடம் விட்டுவிடு,
வாழவிடு என்று கேட்கும் தமிழ்க்குலம்!

தெருவில் தமிழர் நிற்க அவர் நிலமெல்லாம்
தெற்குச் சிங்களவர் குடிபுகுந்து நெல்
விளைக்கின்றார்
நம் தமிழ் மீனவர் கரையிழந்து கடலிழந்து நிற்க
தென் இலங்கைச் சிங்களவர் சங்கும்
கடலட்டையும்
இறாலும், மீனும் பிடித்து வளமான வணிகம்
செய்கின்றார்

கையிற் குழந்தையுடன் நீதி கேட்டு நிற்கும்
தமிழ்த்தாய்,
அரசே என் கணவனை உன்னிடம்
ஒப்படைத்தோம்,
உயிருடன் இருக்கிறானா? என்று ஆயிரம்
ஆயிரம் குரல்கள்
விடுதலை செய் என்று கேட்கும் தமிழ்த்தாய்!

இத்தனை ஆண்டுகளாய் பல இலட்சம் தமிழர்
தம்மைப்
பலி கொடுத்தும், இனியும்
எம் நிலத்தில் எம்மை ஆள நம்முரிமை
வேண்டாமா?

இன்னும் பல ஆயிரம் தமிழ்ப்பெண்கள், இளைஞர்
சிங்களத்துச் சிறைகளில் வாடுகின்றார்.
விடுதலை இல்லை, விடிவும் இல்லை
தமிழினத்துக்கு!
நாம் நம் மண்ணில் வீடு கட்டி வாழ்வோம்
எம் காணி திருத்தி எம் மண்ணில் பயிர்
வளர்ப்போம்
நம் மண்ணில் தன்னாட்சி செய்வோம்
நம் உரிமை மனிதர்க்கு என்று நாம் ஆட்சி
செய்வோம்
அரசே விலகிப் போ எம்மை வாழவிடு!

புத்தம் சரணம் கச்சாமி என்று நாம் சொல்லவா
புத்தர் இல்லா இடமெல்லாம்
புத்தர் சிலைகள் ஏன்? இது பௌத்த
ஆதிக்கத்தின்
சின்னமல்லவா?

ஜனநாயகப் போராட்டம் அறவழிப்போராட்டம்
அதையும் வன்முறையில் அடக்கியது அரசுகள்
அடக்கு முறைக்கெதிராய் எழுந்தது
ஆயுதப் போராட்டம் ஒடுக்குமுறை ஒழிக என்றே!
அதுவும் முடிந்தது என்கிறது அரசு

முடிந்ததோ இலட்சக்கணக்கில் தமிழர்தான்
தமிழனுக்கோ விடிவுமில்லை விடுதலையுமில்லை
இன்னமும் ஏன் எம் தமிழர் பூமியில் சிங்களவர்
இராணுவம்
எம்மை வாழவிடு எம் நிலத்தில்

இன்று நடப்பதோ இராஜ தந்திரப் போர்
தமிழர் வடித்த கண்ணீர் இன்று உலகமெலாம்
அதனால் இலங்கை அரசை அழுத்துகிறது
உலகம்!

புலம் பெயர்ந்த எம் உறவுகள் எமக்காய்
நிற்கின்றார்
தமிழர் தன்னாட்சி செய்ய இராஜ தந்திரப் போர்
இத்தனை நாளும் செய்த தியாகங்கள்
வீண்போகாது
நம் இனத்துக்கு விடிவு வேண்டும்
எம்மை நாம் ஆள ஒரு சந்தர்ப்பம்
இதனை நாம் இழக்கலாமா?

ஒட்டுமொத்தத் தமிழர் நாம் ஒன்றாக நின்று
வாக்களிப்போம் அது நம் கடமை ஆடி 23 இல்
தோற்கடிப்போம் பேரினவாதத்தை
வெற்றி பெறுவோம் நாம் தமிழர் எம் மண்ணில்
ஊராட்சி மன்றில் தமிழராட்சி செய்வோம்
வாருங்கள்

## இலங்கை தமிழரசுக் கட்சி

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசை எதிர்த்தால் ஓர் அங்குலம் கூட நகர முடியாது - இயலாமை குறித்து வாசுதேவ

அரசை எதிர்ப்பதன் மூலம் ஓர் அங்குலம் கூட முன்னேற முடியாது. இதனைப் புரிந்து கொண்டே இடது சாரிக் கட்சியாக இருந்தும்கூட அரசின் பங்காளிக் கட்சியாக இணைந்து செயற்பட்டு வருகிறோம்.

- இப்போது இவ்வாறு கூறுகிறார் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக அரசின் பங்காளிக் கட்சி என்ற ரீதியில் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தமது நிலைப்பாட்டை தெளிவு படுத்துவதற்காக நேற்று யாழ்.நகரில் செய்தியாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்:-

வடக்கிலும் தெற்கிலும் இடதுசாரிக் கட்சிகளின் பலம் ஓங்கும் போதே இனங்களுக்கிடையிலான பிரச்சினை முடிவுக்கு வரும் என நம்புகிறேன்.

அரசுடன் சேர்ந்திருப்பது ஜனநாயகத்தை நிலை நிறுத்தவும், மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவுமே ஜனநாயகத்தை முன்னெடுப்பதற்கான அழுத்தத்தை மத்திய அரசுக்கு வழங்குவதே எமது நோக்கமாகும். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதன் மூலமே இது சாத்தியமாகும் - என்றார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கும் அமைச்சர் பதிலளித்தார்.

வட பகுதியில் இடம்பெற்று வரும் தேர்தல் வன்முறைகள் பற்றி?

தேர்தல் வன்முறைகள் வடக்கில் மட்டுமன்றி தெற்கிலும் இடம்பெறுகின்றன. நாம் வன்முறைகளுக்கு எதிரானவர்கள். அவற்றை எதிர்க்கிறோம்.

போர்க்குற்ற அறிக்கைகள் மற்றும் சனல் 4 வீடியோ தொடர்பாக?

இந்த இரண்டிலும் உள்ளடங்கியுள்ள விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்ட ஆதாரங்கள் மேலும் தேவையாக இருக்கின்றன. பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் எழுதியிருக்கிறோம் ஆதாரங்களைத் திரட்டி விசாரணை நடத்துமாறு.

இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை?

எனக்கும் தெரியாது. தெரியாத விடயத்தை குறிப்பிட முடியாது. அது தொடர்பான உண்மையான புள்ளி விபரம் திரட்டப்படவேண்டியுள்ளது. மரணம் அடைந்தவர்களது இலக்கத்தை எண்ணுவதை விட தப்பிப் பிழைத்த மக்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பது, மீளக் குடியமர்த்துவது அவசிய மாகும். யுத்தத்தின் போது இழப்பு ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

வட பகுதி வீதிகளுக்கு சிங்களப் பெயர் சூட்டுவது தொடர்பாக?

- அவ்வாறு சிங்களப் பெயர்கள் சூட்ட முடியாது. அவ்வாறு இடம்பெற்றிருந்தால் அது தவறு உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் முடிந்ததும் நடவடிக்கை எடுக்க நேரிடும் என்றார்.

அத்துடன் பருத்தித்துறை நகரசபைத் தேர்தலில் மட்டுமே வேட்பாளர்களை நிறுத்த எமக்கு அனுமதி அளிக்கப்பட்டமை மன வேதனைக்குரிய விடயம் என்றும் வாசுதேவ குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பின்போது அமைச்சின் ஒருங்கிணைப்புச் செயலாளர் கலாநிதிஎஸ். மோகன் அமைச்சின் அரசியல் பிரிவு உதவி செயலாளர் ஜி.வி. ரி.திலக சிறி,லங்கா சமசமாயக் கட்சியின் மாவட்டச் செயலாளர் என்.தமிழழகன் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர். (ஒ-14)

## இலவசங்களை.. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கண்டிப்பான உத்தரவு பிறப்பித்திருந்தார்.

உடுவில், நல்லூர், கோப்பாய் பிரதேசசெயலர்களை நேற்றுமுன் தினம் காலை 8 மணியளவில் ஸ்ரீதர் தியேட்டருக்கு அழைத்த அமைச்சர் டக்ளஸ், கோப்பாய் நாவலர் பாடசாலை மைதானத்தில் இடம்பெறும் ஜனாதிபதியின் பிரசாரக் கூட்டத்துக்கு பிரதேச ஆள்களைத் திரட்டி அனுப்பும் பொறுப்பு பிரதேச செயலர்களுக்கு உரியது.

ஒவ்வொரு பிரதேச செயலகத்துக்கும் எத்தனை எத்தனை பஸ்கள் ஒதுக்கப்படும் என்றும் அமைச்சர் விளக்கினார். இதற்கு மேலாக கூட்டத்துக்கு ஆள்களைகத் திரட்ட வேறு ஒரு உத்தியும் பயன்படுத்தப்பட்டது. இதன்படி, போரின் பின்னர் கோப்பாய் பிரதேசத்தில் மீளக்குடிய மர்ந்த மக்களுக்கு 2,500 பேருக்கு கொடுப்பனவாக 2,500 ரூபா வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்தப் பணம் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியமர்வு அமைச்சினால் வழங்கப்பட இருந்தது. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையே இதனை வழங்க அதிகாரிகள் திட்டமிட்டிருந்தனர். ஆனால் திடீரென நேற்றைய தினம் அந்தப் பணம் ஜனாதிபதியால் வழங்கப்படும் என்று பிரதேச செயலர்களுக்கு புனர்வாழ்வு அமைச்சர் அறிவித்தார்.

இதனை அடுத்து, கிராம அலுவலர்களால் விடயம் மக்களுக்கு அறிவிக்கப்பட்டதுடன் டோக்கனும் கொடுக்கப்பட்டது.

நேற்றுக்காலை டோக்கன்களுடன் அழைத்து வரப்பட்ட மக்கள், நேரடியாக ஜனாதிபதியின் பிரசார மேடைக்கு அழைத்து செல்லப்பட்டு அமர்த்தப்பட்டனர். எனினும் இறுதிவரை அவர்களுக்கு எந்தக் கொடுப்பனவும் வழங்கப்பட வில்லை.

இதனால் ஆத்திரமடைந்த மக்கள் அதிகாரிகளைத் திட்டித் தீர்த்தனர். 'தங்கள் பதவிகளைக் காப்பாற்றுவதற்காக எங்களை அலைக்கழிக்கிறார்கள்' என்று தெரிவித்தார் ஒருவர்.

ஜனாதிபதியின் நேற்றைய பிரசாரக் கூட்டத்தில் வைத்து கோயில்கள், பள்ளிவாசல், தேவாலயங்களுக்கு நிதி வழங்கப்படும் என்று வடமாகாண கல்வி, கலை கலாசார அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவனின் கையொப்பத்துடனான கடிதமொன்று 150 மதகுருமார்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இதற்கான ஒழுங்கை வட மாகாண கலாசாரத் திணைக்கள பணிப்பாளர் எஸ்.சிறிதேவி செய்திருந்தார். இறுதியில் மதகுருமார்களும் ஏமாற்றப்பட்டு வீடு திரும்பினர். அவர்களுக்கும் எதுவும் கொடுக் கப்படவில்லை.

ஜனாதிபதியின் கோப்பாய் வருகையை முன்னிட்டு பாதுகாப்பு பன்மடங்கு அதிகரிக்கப்பட்டிருந்தது. பருத்தித்துறை பிரதான வீதி இருபாலைச் சந்தியிலிருந்து கோப்பாய் சந்திவரை காலையிலிருந்து நண்பகல் வரை மூடப்பட்டிருந்தது. இதனால் பொது மக்கள் பல அசௌகரியங்களையும் எதிர்நோக்கினர்.

## யுத்தத்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கில் யுத்தத்தால் பாதிக் கப்பட்ட மக்களுக்கு உடனடித் தேவை என்னவென்பதை அரசு உணரவில்லை. மக்கள் சுகபோகம் அனுபவிக்கின்றனர் என எண்ணிக் கொண்டு, அரசு கிளிநொச்சியில் 325 மில்லியன் ரூபா செலவில் நவீன விளையாட்டரங்கை நிர்மாணிக்கத் திட்டமிட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்கள்இன்னும் அகற்றப்படவில்லை. அங்கு வாழ்ந்த மக்கள் இன்று வரை மீள் குடியமர்த்தப்படவில்லை - என்றார்.

வலி கிழக்கு பிரதேச சபை தேர்தல் -2011
வேட்பாளர் நல்லதம்பி கந்தையா
ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் (கல்வி)
இலங்கைத் தமிழரசுக் கட்சி
விருப்பு வாக்கு இல 19

வாக்காளப் பெருமக்களே!
தமிழ் இனத்தின் விடுதலை
சமூக அபிவிருத்திப் பணி
தாயகத்தின் சக வாழ்வு
இவற்றை முன்னெடுத்துச் செல்ல ஒன்று சேர்ந்து எனது விருப்பு இலக்கம் 19 இற்குப் புள்ளடியிட்டு என்னைத் தெரிவு செய்யும்படி அன்புடன் வேண்டிக் கொள்கின்றேன்.
ஒருங்கிணைந்து பிரதேச அபிவிருத்திக்கு உழைப்போம்
(5835) (39)

விற்பனைக்கு
பேக்கரி உபகரணங்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
0778689661
0214921308



உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 768 திகதி 18-07-2011
வெற்றி எண்கள்
16 23 58 64 F (ஆங்கில எழுத்து)
ஜக்பொட் பரிசு ரூ. 10,202,660/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
| --- | --- | --- | --- |
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 10,202,660/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 01 | 400,000/= | 400,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 15 | 50,000/= | 750,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 346 | 1,000/= | 346,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 604 | 1,000/= | 604,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 15735 | 60/= | 944,100/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8095 | 40/= | 323,800/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 206025 | 20/= | 4,120,500/= |
| ஆங்கில எழுத்து | 29930 | 20/= | 598,600/= |
| | | மொத்தம் ரூ. | 8,087,000/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூ.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
| --- | --- |
| பொலன்னறுவை | 600366682-1-41 |
| திருகோணமலை | 600374772-4-04 |
| மாத்தறை | 600362284-6-06 |
| குருநாகல் | 600361402-9-19 |
| வவுனியா | 600380941-0-00 |
| காலி | 600378988-4-44 |
| கொழும்பு | 600369661-9-39 |
| கம்பஹா | 600378057-2-22 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 8,487,000/=
இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட
ரூ. 10,605,340/=
2011 ஜூலை 21 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு-02
தொ.பே: 2333546/7
Enriching Your Life
Development Lottery

SIBM
100% VISA உத்தரவாதத்துடன்
ஐரோப்பிய நாடான போலந்துக்கான Student Visa
சைப்பிரஸ் Student Visa-ஆகக்குறைந்த தகைமை A/L 3 பாடத்தில் சித்தி
ஆகக்குறைந்த கல்வித் தகைமை O/L
வயதெல்லை கிடையாது

இப்பொழுதே பதிவுகளை மேற்கொள்ளுங்கள்
September Intake
#83/1 A, Penniquck Lane, Wellawatta
Tel : 0117546540,0117546542

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வடக்கில் சுதந்திரமான தேர்தலை நடத்த அரசு முன்வர வேண்டும்

*உள்ளதைச் சொல்வேன், சொன்னதைச் செய்வேன்; வேறொன்றும் தெரியாது. உள்ளத்தில் இருப்பதை வார்த்தையில் மறைக்கும் கபடம் தெரியாது. நன்றியை மறந்தால் மன்னிக்க மாட்டேன் பார்வையில் நெருப்பாவேன்-* என்ற கவிஞர் கண்ணதாசனின் கவிதை வரிகளுக்கு 'படிக்காத மேதை' என்ற திரைப்படத்தில் தத்ரூபமாக நடித்த நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் பத்தாவது நினைவு நாள் நாளையாகும்.

இந்தப் பத்தியில் அந்தப் பாடல் குறித்துக் குறிப்பிடுவது எந்த வகையிலும் பொருத்தம் இல்லையே என்று நீங்கள் எண்ணக் கூடும். யாழ்ப்பாணத்துக்குத் தேர்தல் பிரசாரம் செய்வதற்கு வருகை தந்துள்ள ஜனாதிபதி, வேலணையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய வேளை, சொன்னதைச் செய்வேன்; செய்வதையே சொல்வேன். நீங்கள் என்னை நம்பலாம் - என்ற வரிகளைக் கூறியதாக வெளியான தகவலைப் படித்த போதே, நடிகர் திலகம் சிவாஜிகணேசனும், கண்ணதாசனும் மனதில் நிழலாடினர்.

உங்கள் உரிமைகள் உங்களிடமே இருக்க வேண்டும். அவற்றை யாரும் பறிக்க முடியாது. அது மிக முக்கியம். ஜனநாயகம் இப்போது பாதுகாப்பாக உள்ளது. அது இன்றும் என்றும் பாதுகாப்பாகவே இருக்க வேண்டும்-

இனி வரும் காலங்களில் உங்கள் பிரதேசம் பின்தங்கிய பிரதேசமாக இருக்க முடியாது. அதுதான் எமது தேவையும் நோக்கமும். வட பகுதியில் அபிவிருத்தி வேலைகள் வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன- என்றும் ஜனாதிபதி தமது பேச்சில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஜனாதிபதி தனது பதவிக்காலத்தை கடந்த வருடம் நவம்பர் மாதம் பத்தொன்பதாம் திகதி பொறுப்பேற்ற போது நாட்டுமக்களுக்கு ஆற்றிய உரையில் அவர் குறிப்பிட்ட அம்சங்களும் இந்த வேளை ஞாபகத்தில் கொள்ளத்தக்கவை.

அவை:

★நாம் அபிவிருத்தியை நோக்கி மனிதாபிமான உணர்வுடனேயே பயணிக்க வேண்டும். எமது தாய்நாடு இலங்கை. அதனை மிகவும் பொறுப்புடன் பாதுகாக்க வேண்டிய கடமை எம் அனைவருக்கும் உண்டு. நாம் எல்லோரும் இலங்கையர்கள். இங்கு எல்லோருக்கும் சம உரிமை இருக்க வேண்டும். அதுதான் எமது தேவை.

★பயங்கரவாதத்தின் பிடியில் சிக்குண்டிருந்த வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இன்று விடுவிக்கப்பட்டு அங்கு வரலாற்றில் இல்லாத பல அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுகின்றன. இன்று வடக்கில் மக்கள் சுதந்திரமாக வாக்களித்துள்ளனர். அதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது - என்பனவாகும்.

ஜனாதிபதி தமது வேலணைப் பேச்சில்- உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான தேர்தல் பரப்புரையில் -

-உங்கள் உரிமைகள் உங்களிடமே இருக்க வேண்டும். அவற்றை யாரும் பறிக்க முடியாது - என்று தெரிவித்துள்ளார்.

அர்த்த புஷ்டியுள்ள அந்தக் காத்திரமான நிலை, இலங்கையில் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் நடைமுறையில் உள்ளதா என்ற பென்னம் பெரிய கேள்வி பூதாகரமாக எழுந்து நிற்கிறது.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளில் மிகப் பெரும்பான்மையானவை சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த அரசுகளால் பகுதி பகுதியாகவும், பிரிவு பிரிவாகவும் பிடுங்கி எடுக்கப்பட்டுவிட்டன.

இந்தியாவின் அனுசரணையோடு உருவாக்கப்பட்ட அரசமைப்புச் சட்டத்துக்கான பதின்மூன்றாவது திருத்தத்தில் வழங்கப்பட்ட காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம், நிர்வாக அதிகாரம் என்பன, மஹிந்த அரசுக்கு நாடாளுமன்றில் உள்ள அதீத வாக்குப் பலத்தால் சில மாதங்களுக்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட பதினெட்டாவது திருத்தத்தின் மூலம் மொத்தமாகக் கபளீகரம் செய்யப்பட்டு விட்டன.

அவ்வாறிருக்க, உங்கள் உரிமைகள் உங்களிடமே இருக்க வேண்டும். அவற்றை யாரும் பறிக்க முடியாது என்று 'காதல்' மொழி பேசுவது எந்த அளவுக்குப் பொருத்தமானது? யாழ்ப்பாணத்தில் வைத்து தமிழில் சொல்லிவிட்டதால் அது எல்லாமே அமாவாசை இருட்டின் நிழலில் மறைந்து விடாது.

கிராமங்களில் புதிய ஒளி பிறந்துள்ளதான ஒப்புவமை வடக்குக்குச் சிறிதும் பொருந்துமா என்ற கேள்வி இன்னொரு பக்கம். போரினால் பாதிக்கப்பட்ட மக்கள், மீளக் குடியமர்ந்த மக்கள் தமது முந்திய நிலைக்குத் திரும்புவதற்கு இன்னும் பல வருடங்கள் செல்லும் என்ற யதார்த்த நிலையில் -

வடக்கின் கிராமங்களில் புதிய ஒளி இப்போது வீசும் என்று எதிர் பார்ப்பது கட்புலன் இல்லாதவன் யானையைத் தடவிப் பார்த்த கதையாகவே அமையும்!

தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைகளை வழங்குவதில் சாக்குப் போக்குகள் கூறிக் காலத்தை வாங்கி வரும் அரசு, அபிவிருத்தி என்ற போர்வையைக் காட்டி, தமிழ் மக்களின் உரிமையை வழங்கும் தனக்குள்ள தவிர்க்க முடியாத பணியைத் தட்டிக்கழித்து வருகிறது; அது மிகவும் துலாம்பரமானது.

இதனை வடக்கு மக்கள் - வாக்காளர்கள் - நன்கு அறிவர். அதனால் ஜனாதிபதியின் தேர்தல் பிரசாரம் அவர்களின் முடிவில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தாது.

சனிக்கிழமை நடைபெறவுள்ள தேர்தல் சுதந்திரமாகவும் வன் செயல்கள், மோசடிகள் இல்லாமலும் பாரபட்சமற்ற வகையிலும் நடந்தேறினால், தமிழ் மக்களின் உண்மையான உணர்வுகள் வெளிப்படுவதைக் காணலாம்.

அதனை நாடி அரசும், தேர்தல் திணைக்களமும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்புள்ள பொலிஸாரும் இணைந்து செயற்பட வேண்டும். அந்தப் பொறுப்புச் சரியாக நிறைவேற்றப்படுவதை அரசும், அதன் தலைமைப் பீடமும் உறுதி செய்ய வேண்டும். எதிர்பார்க்கலாமா?

# குடாநாட்டில் அவசரமாக வீதிகளை புனரமைக்க மேலதிக தொழிலாளர்

## 10 வாகனங்களில் தார்க் கலவை வந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ். மாவட்டத்தில் தற்போது அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்டுவரும் வீதிப் புனரமைப்புப் பணிகளுக்கென வெளி மாவட்டங்களில் இருந்து மேலதிக தொழிலாளர்கள் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் பணியாற்றும் தொழிலாளர்களே இவ்வாறு இங்கு அழைத்துவரப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் நீண்ட காலமாகச் சேதமடைந்திருந்த வீதிகளைத் தார்க் கலவை போட்டுச் சீரமைக்கும் பணிகள் அவசர அவசரமாக - படுவேகமாக நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 23 ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

படுவேகமாக நடைபெற்றுவரும் இந்தப் பணிகளுக்காக வெளி மாவட்டங்களில் இருந்து மேலதிக தொழிலாளர்கள் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

சிறிய வீதிகள், பெரிய வீதிகள் என்று பாராமல் அனைத்து வீதிகளும் அமர்க்களமாகப் புனரமைக்கப்படுகின்றன. ஜனாதிபதியும், அமைச்சர்களும் யாழ்ப்பாணத்தில் முகாமிட்டுள்ள வேளையில் வீதிகளைப் புனரமைப்பதிலும் அதிக ஆர்வம் காட்டப்படுகிறது.

அவசர அவசரமாகப் புனரமைக்கப்படும் வீதிகளை அமைச்சர்களும் அவசரமாகத் திறந்துவைக்கின்றனர்.

இந்த வீதிப் புனரமைப்புப் பணிகளுக்காக 10 கனரக வாகனங்களில் தெற்கில் இருந்து தார்க் கலவை யாழ்ப்பாணத்துக்குக் கடந்த சனிக்கிழமை எடுத்துவரப்பட்டது. (த-26)

# வவுனியாவை வந்தடைந்த புற்றுநோய் நடை பவனி

வலிவடக்கு,ஜூலை 20

தம்புத்தேகமவில் இருந்து அனுராதபுரம் வரையான பயணத்தின் போது இலங்கைக் கிரிக்கெட் அணியின் அணித்தலைவர் திலகரட்னா டில்சானும் கலந்துகொண்டார்.

நடைபாதை ஊர்வலத்தின்போது பொது மக்கள் பலரும் மாணவர்களும் வீதிக்கு வீதி நின்று முண்டியடித்துக்கொண்டு தம்மாலான நிதியுதவிகளைச் செய்துள்ளனர்.

சிறுவர் புற்று நோயாளர்களின் நன்மை கருதி முழுமையான வசதிகளைக் கொண்ட புற்று நோயாளர் வைத்தியசாலை ஒன்றை யாழ். மாவட்டத்தில் நிர்மாணிப்பதற்கான நிதி சேகரிக்கும் முகமாக மாத்தறை தேவேந்திரா வெளிச்ச வீட்டில் இருந்து ஆரம்பமாகிய நடைப்பயண 'ரெயில்' அணியினர் நேற்று வரை சுமார் 403 கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்துள்ளார்கள். நிதியாகத் திரட்டும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த நடை யாத்திரைக்கு பலரும் உதவிகளை வழங்கி வருவதாக நடை பாதை யாத்திரையை மேற்கொண்டுள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.

19 நாள்களைக் கடந்துள்ள அணியினர் நேற்று அதிகாலை மதவாச்சியில் இருந்து புறப்பட்டு 28 கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்து வவுனியா நகர மணிக்கூட்டுக் கோபுரத்தை அடைந்து அங்கு தரித்துள்ளனர்.

இன்று புதன்கிழமை 20ஆம் நாள் அதிகாலை 5.30 மணிக்கு வவுனியா நகர மணிக்கூட்டுக் கோபுரத்தில் இருந்து தமது பயணத்தைத் தொடங்கும் அணியினர் 28 கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்து புளியங் குளத்தை அடைந்து தங்கவுள்ளார்கள்.

இந்த நடை பாதைப் பயண அணியில் 15 முதல் 20 பேர் வரை தொடர் பயணத்தில் ஈடுபடுவதுடன் இந்த முயற்சிக்கு ஆதரவு தெரிவித்து நாளாந்தம் 200 முதல் 250 பேர் வரையான தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் தம்முடன் இணைந்து குறிப்பிட்ட தூரம் வரை நடந்து வருவதுடன் நிதியுதவிகளும் கிடைத்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர். (ஐ-86)

# ஜனாதிபதியின் வருகைக்காக கோப்பாயில் இரவோடு இரவாகத் திருத்தப்பட்ட பாலம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

கோப்பாய் நாவலர் மகாவித்தியாலயத்துக்கு முன்னால் உள்ள பாலத்தின் அணைக்கட்டை புனரமைக்கும் பணிகள் இரவோடு இரவாக துரித கதியில் நடைபெற்றன.

நவீன இயந்திரங்களின் உதவியுடன் இந்த அணைக்கட்டு புனரமைக்கும் பணிகள் இரு நாள்களாக இடம்பெற்றன.

கோப்பாய் நாவலர் மகா வித்தியாலயத்தின் கட்டடத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுத் திறந்து வைத்தார்.

ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு பாடசாலைக்கு முன்னால் உள்ள இந்தப் பாலத்தைத் திருத்தியமைக்கும் பணிகள் இரவோடு இரவாக மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-26)

# தென்மராட்சியில் இன்று 5 கட்டடங்கள் திறப்பு

## உள்ளூராட்சி அமைச்சர் பங்கேற்பார்

யாழ்ப்பாணம், ஜூலை 20

தென்மராட்சி கல்வி வலயத்தில் மத்திய அமைச்சின் இடைநிலைக்கல்வி அபிவிருத்தி செயல் திட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட 5 புதிய கட்டடங்களைத் திறந்து வைக்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை இடம் பெறவுள்ளது.

தென்மராட்சி கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் இந்திக்க பண்டார நாயக்க பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு புதிய கட்டடங்களைத் திறந்துவைப்பார்.

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம் ஆகியவற்றின் கணினி செயற்பாட்டறைகளையும் மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம் நாவற்குழி மகாவித்தியாலயம் ஆகியவற்றின் விஞ்ஞான ஆய்வுகூடங்களையும் சாவகச்சேரி ஹென்ஸ்மன் வீதியில் 16 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட தென்மராட்சி கல்வி வலயத்தின் புதிய அலுவலகத்தையும் உள்ளூராட்சி அமைச்சர் இன்று திறந்துவைப்பார்.

இந்த நிகழ்வில் மேல்மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் நிமால் உட்பட மாகாண கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொள்வர். (த-207-313)

# பரந்தன் விதை உற்பத்தி பண்ணை நாளை திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகவர் அமைப்பின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்ட பரந்தன் விதை உற்பத்தி பண்ணை நாளை வியாழக்கிழமை அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவினால் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் விவசாய அமைச்சர் மஹிந்த யாப்ப அபேவர்த்தன, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (த-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழிக் குஞ்சு விநியோகம்

தரமான No.1 Prima பேட்டுக்குஞ்சுகள், புறொயிலர் கோழிக்குஞ்சுகள் Prima கொம்பனி உத்தரவாதத்துடன் நியாயமான விலையில் 21.07.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

- ★ சூட்டிபாம் சென்ரர் - 0778996085
- ★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
- ★ நெல்லிபடி பல்பொருள் விற்பனை நிலையம் - 0774656377
- ★ நல்லூர் பாம் சென்ரர், பருத்தித்துறை -0771392593
- ★ நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி - 0776225944

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர். 021 222 6944

## காணி விற்பனைக்கு

ஊரெழு கிழக்கில், ஊரெழு கரந்தன் வீதிக்கு அருகில் 47 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்குண்டு.
மொத்தக் காணியாகவோ/ பகுதியாகவோ கொள்வனவு செய்யலாம்.

தொடர்புகளுக்கு-
செ.புஷ்கரதன், சிவன்வீதி, உரும்பிராய் கிழக்கு,
தொலைபேசி இலக்கம்-
0775484695, 0217914433

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல்- 2011-ஜூலை-23

வலி. வடக்கு பிரதேச சபை, இலங்கை தமிழரசுக் கட்சி [தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு]



திரு.கெங்காசுதன் பிரதீபன்(B.Com)
(செயலாளர் V.D.O)

எம்மினத்தின் நிலையை உணர்ந்து, சிந்தித்துச் செயலாற்றும் வலி. வடக்குப் பிரதேச மக்களே!

உரிமைக்கு வீடு — சேவைக்கு தீபன்

8

(தமிழ்த் தேசியம் நிலைத்து நிற்க இளைய தலைமுறைக்கு ஆதரவுதாரீர்!)

## உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்-2011

வலி.தெற்கு பிரதேச சபை



தவிர்க்கமுடியாத தார்மீக வாக்கு

வெற்றியை நோக்கிய விருப்பு வாக்கு

வலி. தெற்கை வளப்படுத்த இளம் வேட்பாளரைத் தேர்ந்தெடுப்போம்.

தியாகராசா பிரகாஷ்
ஆசிரியர்-ஸ்ரார் கல்வி நிலையம்,
சுன்னாகம், ஏழாலை.

இலங்கைத் தமிழரசுக் கட்சி
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு


ஏழாலை வாழ் மக்கள். (5840)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தேர்தல்

23.07.2011 சனிக்கிழமை

வேட்பாளர்-
சரவணமுத்து கனகரசன்
[ஓய்வுபெற்ற நில அளவையாளர் நாயகம்]

இலங்கைத் தமிழரசுக் கட்சி வேட்பாளர்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



உங்கள் வாக்குகளினால் ஒற்றுமையைக் காப்போம்.

19

# நல்லூர் - பிரதேச சபைத் தேர்தல்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வீடு சின்னத்தில் போட்டியிடும் என்னைப் பெருவாரியான வாக்குகளால் வெற்றிபெறச் செய்யுமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

- ஊழலற்ற நிர்வாகம்
- நிலைத்து நிற்கும் அபிவிருத்தி
- உறுதியான தமிழ்த் தேசியம்

இவையே என் வாக்குறுதிகள்

3

திருமதி. கோமதி ரவிதாஸ்

## கண்ணீர் அஞ்சலி

கச்சேரி நல்லூர் வீதி, பாணன் குளம் நாச்சியம்மன் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ சு.யோகீஸ்வர சர்மா அவர்களின் மாமியும் உதவி ஐயா நமணி அவர்களின் தாயுமாகிய

திருமதி
ஹரிஹரசாஸ்திரி
தெய்வானைஅம்மா

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலய பரிபாலன சபை.
பாணன்குளம் நாச்சியம்மன்கோயில்.
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.


## மலிவு விற்பனை

குளிர் சாதனப் பெட்டிகள், Sony Wegaflat T.Vகள் AR 25"-16,000/=,HW,BZ (மேல்பட்டன்+ரேடியோ)-18,000/= TG 21"-14,000/=, G2Q11-11,000/= ,130X,அம்பிளி பயர் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
0770440570,0778449829

R.மகேஸ்வரன் (அப்பனக்கொம்பனி)
ஆரம்பப் பாடசாலை அருகில்(சீவிப்புலியா), K.K.S வீதி, இணுவில்.

## வலி. வடக்குப் பிரதேச சபைத் தேர்தல்- 2011



இது நமது தனித்துவ இன அடையாளத்தை உலகுக்கு உறுதிப்படுத்தும் தேர்தல்...

- ★ நமக்காக-நம் வாழ்வுரிமைக்காக மரணித்தோருக்கு கௌரவமளிக்கும் தேர்தல்.
- ★ விதையாய் வீழ்ந்தாலும் விருட்சமாய் எழுவோம் என உலகுக்கு ஓங்கி உரைக்க வைக்கும் தேர்தல்.
- ★ தீர்க்கமாக முடிவெடுங்கள்... தமிழராய் நிமிர்ந்தெழுங்கள், வலிதந்தோரைத் தோற்கடியுங்கள்.

தேவையறிந்து சேவையாற்றும் ஒருவன்
சண்முகலிங்கம் சஜீவன் -B.Sc.
அவர்களுக்கு வாக்களியுங்கள்.

21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு-
இலங்கை தமிழரசுக் கட்சி

வலி. வடக்கு தமிழ்த் தேசிய ஆதரவாளர்கள்- (5834)

## விற்பனைப் பிரதிநிதி தேவை

Turkey BRAND MARGARINE

கொழும்பைத் தலைமையகமாகக் கொண்ட
EAST WEST Marketing (Pvt) Ltd.

இற்கு விற்பனைப் பிரதிநிதியாக சேர்வதற்கு விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. இவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களில் தொழில் செய்யக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.

தகைமை-
கா.பொ.த. பரீட்சை. [O/L]

மேலதிக தகைமை-
ஆங்கிலம்/ சிங்களம் கதைக்கக் கூடியவர்களுக்கு முன்னுரிமை

தொடர்பு- 0773082919

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை கண்காணிக்க வருகின்றனர் மனித உரிமைகள் ஆணைக்குழுவினர்

யாழ்ப்பாணம், ஜூலை 20

எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவிருக்கும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கண்காணிப்புக்குழு ஒன்று நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றது.

வடக்குத் தேர்தல்களில் வன்முறைகள் அதிகரித்துள்ளதால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கண்காணிப்புக்குழு ஒன்றை அனுப்புமாறு 'பவ்ரல்' அமைப்புக் கோரிக்கை விடுத்தது.

இந்தக் கோரிக்கையை ஆராய்ந்த ஆணைக்குழு, கண்காணிப்புக்குழு ஒன்றை அனுப்புவதற்கு நேற்று முடிவு செய்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடவிருக்கும் 'பவ்ரல்', 'கபே' போன்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளும் மனித உரிமை ஆணைக்குழுப் பிரதிநிதிகளும் நேற்றுமுன்தினம் கலந்துரையாடியதன் பின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (ஒ-ஐ)

# நாகர்கோயில் தெற்கு, மேற்கில் 21 ஆம் திகதி மக்கள் மீள்குடியமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 20

நாகர்கோயில் மேற்கு, தெற்கு பகுதிகளில் நாளை வியாழக்கிழமை மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதற்கான அனுமதியைப் படைத்தரப்பினர் வழங்கியுள்ளனர். இது தொடர்பாக மருதங்கேணிப் பிரதேச செயலர் எஸ். திருலிங்கநாதன் தெரிவிக்கையில் நாகர்கோயில் மேற்கு, நாகர்கோயில் தெற்குப் பகுதிகளில் பொதுமக்கள் மீள்குடியமர அனுமதி வழங்கப்பட்டது.

இந்த மீள்குடியமர்வு நாளை வியாழக்கிழமை இடம்பெற உள்ளது. இந்தப் பகுதியில் குடியமர்வதற்கு 233 குடும்பங்களை சேர்ந்த 834 பேர் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர் என்றார். (த-319)

## கௌரவம்...



**சாதனைகளுக்காக:** இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஒன்று கூடலும் சாதனையாளர் கௌரவிப்பும் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பொலிஸ் பயிற்சிக் கல்லூரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல். நோயல் பிரான்சிஸ், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஐ.ஒ.எம்.யாழ்.அலுவலக சிரேஷ்ட திட்ட இணைப்பாளர் ரி.யூறிசன், கல்லூரி அதிபர் அருட்திரு ஜே.ஏ.ஜேயசுதாஸ், பழைய மாணவர் சங்கத் தலைவர் பேராசிரியர் பு.ரவிராஜன் ஆகியோர் 'பான்ட்' வாத்திய அணிவகுப்புகளுடன் அழைத்துவரப்படுகின்றனர்.

# ஜனாதிபதியின் பிரசாரக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டு ஏமாற்றப்பட்ட மக்கள்

## உதவிப் பொருள்கள் வழங்குவதாகக் கூறியே ஏற்றிச் செல்லப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஜூலை 20

உதவித் திட்டங்கள் வழங்கப்படுவதாகக்கூறி அழைத்துச் செல்லப்பட்ட மக்கள் இறுதியில் எதுவித உதவிப்பொருள்களும் வழங்கப்படாததால் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

ஜனாதிபதி மஹிந்த கலந்துகொண்ட வேலணை நிகழ்விலேயே இவ்வாறு மக்கள் அழைத்துச் செல்லப்பட்டு ஏமாற்றப்பட்டுள்ளனர்.

மனைப்பொருளாதார அபிவிருத்தித் திட்ட சமுர்த்திப் பயனாளிகளே இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டனர். சமுர்த்தி அலுவலர்களும், கிராம அலுவலர்களும் இவர்களை அழைத்துச் செல்லும் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

இவர்கள் அனைவரும் ஜனாதிபதியின் பிரசாரக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டு இறுதியில் எதுவித பொருள்களும் வழங்கப்படாமல் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகளைத் தொடர்புகொண்டுகேட்டபோது -

மக்களை உதவிப்பொருள்கள் வழங்கப்படும் என்று கூறி அழைக்க வேண்டாம் என்று அமைச்சரினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாகத் தெரிவித்தனர். அத்துடன் இந்தப் பிரசாரக் கூட்டத்தில் அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இலங்கைப் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான 48 பேருந்துக்கள் மக்களைக் கூட்டத்துக்கு ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டன. (த-15-250)

# அனைத்து மதுபான நிலையங்களும் தேர்தல் தினத்தன்று மூடப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 20

தேர்தல் தினத்தை முன்னிட்டு யாழ்.குடாநாட்டிலுள்ள சகல மதுபான சாலைகளும் மூடப்படவேண்டும் என யாழ்.மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி என்.கிருபாகரன் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத்தேர்தல் தினத்தன்று எந்தவித இடையூறுகளும் ஏற்படாத வகையில் சகல மதுபானசாலைகளையும் மூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலை மீறி மதுபானசாலைகளைத் திறந்து விற்பனையில் ஈடுபடும் உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் அன்றைய தினம் கள்ளுத் தவறணைகளும் திறக்கப்படமாட்டாது. மதுப்பிரியர்களும் இதனைக் கவனத்தில் எடுக்கவேண்டும் என யாழ். மதுவரித் திணைக்களத்தின் அதிகாரி மேலும் தெரிவித்தார். (த-313)

# தமிழ்த்தினப் போட்டியில் சென்.ஜோன்ஸ் முதலிடம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

அகில இலங்கை ரீதியில் 2011 ஆம் ஆண்டுக்கான தமிழ்த் தினப் போட்டியில் வில்லுப்பாட்டில் சென்.ஜோன்ஸ் கல்லூரி முதலிடம் பெற்றுள்ளது.

கடந்த மூன்று நாள்களாகக் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் போட்டிகள் நடைபெற்றன. அகில இலங்கை ரீதியில் இடம்பெறும் இந்தப் போட்டியில் இரண்டாவது தடவையாகவும் சென்.ஜோன்ஸ் முதலிடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# பண்ணை - குறிகாட்டுவான் வீதிக்கு விரைவில் 'காப்பெற்'

யாழ்ப்பாணம், ஜூலை 20

பண்ணை வீதியைக் 'காப்பெற்' வீதியாக மாற்றியமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தீவுப் பகுதிக்கான பிரதான வீதியாக உள்ள பண்ணை வீதியை குறிகாட்டுவான்துறை வரை காப்பெற் வீதியாக மாற்றியமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர்மேலும் கூறுகையில்:

சுமார் 40 கிலோ மீற்றர் நீளம் கொண்ட இந்தப் பண்ணை-குறிகாட்டுவான் வீதியைக் 'காப்பெற்' வீதியாக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

போக்குவரத்து நெரிசல் அதிகம் கொண்ட இந்த வீதியால் பயணிக்கும் வாகனங்கள் பெரும் சிரமப்பட்டே பயணிக்க வேண்டியுள்ளது.

இதனால் இந்த வீதிக்கு விரைவில் காப்பெற் போடப்படவுள்ளது - என்றார்.

இதேவேளை, பண்ணைச் சந்தியில் இருந்து மேற்கொள்ளப்பட்டு வரும் வீதி அகலிப்புப் பணிகள் மந்த கதியிலேயே நடைபெறு வதாகத் தெரிவிக்கப்படுகின் றது. (த-26)

# தமிழரின் தாயக பூமியை ஆள்வதற்கு சிங்களக் கட்சிக்கு என்ன அருகதை ?

## சாவகச்சேரிக் கூட்டத்தில் சரவணபவன் எம்.பி.கேள்வி



யாழ்ப்பாணம், ஜூலை 20

தமிழர்களின் தாயகபூமியை ஆளவும் அதிகாரம் செய்யவும் தென்னிலங்கை சிங்களக் கட்சிக்கு என்ன அருகதை இருக்கிறது? தமிழர்களின் தன்மானத்தை அடைவு வைத்து தமிழ்த் தாயகத்தைக் காட்டிக் கொடுக்கும் டக்ளஸை ஆதரிக்கலாமா?

யாழ்.மாவட்டத்தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

நேற்று முன்தினம் சாவகச்சேரியில் நடைபெற்ற கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய சரவணபவன் எம்.பி. மேலும் கூறியதாவது :

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் 16 பிரதேச சபைகளுக்கும் மூன்று நகர சபைகளுக்கும் போட்டியிடுகின்றனர். இந்தத் தேர்தலில் போட்டியிடும் ஒரே ஒரு தமிழ்க் கட்சி தமிழ் தேசியக்கூட்டமைப்பு மட்டுமேதான்.

தென்னிலங்கைப் பேரினவாதக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு என்ற பெயரில் வந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்தே தமிழ் இன ஒழிப்பில் தீவிரமாகச் செயற்பட்டார்கள்.

தமிழ் இனத்துக்கு இவர்கள் செய்த துரோகத்தையும் இனப்படுகொலைகளையும் எம் மக்கள் இன்னும் மறந்துவிடவில்லை.

இவர்கள் தான் இன்று யானையிலும், வெற்றிலையிலும் போட்டியிடுகின்றனர். இந்த இனவாதக் கட்சிகளை நாம் நம்பலாமா? சாதாரண உள்ளூராட்சி சபைக்கான தேர்தலை அரசு ஒரு பெரிய் யுத்தம் போல் ஊதிப் பெரிதாக்கி விட்டது.

கொழும்பில் இருந்து அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளனர்.

இப்பொழுது ஜனாதிபதியும் களம் இறங்கிவிட்டார்.படை பரிவாரங்களுடன் பெருந்தொகையான பஸ்களும் கொண்டு வரப்பட்டுள்ளன.

ஜனாதிபதி செல்லும் இடங்களுக்கெல்லாம் ஒவ்வொரு கிராம சேவகரும் சமுர்த்தி அதிகாரிகளும் தலா 10 பேர் வீதம் கட்டாயமாக அழைத்து வரவேண்டும்.

நகரசபை, பிரதேச சபை உத்தியோகத்தர்கள் தமது அன்றாடக் கடமைகளை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு தேர்தல் கூட்டங்களுக்கு ஆள் திரட்டி வரவேண்டும் என கடுமையான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அரச அலுவலகங்கள் எல்லாம் வெறிச்சோடிக் கிடக்கின்றன. தமிழ் மக்களுக்கும் அரசுக்கும் இடையிலான ஒரு சாவாலாகவே இந்தத் தேர்தல் காணப்படுகின்றது.

தமிழனின் தன்மானமா? அல்லது தமிழ் அன்னைக்குச் செய்யும் துரோகமா? என்ற கேள்விக்கு விடை காணும் பொறுப்பு தன்மானத் தமிழர்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றார். (த-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூராட்சித் தேர்தல் - 2011
வலி. வடக்குப் பிரதேச சபை



தமிழர் தம் உரிமைக்கு வீடு

25 X X

சேவைகள் தொடர
செல்லத்துரை கமலநாதன்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## சொற்பொழிவு

வடமராட்சி, ஜூலை 20

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த ஆன்மிக நிகழ்வு வரிசையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ''தேவி பாகவதம்'' என்னும் தலைப்பிலான தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

இந்தத் தொடர் சொற்பொழிவை வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ. குமாரவேல் நிகழ்த்துவார்.

(ச-236-78)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் - 2011
பருத்தித்துறை பிரதேச சபை
அரசியல் களத்துக்குள் கல்விமான்களை வரவேற்போம்.
கல்வியின் குரல் ஒலித்திட பிரபல பொருளியல் ஆசிரியர்
மா. குலசிங்கம் அவர்களை
வீட்டுக்கு நேரே வாக்குப் போட்டு ஆதரியுங்கள் இல. 9
99 X X
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)
ஆசிரியப் பெருந்தகையின் மாணவர்கள்

# 40 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

HAPPY



20.07.2011
BIRTH DAY

மூக்கம்பிட்டி, கோவளம்,
காரைநகரைச் சேர்ந்த
சிவஞானம் - பரமேஸ்வரி
தம்பதியரின் செல்வப் புதல்வன்
**சிவஞானம் ரவிச்சந்திரன்**
இன்று (20.07.2011) புதன்கிழமை
தனது 40 ஆவது பிறந்தநாளை தனது
இல்லத்தில் கொண்டாடுகின்றார்.
இவரை இறைவன் ஆசியுடன்
பல்லாண்டு இனிது வாழ
வாழ்த்துகின்றோம்.

மூக்கம்பிட்டி,
கோவளம், காரைநகர்.
0773193607

யது ரான்ஸ்போட் ஊழியர்கள்.

# எம் குல விளக்கின் ஓராண்டு நீங்கா நினைவலைகள்

மண்ணில்
18 ★ 04 ★ 1937



விண்ணில்
20 ★ 07 ★ 2010

## அமரர் கனகசபை செல்லக்கண்டு

அப்பா என்ற எங்கள் குலவிளக்கு ஒளி
இழந்து விட்டதால் - எங்கள்
குடியோ ஒளி இழந்து வாடித் தவிக்குதப்பா
அப்பா நீங்கள் இல்லை என்று நினைக்கையில்
எம் உதிரம் கொதிக்குதப்பா - எங்கள்
இதயமோ நின்று விடும் போல் துடிக்குதப்பா
அப்பா நீங்கள் ஊருக்கே காவல்
தெய்வமப்பா அப்பா நீங்கள்
பார் போற்ற வாழ்ந்து விட்டு - எம்மை
எல்லாம் பரிதவிக்க விட்டு விட்டு
எங்கு அப்பா சென்று மறைந்தீர்கள்
அப்பா உங்களுக்கு மாட்டு வண்டில் தான்
எமன் என்று அறியாமல் இருந்து
விட்டோம் அப்பா
ஈரேழு ஜென்மம் எடுத்தாலும் உங்களைப்
போல் ஒருவர் எமக்கு அப்பாவாக கிடைப்பாரா?
கோடி ஜென்மம் எடுத்தாலும் அப்பா
உங்கள் நினைவலைகள் எம்
நெஞ்சை விட்டகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய நொச்சியம்
பதியானையும், தேரிய வளைப்பதியானையும்
வேண்டி நிற்கும்

அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# பாராட்டி வாழ்த்துகிறோம்



திரு.இ.ஐங்கரன்



திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா

சுசையப்பர் கோயிலடி மணியம் கிராமத்தைச் சேர்ந்த மக்களாகிய
எங்களுக்கு கௌரவ அமைச்சர்
திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தாவினூடாக
பதினைந்து வீட்டுத் திட்டங்களைப்பெற்றுத் தந்தமைக்காக
திரு.இ.ஐங்கரன் அவர்களையும், கௌரவ அமைச்சரையும்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**மணியம் கிராம மக்கள், கோப்பாய்.**

# கொவிசெத

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் **816**
சீட்டிழுப்பு திகதி **18.07.2011**

எழுத்து: **T**

வெற்றி இலக்கங்கள்: **09 16 36 56**

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரு. 12,272,631.20 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரு. 1,000,000/= | 02 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரு. 20,000/= | 20 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரு. 2,000/= | 332 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரு. 1,000/= | 659 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரு. 100/= | 16845 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரு. 40/= | 9500 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரு. 20/= | 240048 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரு. 20/= | 37749 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை **11,343,440.00**

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு **ரூபா. 12,440,256.00**

வெற்றிப் பெறும் சீட்டுகள் மோதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**தேசிய லொத்தர் சபை**
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360
இணையதளம்: www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியனம் கேட்டீர்களா?

## இப்படியும் யோசிக்கலாம்!

தமிழ் நாட்டில் தேர்தல் வந்தால் சொல்ல வேண்டியதில்லை. அதிலும் திராவிட இயக்கங்கள் தங்களுக்குள் செய்யும் வசை பாடல்கள் 'குழாயடிச் சண்டை' போலத்தான் இருக்கும். தண்ணீர் இல்லாத இடங்களில் குழாய் நீர்வழங்கப்படும். அந்தக்குழாய் நீரைப் பெறுவதற்கு வந்திருப்பவர்கள்-குறிப்பாக, பெண்கள்- ஒருவரோடொருவர் பிடிக்கும் சண்டை போ குழாயடிச் சண்டையாகும். இங்கு தாராளமாக வசைமாரி பொழியப்படும். எவ்வளவு தரக்குறைவாகப் பேசமுடியுமோ அவ்வாறெல்லாம் பேசுவார்கள். ஒரு கட்டத்தில் தலைமயிரைப் பிடித்து ஆடத் தொடங்குவார்கள். ஏனையவர்கள் வேடிக்கை பார்த்தபடி தண்ணீரை மொண்டு சென்று விடுவார்கள். ஆக, முதலிலே தண்ணீர் பெறுவதற்குச் சண்டையை ஆரம்பித்தவர்கள் இறுதியாகவே தண்ணீரைப் பெறமுடியும். சிலவேளை தண்ணீரின்றியே செல்ல நேரிடும்.

ஒருமுறை தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு எதிராக ஒரு சுவரொட்டி அநாமதேயப் பேர்வழிகளால் ஒட்டப்பட்டிருந்தது. அதனை யார் அச்சிட்டு வெளியிட்டது என்ற விபரம் ஏதுமில்லை. மொட்டைக்கடிதம் போல இது மொட்டைச் சுவரொட்டி. தொண்டர்கள் அதைப்பார்த்து விட்டு ஆவேசத்துடன் கழகத்தின் தலைவர் கலைஞர் மு.கருணாநிதியிடம் வந்து விடயத்தைக் கூறினர். கலைஞர் அதைக் கேட்டு விட்டு, ஒரு சுவரொட்டியை கிழிக்காமல் பத்திரமாக எடுத்து வரும்படி தொண்டர்களுக்குக் கட்டளையிட்டார். அவ்வாறே சுவரொட்டியும் எடுத்து வரப்பட்டது. அந்தச் சுவரொட்டியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சின்னமான உதயசூரியன் வரையப்பட்டிருந்தது. அதை நோக்கி விளக்குமாறு ஒன்றை ஏந்தியவாறு பெண்ணொருவரின் படமும் வரையப்பட்டிருந்தது. அதாவது திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பெண்குலம் விரட்டியடிப்பதாக அந்தச் சுவரொட்டி அமைந்திருந்தது.

கலைஞர் மு.கருணாநிதி அந்தச் சுவரொட்டியை அன்று நடைபெறவுள்ள பிரசாரக் கூட்டத்துக்கு எடுத்துச் சென்று மேடையின் முன்பாகக் காட்சிப்படுத்தினார். உரையாற்ற எழுந்தார்,

"அன்பான கட்சிக்காரர்களே! ஆதரவாளர்களே! இந்தச் சுவரொட்டியைப் பாருங்கள் அதில் எமது தாயொருவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளை விளக்குமாறு வேண்டி நிற்கின்றார். எனவே, எமது கட்சியின் கொள்கைகளை விளக்குகிறேன்" என்று கூறி விளக்கமளித்தார்.

அண்மையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் ஒருவரது வீட்டு வாயிலில் ஒரு நாயைக் கொன்று, அதன் தலையைத் தொங்கவிட்டிருந்ததை ஊடகங்கள் வாயிலாகப் பார்த்தோம். அது 'நாய்க்கு நடந்த கதிதான் உமக்கும்' என்று சொல்வதற்காகச் செய்யப்பட்டது என்பதே பொதுவான அபிப்பிராயம்.

ஆனால் கலைஞர் போல அதை நேர் நிலையில் எடுத்துக் கொள்ளலாம் அல்லவா?

'அன்பான வாக்காளப் பெருமக்களே! நீங்கள் உங்கள் பொன்னான வாக்குகளால் என்னைப் போசித்தால் நான் இந்த நாயைப் போல நன்றியுடையவனாயிருப்பேன்! உங்கள் மேம்பாட்டுக்காக நான் உயிரையும் கொடுப்பேன்' என்று வேட்பாளர் கூறுவதாக இருக்கலாம் அல்லவா? அரசியல் ஒரு சாக்கடை என்று கூறுவார்கள். அதனால்தான் சாக்கடைக் கழிவுகளை 'வேட்பாளர்' வீடுகளில் எதிர்த் தரப்பினர் கொட்டுகின்றனரா? இந்தக் 'கழிவுகள்' எறிந்தவர்களின் வாக்குகளைக் கழிக்காமல் இருந்தால் சரி!

விழிச்சான் குஞ்சு.

# மக்களை ஏமாற்றும் முயற்சியில் அரசு தொடர்ந்து ஈடுபடுகிறது

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு



அரசு தமிழ் மக்களை ஏமாற்றும் முனைப்புக்களில் ஈடுபட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

மேற்குலக நாடுகளை மட்டுமன்றி சொந்த நாட்டு மக்களையும் ஏமாற்றும் முனைப்புக்களில் அரசு ஈடுபட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது, தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வுத் திட்டம் வழங்கப்படும் என்ற அரசின் வாக்குறுதிகளில் எவ்வித நம்பகத்தன்மையும் இல்லை.

ஏற்கனவே அரசால் நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுக்கள் எவ்வித தீர்வினையும் வழங்காத நிலையில் புதிய நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அமைப்பதில் எவ்வித பயனும் இல்லை.

அமைச்சர் திஸ்ஸ விதாரண தலைமையிலான சர்வ கட்சிப் பேரவையின் பரிந்துரைகள் இதுவரையில் பகிரங்கப்படுத்தப்படவில்லை.

இந்த நிலையில் புதிய நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அமைத்து அதன் மூலம் தீர்வு காணும் அரசின் முனைப்பு தமிழ் மக்களையும் அரசியல் கட்சிகளையும் மற்றுமொரு முறை ஏமாற்றும் முயற்சியாகவே கருதப்பட வேண்டும்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கும் திட்டமானது காலத்தை வீணடிக்கும் முயற்சியாகவே நோக்கப்பட வேண்டும்.

வடக்கு, கிழக்கில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த அரசு அதிகளவு அக்கறை காட்ட வேண்டும்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கப்பட வேண்டுமாயின் முதலில் அரசின் யோசனைத் திட்டங்கள் தெரியப் படுத்தப்பட வேண்டும்- என்றார். (ச)

# தேர்தலில் தவறுகள் ஏற்பட்டால் பதவியில் இருந்து விலகுவேன்

## தேர்தல் ஆணையாளர் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 20



எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஏதேனும் தவறு இழைக்கப்பட்டால் பதவியை துறக்கவும் தயங்கப் போவதில்லை என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியா தெரிவித்துள்ளார்.

இந்தத் தேர்தலில் முறைகேடுகள் இடம் பெற்றதாக ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டாலோ, அதிகாரிகள் வேண்டுமென்றே குற்றச் செயல்களில் ஈடுபட்டமை நிரூபக்கப்பட்டாலோ பதவியைவிட்டுப் போவதாகத் தெரிவித்துள்ளார்.


பதவி விலகிய பின்னர் ஏதேனும் தூதர் பதவியோ அல்லது வேறேதும் பதவி யையோ பெற்றுக்கொள்ளப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல்களுக்கு முன்னர் சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் அகற்றப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

வடக்கில் தேர்தல்களை உரிய முறையில் நடத்துவதற்கு தேவையான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும் எனக் கூறினார்.

தேர்தல் தினமன்று மோசடிகள் இடம் பெற்றால் குறித்த வாக்களிப்பு நிலையத்தின் தேர்தல் முடிவுகள் ரத்துச் செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ச)




சனத்தொகை மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஆசிய நாடாளுமன்றக் குழுவின் 27ஆவது கூட்டத்தொடர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தொடரில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், சுகாதாரத்துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, ஜப்பானின் முன்னாள் பிரதமர் யசூவோ புகுடா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# போதைப் பொருளுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜூலை 20

பாணந்துறை, திக்கல்ல பகுதியில் 3 கிராம் மற்றும் 280 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பாணந்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சந்தேக நபர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பாணந்துறை பொலிஸார் நடத்திய விசேட சுற்றிவளைப்பு தேடுதலின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# விளைச்சல் செய்யப்படாத நெல்வயல்கள் அரசால் பொறுப்பேற்கப்படும் - பிரதமர்

கொழும்பு, ஜூலை20

நாட்டில் விவசாயம் செய்யப்படாத அனைத்து நெல்வயல்களும் அரசால் பொறுப்பேற்கப்பட்டு நெற் செய்கை மேற்கொள்ளப்படும் - என பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்தார்.

கம்பளை ரன்முல்கடுவையில் வயல்நிலமொன்றை செப்பனிடும் நிகழ்வொன்றில் பங்குபற்றி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

நாட்டின் இளைஞர்கள் மீண்டும் அரிசி உற்பத்திக்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டும் எனவும் இதன் மூலம் நாட்டின் விவசாயத்துறையை முன்னேற்ற முடியும்.

எமது பொருளாதார இலக்குகளை அடைவதற்கு பொருளாதார அபிவிருத்தி முக்கியமானது. விவசாயத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று எழுது இளைஞர்கள் பலர் விவசாயத்தில் ஈடுபடுவதற்கு தயங்குகின்றனர். உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகள் அனைத்தும் கடின உழைப்பின்மூலமே அபிவிருத்தியடைந்தன- என்றார். (ச)

# சுற்றுலாப் பறவைகளின் வாழ்க்கை முறை பாதிப்பு

கொழும்பு, ஜூலை 20

இலங்கையில் நிலவும் காலநிலை மாற்றம் காரணமாக சுற்றுலாப் பறவைகளின் வாழ்க்கை முறை பாதிக்கப் பட்டுள்ளதாக சூழலியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாகத் தற்போது குறித்த சுற்றுலாப் பறவைகளுக்கு, இலங்கையில் இருந்து வெளியேற முடியாத நிலை தோன்றியுள்ளதாக சூழலியல் ஆய்வாளர் திலக் கந்தேகெதர குறிப்பிட்டுள்ளார்.

தென்மேற்கு பருவக்காற்று நாட்டை ஊடறுத்துச் செல்லாமை உள்ளிட்ட பல காரணங்களே தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டி யுள்ளார்.

ஏப்ரல் மாதத்தில் மட்டும் ஒலிக்கும் சுற்றுலாப் பறவைகளின் ஓசை, தற்போது வருடம் முழுவதும் காணப்படுவதாகவும் சூழலியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(ந)

# பாதத்தை இழந்த யுவதிக்கு நஷ்டஈடு வழங்க உத்தரவு

கொழும்பு, ஜூலை 20

வீதிச் சமிக்ஞையை அலட்சியம்செய்தவாறு வேகமாகவந்த பொலிஸ் ஜீப்பில் மோதுண்டுவிபத்துக்குள்ளாகி பாதத்தை இழந்த யுவதிக்கு 3,80,000 ரூபாவை நட்டஈடாக வழங்குமாறு பொலிஸ்மா அதிபருக்கும், ஜீப்பின் சாரதிக்கும் கொழும்பு மாவட்ட மேலதிக நீதிவான் விக்கும் ஏ.களுஆராச்சி உத்தரவிட்டுள்ளார்.

தனியார் வைத்தியசாலையொன்றில் தாதியாகப் பணிபுரிந்த வலஸ்முல்லை பிர[illegible]ரே இவ்வாறு விபத்தில் ஒரு பாத[illegible]டமிருந்து பத்து லட்சம் ரூபாவை நட்டஈடாகக் கோரி இவ்வழக்கைத் தொடர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "வடக்கின் வசந்தம்"



## வட மாகாணத்திற்கு ஊவா மாகாணம் நல்லுதவி




### நல்லிணக்கம், நல்லெண்ணம், ஒற்றுமை வளரட்டும்









**யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தின் புதிய கட்டிடத்தொகுதி மேன்மை தங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் 19.07.2011 செவ்வாய்க்கிழமை காலை வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.**





இனங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தையும், நல்லெண்ணத்தையும், ஒற்றுமையையும் வளர்க்கும் நோக்குடன் ஊவா மாகாண சபையின் நிதியுதவியில் யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் "ஊவா-வடக்கு நட்புரிமை மண்டபம்" என்கின்ற புதிய கட்டிடத்தொகுதி நிர்மாணிக்கப்பட்டது.





இப் பாடசாலையின் அபிவிருத்திக்காக உருவாக்கப்பட்ட இப் புதிய கட்டிடத்தொகுதியின் நிதியீட்டமானது ஊவா மாகாண சபையின் முதலமைச்சர் கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ அவர்களாலும், கௌரவ ஆளுநர் சி.நந்த மெத்தீவ் அவர்களாலும், சபையின் கௌரவ அங்கத்தவர்களாலும் வடமாகாணத்திற்கு உவந்தளிக்கப்பட்டது.





வடமாகாண சபையின் கௌரவ ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி அவர்களின் வழிகாட்டல், நெறிப்படுத்தல், மேற்பார்வையில் இக்கட்டிடம் சிறப்புடன் மிளிர்கின்றது.

இக்கட்டிடத்தை அமைக்கும் பணியில் இலங்கை பாதுகாப்பு படை வீரர்கள் தமது மனித உழைப்பை சிறப்பாக வழங்கினர்.

(சி/1860)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரிப் பிரதேச மக்களின் குடிதண்ணீருக்கு அதிக நிதியை மாதாந்தம் செலவிடுகின்றோம்

## பூநகரிப் பிரதேச சபைச் செயலாளர் தெரிவிப்பு

பூநகரி, ஜூலை 20

பூநகரிப் பிரதேச மக்களுக்குக் குடிதண்ணீரை வழங்குவதற்காகப் பூநகரிப் பிரதேசசபை மாதாந்தம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கு மேல் சபை நிதியிலிருந்து செலவிடுகின்றது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பூநகரிப் பிரதேச சபைக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அதன் செயலாளரான திருமதி மேரி மெக்டலின் சிவகுமார்.

பூநகரிப் பிரதேசம் நீண்டு பரந்துள்ள பிரதேசமாகும். இங்கு 19 கிராம அலுவலர் பிரிவில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் முக்கியமான பிரச்சினையாகக் குடிதண்ணீர் காணப்படுகின்றது. இதற்காகவே மாதாந்தம் அதிகளவு நிதியைப் பிரதேசசபை செலவிடுகின்றது.

மேலும் இந்த மக்கள் சந்தை வசதியில்லாது பல இடர்களைச் சந்தித்தனர். தற்போது துரித வேகத்தில் புதிய சந்தை அமைக்கப்பட்டு வருகின்றது. இதன் வேலைகளுக்காக 'என்றிப்' மூலம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைவிட பூநகரிப் பிரதேச சபைக்கு நவீன இரண்டு மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் பூநகரி மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தற்காலிகமாக நீக்கும் பொருட்டு இரண்டு நீர்தாங்கி பவுசர்களையும், 18 பிளாஸ்ரிக் தாங்கிகளையும் வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இரணைமடு மூலமான குடிதண்ணீர் கிடைப்பதற்குக் குறைந்தது மூன்று வருடங்களாவது தேவைப்படும். இதற்கென யாழ். கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோகத் திட்ட வியலாளர்கள் பெரிய நீர்த்தாங்கி அமைப்பதற்கென பூநகரியில் காணிபெறுவதற்கு முயற்சி செய்கின்றனர்.

எனவே இரணைமடுத் திட்ட அபிவிருத்திக்கு முன்னர் எமது பிரதேச மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு வடக்கு மாகாண உள்ளூராட்சி அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெறுகின்றது.

அத்துடன் அலுவலகக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஆளணிப் பற்றாக்குறை நிலவுகின்றது.

இது தொடர்பாக வடக்கு மாகாண பொது நிர்வாக பிரதிப் பிரதம செயலாளருக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது. இவ்வாறு மேலும் தெரிவித்தார் பூநகரிப் பிரதேச சபைச் செயலாளரான திருமதி மேரி மெக்டலின் சிவகுமார். (க)

# ஆளுந்தரப்புக்கு வாக்களிக்குமாறு வற்புறுத்தப்படும் சிவபுரம் மக்கள்

கிளிநொச்சி, ஜூலை 20

பரந்தன் சிவபுரத்தில் வசிக்கும் மக்களை ஆளுந்தரப்புக்கு வாக்களிக்குமாறு சிலர் வற்புறுத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மக்கள் அரச உதவிகள் எதுவுமற்ற நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களுக்குக் காணிக்குரிய உறுதிப்பத்திரங்கள் இல்லாததால் வீட்டுத் திட்ட உதவிகள் எதுவும் வழங்கப்படவில்லை. இவர்கள் இப்போதும் தகரம், தறப்பாள் ஆகியவற்றால் அமைக்கப்பட்ட கொட்டகைகளிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

இங்கு வசித்துவரும் சுமார் 300 குடும்பங்களுக்கும் மலசல கூடங்கள் கூட இன்றுவரை வழங்கப்படவில்லை. இதனால் பெரும் சுகாதாரச் சீர்கேடுகளை இவர்கள் எதிர்கொள்கின்றனர்.

இந்த நிலையில் இவர்களுக்கு உதவவென அரச சார்பற்ற நிறுவனங்கள் வரும் போது இந்தக் கிராமத்துக்கு வரும் வீதியொன்றின் முற்பகுதியில் வசிக்கும் நபரொருவர் தடுத்து விடுவதாகக் கூறி இந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆனால் ஏதாவது அரச நிகழ்வுகளுக்கு ஆள்களைக் கூட்டிச் செல்வதாக இருந்தால் இந்த நபர் கொப்பியும் கையுமாக வீடு வீடாகச் செல்வதாகவும் தெரிய வருகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை மக்களுக்கு வழங்குவதாக உதவிகள் வழங்கப்படவிருப்பதாகக் கூறி இந்த நபர் ஆள்களைக் கூட்டிச் சென்றுள்ளார். ஆனால் உதவிகள் எதுவும் வழங்கப்படாத நிலையில் மக்கள் வெளியேறுவதற்கு முயன்றபோது இந்த நபர் மக்கள் திரண்டிருந்த பொதுநோக்கு மண்டபத்தின் கதவைப் பூட்டியுள்ளார்.

ஆனால் அடைபட்டிருந்த மக்கள் கதவைத் திறந்து வெளியே சென்றுள்ளனர். இத்தகைய நபர்களின் செயற்பாடுகள் மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க-426)

# வணிக மாணவர்களுக்கான செயலமர்வு கிளிநொச்சியில்

## 21, 25, 26, 27, 28 ஆம் திகதிகளில்

கிளிநொச்சி, ஜூலை 20

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் இருந்து எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குப் புதிய பாடத் திட்டத்தின்கீழ் முதன் முறையாக தோற்றுகின்ற வணிகத்துறை மாணவர்களுக்கான செயலமர்வு நேற்றைய தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும் 21 ஆம், 25ஆம், 26 ஆம், 27 ஆம், 28 ஆம் திகதிகளில் இது தொடர்ந்து நடைபெறும்.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் அமைந்துள்ள கணினி வள நிலையத்தில் நடைபெறவுள்ள இந்தச் செயலமர்வில் கணக்கீடு, வணிகக்கல்வி, பொருளியல் ஆகிய பாடங்களின் துரித மீட்டல் காலை 8.30 மணிதொடக்கம் பி.ப.5.30 மணிவரை நடைபெறவுள்ளது.

ஜிரி இசற் நிறுவனத்தின் சமூக இசைவாக்கத்துக்கான கல்வி திட்டத்தின்கீழ் இந்தச் செயலமர்வு நடைபெறவுள்ளது.

இந்த திட்டத்தின்கீழ் முல்லைத்தீவு, துணுக்காய், கிளிநொச்சி ஆகிய கல்வி வலயங்களிலும், வவுனியா தமிழ் மகாவித்தியால யத்தில் புனர்வாழ்வு அளிக்கப்படும் மாணவர்களுக்கும் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான செயலமர்வுகள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-405)

# பூநகரியில் நவீன வைத்தியசாலை அமைக்கப்படும்

பூநகரி, ஜூலை 20

பூநகரி உதவி அரச அதிபர் பிரிவில் நவீன அரசினர் வைத்தியசாலை ஒன்று புதிதாக அமைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு புதிய அரசினர் வைத்தியசாலைக்கான அடிக்கல்லை இன்று நட்டு வைக்கவுள்ளார்.

புதிதாக அமைக்கப்படவுள்ள நவீன தரம் கொண்ட வைத்தியசாலையின் கட்டுமானத்துக்கென 74 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (க-302)

# காகில்ஸ் பூட்சிற்றி திறந்து வைப்பு

கிளிநொச்சி, ஜூலை 20

காகில்ஸ் பூட்சிற்றி 163 ஆவது விற்பனை நிலையம் நாளைய தினம் முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி ஏ-9 வீதியில் திறந்து வைக்கப்படவுள்ள இந்த விற்பனை நிலையத்தில் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான அனைத்துப் பொருள்களையும் அதிநவீன வசதிகளுடன் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ளமுடியும். (க)

# பரீட்சைக்கான திருத்திய அட்டவணை

கிளிநொச்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இரண்டாவது தவணைக்கான பரீட்சைகள் நேற்று ஆரம்பமாகின.

ஜனாதிபதியின் கிளிநொச்சி வருகையையொட்டி இன்று பரீட்சைகள் நடைபெறமாட்டா. மீண்டும் பரீட்சைகள் நாளைய தினம் 21 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றன. நாளை மறுதினம் 22 ஆம் திகதி தொடக்கம் மூன்று நாள்களுக்குப் பரீட்சைகள் நடைபெறமாட்டாது.

இதன் பின்னர் மீண்டும் 25, 26, 28, 29 ஆகிய திகதிகளில் பரீட்சைகள் நடைபெறும். 27 ஆம் திகதி நடைபெறமாட்டாது. பரீட்சைகளுக்கான திருத்திய நேர அட்டவணைகள் அனைத்துப் பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பரீட்சைகள் முடிவுற்று விடுமுறைக்காகப் பாடசாலைகள் அனைத்தும் அடுத்த மாதம் 5 ஆம் திகதி மூடப்படவிருப்பதாகவும் கிளிநொச்சி கல்வி வலயத்தினர் தெரிவித்தனர். (க-405)

# வலி தந்தாரைத் தோற்கடிப்போம் நம் விதி வெல்ல வாக்களிப்போம்

## தமிழரசுக் கட்சியின் கரைச்சிப் பிரதேச வேட்பாளர் சிவராசா சிவச்செல்வன் (ஈசன்)



எதிர்வரும் 23 ஆம் திகதி நடை பெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் ஒரு தர்ம யுத்தமாகும். தற்போது உலகைத் தமிழர்கள் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்துள்ள இறுதி யுத்தத்தின் போதான முள்ளிவாய்க்கால் கொடுமைகளை பொய் எனக்கூறி அதனை மூடி மறைக்க முயலும் அரசு இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவதன் மூலம் தமிழர்கள் அரசின் பக்கமே உள்ளனர் எனக் காட்டுவதுடன், தமிழர்களுக்கெனப் பிரச்சினைகள் எதுவும் இல்லையெனவும் காட்ட முயல்கின்றது. இதற்கு ஜனாதிபதி தொடக்கம் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என அனைவரும் வடக்கில் முகாமிட்டுள்ளமை சிறந்த எடுத்துக் காட்டாகும்.

தற்போதைய தேர்தல் விதிமுறைகளை மீறும் செயல்களையும், இராணுவத்தினர் அரசு சார்புப் பிரசாரங்களில் ஈடுபட்டு தமிழ்த் தரப்புச் சார்பு பிரசாரங்களை தடுப்பதில் ஈடுபடுவதையும் பார்க்கும் போது முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போலத் தெரிகின்றது.

கிளிநொச்சி மாவட்டம் தனியான நிர்வாக மாவட்டமாகப் பிரிக்கப்பட்ட பின்னர் முதன் முறையாக நடைபெறும் பிரதேச சபைத் தேர்தல் இதுவே யாகும். எனவே எமது மாவட்ட வரலாற்றில் இந்தத் தேர்தல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

எமது சுதந்திரத்துக்காகவும், உரிமைக்காகவும் குரல் கொடுத்து வரும் எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பா அல்லது சிங்களத் தலைமைகளால் நிர்வகிக்கப்படும் எமது உரிமைகளை மறுக்கும் கட்சியா எமது பிரதேச சபையை ஆட்சி செய்யப் போகின்றது என்பதை மக்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி தருவார்கள் என்ற அசையாத நம்பிக்கை எமக்கு உண்டு.

எவ்வளவோ பெரிய கனவுகளுடன் எமக்கென ஓர் இனம், மொழி, பாதுகாப்பு, கலாசாரம் என வாழ்ந்த எமக்கு எமது பிரதேச சபையை வெல்லும் வல்லமை இல்லையா என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

வளர்ந்து வரும் கிளிநொச்சி நகரை மையப்படுத்திய கரைச்சி பிரதேச சபையை நகர சபையாக மாற்ற வேண்டும். சிறு வீதிகளைப் புனரமைத்து மக்களின் போக்குவரத்துக்கு உதவ வேண்டும். குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பிரதேச ரீதியான முன்பள்ளிகளை நிறுவி வளர்த்தெடுக்க வேண்டும். பொது நூலக சேவையை விரிவாக்க வேண்டும். எமது பிரதேச வருமானங்களைச் சிறப்பாக முகாமை செய்து இவற்றை முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறான பணிகளை முன்னெடுக்க எமது தேசியக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்) சின்னமான வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து, எமது பலத்தை நிரூபிக்க வேண்டுமெனக் கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட வாக்காளப் பெரு மக்களை வேண்டிநிற்கின்றேன். (க-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சி மன்ற தேர்தல் - 2011
## வலி.தென்மேற்கு பிரதேச சபை

3

3 X X



திரு.இராஜநாயகம் (ஆசிரியர்)
திருமதி இராஜநாயகம்
(அதிபர், மானிப்பாய் மகளிர் கல்லூரி) தம்பதிகளின் புதல்வன்

**இராஜநாயகம் சிவகுமாரன் (பவுண்)**

(புளொட் அமைப்பின் சார்பாக)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA)

## ஈழத்துச் சிதம்பரத்தில் கலசாபிஷேகம்

காரைநகர் திண்ணபுரம் சௌந்தராம்பிகா சமேத சுந்தரேசப் பெருமான் ஆலயத்தின் மண்டல மஞ்சன பூர்த்தி ஏகாதச ருத்ர ஹோம நவகுண்ட சஹித கலசாபிஷேக உற்சவம் இன்று புதன்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

காலை விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகும் கலசாபிஷேகத்தைத் தொடர்ந்து சங்காபிஷேகம் நடைபெறும்.

(சிறப்பிதழ் B, C பக்கங்களில்)

## மலர் வெளியீட்டு விழா

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவு மலர் வெளியீட்டு விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு குருநகர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆலயப் பங்குத் தந்தை அருட்திரு எவ்.எக்ஸ். நேசராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட் தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டு மலரை வெளியிட்டு வைப்பார்.

(ற-135)

## உள்ளூராட்சி மன்ற தேர்தல் - 2011
## வலி.கிழக்கு பிரதேச சபை

3

3 X X



**இராஜா பிரேம்குமார் (பிரேம்)**

(புளொட் அமைப்பின் சார்பாக)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA)

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனங்களின் உரிமையாளராகிய
தியாகராஜா ஜெகசீலன் அவர்களின்
அன்பு மாமியாராகிய உசன்,
மிருசுவிலைச் சேர்ந்த

**பத்மநாதன் பத்மராணி**

(288/10, இராமநாதன் வீதி, திருநெல்வேலி)
19.07.2011 இல் இறைபதம் அடைந்துள்ளார்.
அவர்களின் மறைவினால் ஆழ்ந்த
துயருற்றிருக்கும் அவர்களின்
குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பணியாளர்கள்,
கிறீன் கிறாஸ் ஹொட்டேல்,
*33, ஆசீர்வாதம் வீதி,*
*ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

லவுசி ஹொட்டேல்,
*584, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல் - 2011
## வேலணைப் பிரதேச சபை

3

3 X X



**கந்தையா ரவி**

(புளொட் அமைப்பின் சார்பாக)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA)

## எப்படித் தாங்குவோம்?



**Dr.வேலாயுதபிள்ளை**
**தம்பிமுத்து**

*ஆடித்திங்கள் பதினாறாம் நாள்*
*அவனிக்கு அதிர்ச்சி தந்த கரிநாள்*
*ஊர்போற்றி வணங்கிடும் உத்தம வைத்தியன்*
*பார் புகழ் கடமை வீரன்*
*தம்பித்துரை அவர்கள் அவமிருத்தாக*
*மீளாத்துயில் அடைந்த செய்திகேட்டு*
*கனடா வாழ் மக்கள் ஆற்றொணாத்துயரில் துடிதுடித்த நாள்*
*கள்ளமில்லா முகத்தில் எப்போதும் காணும் புன்சிரிப்பை*
*காணமுடியாது தவிக்கின்றோம் ஐயா*
*கண்மூடி விழிப்பதற்குள் நடந்த விபத்தால்*
*இழந்து விட்டோம் மீசாலை குடும்ப வைத்தியரை*
*இல்லை இல்லை கைராசி வைத்தியனை இழந்துவிட்டோம்*
*யாரிடம் நோவோம்? யார்க்கு எடுத்துரைப்போம்?*
*ஆறுதல் கூற வார்த்தைகள் இல்லை ஐயா*

வீ.ந.சோமசுந்தரம், ஸ்ரீகாந்தன்,
ஸ்ரீகதிர்காமநாதன் குடும்பம்
கனடா வாழ் மீசாலை தமிழ் மக்கள் சார்பாக.

(சி/574898)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை (சுன்னாகம்)
## உள்ளூராட்சித் தேர்தல் - 2011



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வலி.தெற்கு (சுன்னாகம்) பிரதேச சபைக்கான வேட்பாளர்

7 X

**திரு.செல்லத்துரை ஈஸ்வரன் (ஈசன் - சங்குவேலி)**

(தலைவர், சங்குவேலி விவசாய சம்மேளனம், செயலாளர், பாரம்பரிய மாட்டுச்சவாரிக் கழகம், விவசாயிகளின் உற்ற தோழன்)

- விவசாய நண்பர்கள் -

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை (மானிப்பாய்)
## உள்ளூராட்சித் தேர்தல் - 2011

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வலி.தென்மேற்குப் (மானிப்பாய்) பிரதேச சபைக்கான வேட்பாளர்

7 X



**திரு.கதிரவேலு கௌரிகாந்தன்**

(தலைவர், இலங்கைத் தமிழரசுக் கட்சிக் கிளை, மானிப்பாய் தொகுதி)

- தமிழ் தேசியப் பற்றாளர்கள் -

## பருத்தித்துறை நகரசபைத் தேர்தல்-2011

**இலங்கைத் தமிழரசுக் கட்சி**
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)



பருத்திமாநகரை மீண்டும் புதுப்பொலிவுடன் கட்டி எழுப்ப உங்கள் வாக்குகளை வீட்டுச் சின்னத்துக்கும் சிறந்த சமூகசேவையாளனை உறுதிப்படுத்த 10 இலக்கத்துக்கும் புள்ளடி இட்டு வாக்களியுங்கள்.

அதிகப்படியான வாக்குகளால் இவரது வெற்றியை உறுதிப்படுத்தவும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி

**சிதம்பரப்பிள்ளை**
**பத்மநாதன் (J.P)**
(சமூக சேவையாளர்)

10

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



மந்துவில் கிழக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த
ஸதானந்தா - விஜிதா தம்பதியரின் செல்வப் புதல்வன்

**திபிஸன் (திபிக்குட்டி)**

இன்று (20.07.2011) புதன்கிழமை தனது முதலாவது
பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றார்.
திபிக்குட்டியை அப்பா, அம்மா, ஆசை அக்கா,
அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா,
சின்னம்மம்மா, சித்தா, ஆசைமாமா, பெரியமாமா,
சின்னமாமா, குட்டிமாமா, அன்ரா, குட்டி அன்ரா,
பிரான்ஸில் வசிக்கும் அத்தை, மாமா,
மாச்சான்மார், மச்சாள், கோப்பாய் அப்பப்பா,
அப்பம்மா மற்றும் மாமாமார், அத்தைமார்,
அன்ராமார் யாவரும்
கும்பாவெளிப்பிள்ளையார் அருள் பெற்று
சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம்
வாழவேண்டும் என வாழ்த்துகின்றனர்.



மந்துவில் கிழக்கு,
கொடிகாமம்.

ஸ.ஸவிஸ்னா
(சகோதரி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திரு. சுப்பிரமணியம் யோககோபாலகிருஷ்ணன்

(முன்னாள் உதவி பொது முகாமையாளர், ஹட்டன் நஷனல் வங்கி)

அவர்கள் அவுஸ்திரேலியா, மெல்போர்ன் நகரில் இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், கொட்டடி சிவன் பண்ணை வீதியை சேர்ந்த காலஞ்சென்ற நவரத்தினம் - நித்தியலட்சுமி தம்பதியினரின் மருமகனும், சந்திரலேகா அவர்களின் அன்புக் கணவரும், யோகலதாஜினி (பஹறெயின்), யோகதக்ஷினி (அவுஸ்திரேலியா), யோகடினூஷா (அவுஸ்திரேலியா - முன்னாள் Pan Asia Bank) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான யோகராஜா, யோகேஸ்வரி முத்துத்தம்பி மற்றும் யோகலீலா வயித்திலிங்கம் (சிங்கப்பூர்), யோகசவுந்தரி விஜயரெத்தினம் (சிங்கப்பூர்), காலஞ்சென்றவர்களான யோகேஸ்வரன், யோகாம்பிகை நடராஜா மற்றும் Dr. யோகசரோஜினி அற்புதராசா (சிங்கப்பூர்) அவர்களின் அன்புச் சகோதரரும், திருக்குமார் (பஹறெயின்), ராஜமுருகன் (அவுஸ்திரேலியா), பாஸ்கரன் (அவுஸ்திரேலியா) அவர்களின் அன்பு மாமனாரும், பிரஷ்யனா (பஹறெயின்), பிரபினாஸ் (பஹறெயின்), ராஜசண்முகன் (அவுஸ்திரேலியா), ராஜசாயீசேஷ் (அவுஸ்திரேலியா) அவர்களின் அன்பு பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.07.2011 செவ்வாய்க்கிழமை பி.ப 2.15 மணிக்கு மெல்பர்ன் Renowden Chapel Springvale Botanic மயானத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : Murugan - Dakshi
52, Brentwood, Drive Glen waverley,
Melborn, Australia. **Tel : 0061395603599**


## வேலையாள்கள் தேவை

சோடாப் போத்தல்களை வாகனங்களில் ஏற்றி இறக்குவதற்கு வேலையாள்கள் தேவை

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**
ஒட்டுமடம் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.இல: 021 222 5595, 0214925101

## கார் சாரதி தேவை

சிறிய குடும்பத்துக்கு பகுதி நேரத்துக்கு அனுபவமுள்ள கார்ச்சாரதி தேவை. கோண்டாவிலை சூழவுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு : 0773106834

## வீடு தேவை

றெஸ்ரோறன்ஸ் அமைப்பதற்கு சகல வசதிகளும் கொண்ட வீடு தேவை.
தொடர்பு:0773193607, 0777768782

## DIPLOMA IN CIVIL SOCIETY PROJECT MANAGEMENT

சமூக நல தொண்டு நிறுவன [VOLUNTEER SECTOR] தொழில் வாய்ப்புகளுக்காக எமது நிறுவனத்தினால் நடத்தப்படும் மேற் குறிப்பிட்ட பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் இப்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் பின்வரும் முகவரிக்கு எழுதுவதன் மூலம் விண்ணப்பப்படிவத்தையும் ஏனைய விவரங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். தொலைக் கல்வி முறையில் நடத்தப்படும் இந்தப் பயிற்சி நெறியை நீங்கள் வீட்டில் இருந்தவாறே உங்கள் வசதிக்கேற்ப கற்றுப் பயனடையலாம். பயிற்சி நெறிமுடிவில் சான்றிதழ் வழங்கப்படுவதோடு தொழில் வாய்ப்புக்கான ஆலோசனைச் சேவையையும் பெற்றுக் கொள்ளலாம்.

**Programme Coordinator (DIPM)**
Mecwin Resource; P.O. Box 206,
Kandy


# மரண அறிவித்தல்கள்

## நமசிவாயம் துரைசிங்கம்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கல்வளை, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் துரைசிங்கம் கடந்த 16.07.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும் லீலாவதியின் அன்புக் கணவரும் சத்தியதேவி, ராதாக்கிருஷ்ணன், விசாகரட்ணம் (London) ஆகியோரின் அன்புத் தந்தையும் சசிவதனியின் அன்பு மாமனும் அமித்தாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2011) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் ''லக்சுமி விலா'', கல்வளை, சண்டிலிப்பாய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'லக்சுமி விலா',*
*சண்டிலிப்பாய்.* (5972) (15-21-25

தகவல்: குடும்பத்தினர்,
விசாகரட்ணம் (மகன்).

## தம்பிப்பிள்ளை நாகலிங்கம்



சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை நாகலிங்கம் நேற்றுமுன்தினம் (18.07.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் நல்லம்மாவின் அன்புக் கணவரும் சத்தியபாமா, ஸ்ரீசத்தியலிங்கம் (லண்டன்), ஸ்ரீசத்திய நேசன், ஸ்ரீசத்தியவரதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2011) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சிறுப்பிட்டி மேற்கு, பத்தலட்டி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.* (6012)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



சாவகச்சேரி வடக்கு,
பங்களா வீதி, மீசாலை.
(1918)

## Dr.வேலாயுதபிள்ளை தம்பித்துரை

(ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி - RMP)

மந்துவிலைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி வடக்கு, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.P.V. தம்பித்துரை கடந்த (16.07.2011) சனிக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை - ஆசையம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பையா - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் அருமை மருமகனும் செல்வரத்தினத்தின் (இளைப்பாறிய ஆசிரியை, யா/மீசாலை விக்னேஸ்வரா ம.வி.) அன்புக் கணவரும் சுதர்சினி (UK), சுபாஷினி(UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும் குலேந்திரன் (UK), உமாசுதன் (UK) ஆகியோரின் அன்பு மாமனும் ஹரிசாகித்தியா, ஹரிணி சம்யுக்தா, நேத்திரி, ரிதிக்கா (UK) ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் பொன்னுத்துரை, திருமதி க. மகேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை, மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்), திசைவீரசிங்கம் (சுவீடன்), காலஞ்சென்ற செல்வி தங்கரத்தினம் (மல்லிகா) மற்றும் துரைராசசிங்கம் (கனடா), ஜெயவீரசிங்கம் (சுவீடன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற செல்வி இராசம்மா, பரமநாதன் மற்றும் பாலசிங்கம் (பிரான்ஸ்) பாக்கிய நாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2011) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சு. பாக்கியநாதன் (மைத்துனர்)
லக்ஸ்மி ரேடேர்ஸ் - சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள்
### உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
நண்பர்களின் அனுசரணையால், எடுத்த காரியத்தில் எதிர்பாராத வெற்றி கிடைக்கும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி உற்சாகம் தரும். தாய் வழியில் அனுகூலமான உதவி கிடைக்கும். சொல்வாக்கைக் காப்பாற்றி செல்வாக்குப் பெறுவீர்கள். ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம்.

**இடபம்:**
தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். காலை நேரத்தில் மனதிற்கு இனிய சம்பவங்கள் நடக்கலாம். பொழுது போக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். திட்டமிட்ட சில காரியங்கள் தடை, தாமதங்களுக்குப் பின் முடிவுக்கு வரும். கணவன், மனைவியிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பணவரவு உண்டு.

**மிதுனம்:**
தொழில் ரீதியான குழப்பங்கள் உருவாகலாம். திட்டமிட்ட ஒரு காரியத்தை செய்ய முடியாமல், மற்றொரு காரியத்தைச் செய்யலாம். குடும்பத்திற்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். சக ஊழியர்களுடன் ஏற்பட்ட பிணக்குகள் விலகி, பாசம் அதிகரிக்கும். எதிர்பாராத சந்திப்பு நிகழும். எதிர்பார்ப்பு ஒன்றில் ஏமாற்றம் உண்டாகும்.

**கடகம்:**
போட்டி, பொறாமைகளால் அவதிகளுக்கு ஆள் படலாம். பெரிய அளவில் ஆதாயத்தை எதிர்பார்த்துச் செய்த காரியம் ஒன்றில் எதுவும் கிடைக்காமல் போகலாம். வாடகை வீட்டில் குடியிருப்போர் நெருக்கடிகளுக்கு ஆள் படலாம். சிலரை சந்திக்க முற்பட்டு அவர்கள் கிடைக்காமல் போகலாம். தண்டச் செலவுகள் நேரும்.

**சிங்கம்:**
குடும்ப உறுப்பினர்கள் சிலருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். மனைவி, குழந்தைகள் கேட்ட பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். நண்பர்களுடன் கொண்டாட்டம் உண்டு. நீண்ட நாள்களாக வராத உறவினர் ஒருவர் உங்களின் வீட்டிற்கு வரலாம். பிள்ளைகளின் செயற்பாடுகளைப் பற்றி மற்றவர்களிடம் பெருமையாகப் பேசுவீர்கள்.

**கன்னி:**
முயற்சிகளில் முத்தான வெற்றி பெறும் நாள். உடல் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு சில காரியங்களைச் செய்வீர்கள். போட்டிகள், எதிர்ப்புகள் விலகும். உடன் பிறப்புக்களை அனுசரித்துச் செல்ல வேண்டும். மனைவி, குழந்தைகளுடன் சந்தோஷமாக பொழுதைக் கழிக்கலாம். சிலரிடம் கேட்ட கடனுதவி கிடைக்கும். பணவரவு உண்டு.

**துலாம்:**
குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள். வியக்கத்தக்க செய்திகளைக் கேட்கலாம். நிலம், பூமி வாங்கும் விவகாரங்களில் இழுபறிகள் உண்டு. பிள்ளைகள் கேட்ட பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். அவசரமாக முடிக்க வேண்டிய வேலை ஒன்றால் அவதிப்படலாம். சிலரின் விமர்சனங்களைச் சந்திக்கலாம்.

**விருச்சிகம்:**
மதிப்பு, மரியாதை மேம்படும். வியாபாரிகள் பரபரப்பாகச் செயற்பட நேரிடலாம். சிலர் உங்கள் தலையில் வேலைகளை சுமத்தி விட்டு தப்பித்துக் கொள்ளலாம். அயலார் அனுசரணையாக நடந்து கொள்வர். நீங்கள் தேடிச் சென்றும், பார்க்க முடியாத ஒருவரை இன்று எதேச்சையாக சந்திக்கலாம். சில காரியங்களில் தடை ஏற்படும்.

**தனுசு:**
காலை முதல் மாலை வரை பம்பரமாகச் சுழன்று பணியாற்றுவீர்கள். அதிக விலை கொடுத்து வாங்க நினைத்த பொருள் ஒன்றை, குறைந்த விலைக்கு வாங்குவீர்கள். பிள்ளைகள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். தந்தை தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். உதிரி வருமானங்களைப் பெறலாம்.

**மகரம்:**
மனதில் இனம் புரியாத ஆதங்கம், அதிருப்தி தோன்றும். சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்து, பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். புதியவர்களை நம்பி எந்த காரியத்திலும் இறங்க வேண்டாம். திடீர் செலவுகளைச் சமாளிக்க பிறரிடம் கடன் வாங்கலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். உறவினர்கள் சிலர் வீட்டிற்கு வரலாம்.

**கும்பம்:**
பெரிய மனிதர்கள் உதவி கிடைக்கும் நாள். வீட்டைச் சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். நல்ல செய்திகளைக் கேட்கலாம். எடுத்த காரியத்தை முடிக்க சிலர் வழியில் உதவிகள் கிடைக்கும். உங்களுக்குப் பிடித்தமான பொருள் ஒன்றை உறவினர்கள் கொடுக்கலாம். சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். நாவன்மை அதிகரிக்கும்.

**மீனம்:**
குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் அதிகரிக்கும். தொழில் ரீதியாக சிலரிடம் கடுமையாகப் பேசலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர், உங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். பல முறை முயற்சித்தும் சில காரியங்கள் முடியாமல் போகலாம். கணவன், மனைவியிடையே சிறு மனஸ்தாபம் ஏற்படலாம். கனவுத் தொல்லையுண்டு.

# வடக்குக் க
# ஆக்கிரமிக்



## மனோகணே
## உதயனுக்கு செ

வடக்கில் முல்லைத்தீவு முதல் வடமராட்சி கிழக்கு வரையான கரையோரப் பாதுகாப்புக்காக சிங்கள மீனவர்கள் குடியேற்றப்படவிருக்கின்றனர் என நம்பகமான தகவல்கள் கொழும்பிலிருந்து கிடைத்திருப்பதாக ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவிக்கிறார்.

உதயனுக்கு வழங்கிய சிறப்புப் பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். சிங்கள மீனவர்களை வடக்குக் கரையோரம் குடியேற்றுவதன் மூலம் வடக்கின் மீன்வளம் சுரண்டப்படுவதுடன் கரையோரப் பகுதி முழுவதையும் சிங்களவர்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதே அரசின் இந்தத் திட்டத்தின் நோக்கம் என்றும் அவர் குற்றம் சாட்டுகிறார். அவருடனான உரையாடலிலிருந்து...

**கே:** 'நான் சொன்னதையே செய்வேன். செய்வதையே சொல்வேன்' என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளாரே. அது பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: ஜனாதிபதியாகப் பதவியேற்றது முதல் பல விடயங்களை அவர் சொல்லியிருக்கின்றார். எதையும் செய்யவில்லை. சொல்லாத பல விடயங்களை அவர் செய்துள்ளார்.

போருக்கு முன்னர் நடைபெற்ற விடயங்களைத் தள்ளி வைத்தாலும், போருக்குப்பின் தந்த வாக்குறுதி எதனையும் அவர் நிறைவேற்றவில்லை என்பதை சிந்திப்பவர்கள் எவருக்கும் நன்றாகப் புரியும்.

**கே:** போருக்குப் பின்னர் வடக்கின் அரசியல் நிலை குறித்து உங்கள் கருத்து என்ன?

ப: எமது மீனவர்களுக்குரிய வடக்கு மாகாணத்தில் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், நாயாறு, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் சிங்கள மீனவர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்று கொழும்பில் இருந்து தகவல் கிடைத்துள்ளது. அந்தப் பிரதேசத்தைச் சிங்கள மயமாக்கும் திட்டம் தீவிரமாகியுள்ளது. அந்தப் பிரதேசத்துக்குத் தமிழ் மீனவர்கள் அண்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட அந்தப் பகுதிக்குச் செல்ல முடியாதுள்ளது.

சுண்டிக்குளத்தில் இருந்து காங்கேசன்துறை, மயிலிட்டி, பலாலி, வளலாய், வடமராட்சி ஆகிய கரையோரப் பகுதிகளிலும் சிங்கள மீனவர்களைக் குடியேற்றி கடற் பாதுகாப்பைப் பலப்படுத்த அரசு திட்டமிட்டு செயற்படுவதாக கொழுபுத் தகவல்கள் கூறுகின்றன.

வடக்கு - கிழக்கு கரையோரங்களில் சிங்கள மீனவர்களைக் குடியமர்த்தி தமிழ் மீனவர்களின் கடல் வளத்தைச் சூறையாட அரசு முனைந்துள்ளது. வடக்கு, கிழக்கு கடலில் தமிழ் மீனவர்கள் தொழில் செய்ய உள்ள வளத்தை அபகரிக்கும் திட்டமே இதுவாகும். இந்தக் கடல் வளம் மிக்க கரையோரத்தை தமிழ் மீனவரிடமிருந்து பறித்தெடுக்கத் திட்டமிட்டு அரசு செயற்படுகின்றது.

தமிழ் மீனவர் வளம்மிக்க கடலை இழக்கப் போகின்றார்களா? என்ற கேள்வி ஓங்கி ஒலிக்கின்றது.

இந்த அபாய நிலையை தமிழ் மீனவர்கள் உணர்ந்து செயற்பட வேண்டும்.

**கே:** வடக்குக்கு அரச பட்டாளம் படை எடுத்துள்ளது குறித்து...?

ப: இலங்கை அரசுத் தலைவர், பிரபல அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து படை எடுத்து இங்கு முகாம் இட்டுள்ளார்கள். இவர்களைக் காணவில்லை என்று தெற்குச் சிங்கள மக்கள் தேடுகிறார்கள். இவர்கள் இங்கு படை எடுத்துள்ளமைக்கு ஒரு காரணம் உண்டு.

இலங்கை அரசு மீது உலக சமூகம் சாட்டியுள்ள குற்றச்சாட்டில் இருந்து எப்படியாவது விடுபட வேண்டும் என்பதற்காகவே அவர்கள் இங்கு வந்துள்ளனர்.

குற்ற வழக்கில் அகப்பட்டுள்ள இலங்கை அரசு நீதிமன்றத்தில் பிணை கேட்பது போல, எந்த மக்களுக்கு குற்றம் புரிந்ததோ அந்த மக்களிடம் பிணை கோரி நிற்கிறது. இதைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

**கே.** தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காக பிரசாரம் மேற்கொள்வது குறித்து...?

ப:- நான் ஒரு தமிழன். எனது உணர்வின் வெளிப்பாடுதான் இங்கு பிரசாரத்தை மேற்கொள்ள உந்தியது.

தமிழ் மக்களுக்கோ, சிங்கள மக்களுக்கோ, முஸ்லிம் மக்களுக்கோ எதிராக வடக்கிலோ தெற்கிலோ அநீதி நிகழ்த்தப்பட்டால், அநீதிக்கு உள்ளாகும் மக்களுக்காக எமது கட்சி குரல்கொடுத்து வெளிப்படுத்தி வந்துள்ளது.

தற்போது தமிழரசுக் கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசாவின் அதிகாரபூர்வமான அழைப்பை ஏற்றுக் கொண்டு வடக்கே வந்து கிளிநொச்சியிலும் யாழ்ப்பாணத்திலும் பல கூட்டங்களிலும் மக்கள் சந்திப்புக்களிலும் பங்கேற்றுள்ளேன். மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டுள்ளேன்.

மக்களை ஐக்கியப்படுத்த என்று மேடைக்கு மேடை குரல் கொடுத்தேன். அரசியல் பேதங்களை மறந்து, இந்தக் காலகட்டத்தில் வரலாற்று முக்கியத்துவமான கட்டத்தில் சகல தமிழ்மக்களும் ஒன்றுபட்டு அரசுக்குப் பாடம் புகட்டவேண்டும் என்று கோரினேன்.

மக்கள் ஒன்றுபட்டு தமது தீர்ப்பு என்ன என்பதை அரசுக்கு தெரிவிக்கவேண்டும். வரலாற்றுத் தவறு ஒன்றை பதிவுசெய்யாமல் சகலரும் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

**கே:** தமிழ்க் கூட்டமைப்புடன் தங்கள் கட்சி இணைந்து விட்டதாக வெளிவரும் செய்திகள் குறித்து...?

ப: கூட்டமைப்பின் கூட்டங்களில் பேச வந்தவுடன் தெற்கில் உள்ள சிங்கள, ஆங்கில ஊடகங்கள் எல்லாம் இதே கேள்வியைத் தான் என்னிடம் கேட்டன. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் இதே கேள்வியை என்னிடம் கேட்டது.

ஜனநாயக மக்கள் முன்னணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சியல்ல. இதற்கான பேச்சுக்களும் இடம்பெறவில்லை. ஆனால் இத்தகைய ஒரு சாத்தியத்தை நிராகரிக்கவும் இல்லை.

தற்சமயம் அரசின் அதிகார அழுத்தங்கள், அரச வளங்கள், இராணுவகெடுபிடிகள் ஆகியவற்றுக்கு உள்ளாக்கபட்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள், வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் ஆகியோருக்குத் துணையாக இருக்கவேண்டும் என்ற உணர்வுடன் இங்கு வந்துள்ளேன்.

**கே:** இந்தத் தேர்தல் வன்செயல்கள் நிறைந்ததாக இருக்கும் எனக் கருதுகிறீர்களா?

ப: 1981 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் ஆட்சிக் காலத்தில் யாழ்.மாவட்டத்தில் நடந்த மாவட்ட சபைத்தேர்தலின் போது யாழ்.நூலகம் எரிக்கப்பட்டதும், நாடாளுமன்ற உறுப்பினர் வெ.யோகேஸ்வரனின் வீடு எரிக்கப்பட்டதும் என் கண்முன் நிழலாடுகின்றன.

**சந்திப்பு : மாவை குகன்**

கொழும்பில் இருந்து கிடைத்த பிரத்தியேக தகவலின் பேரில், வாக்குப் பெட்டிகளை மாற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிகிறது.

வாக்களிப்பு நிலையங்களில் இருந்து வாக்குப் பெட்டிகள் செயலகத்துக்கு எடுத்துவரும்போது, வேறொரு இடத்தில் தயார் நிலையில் உள்ள வாக்குப்பெட்டிகளைக் கொண்டு வந்து மாற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையைத் தவிர்க்க கூட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரையோரங்களை ...க்க அரசு திட்டம்



## ...னசன் ...செவ்வி

மைப்பு ஆதரவாளர்கள் வாக்களிப்பு நிலையத்தில் இருந்து செயலகத்துக்கு வாக்குப்பெட்டி எடுத்துவரும்போது கண்காணிக்க வேண்டும்.

கே: கள்ள வாக்குப் போடும் சாத்தியம் உள்ளதா?

ப: நிறையவே உள்ளது. குடாநாட்டில் பெருமளவு வாக்காளர்கள் இடாப்பில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வெளிநாடு சென்ற காரணத்தால் நீக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் 100 வீதவாக்களிப்பு இடம்பெற வேண்டும் என உளமார்ந்து எதிர்பார்க்கிறேன்.

பிரதேச, நகர சபை தேர்தலில் தமிழ் மக்கள் கிராமம் கிராமமாக அணி திரண்டு வந்து வாக்களிப்பதன் மூலமே சதித் திட்டங்களை முறியடிக்கலாம்.

வாக்குரிமை கொண்ட ஒவ்வொரு குடும்பமும் தமது வாக்குகளை அளிக்கவேண்டும். இல்லையேல் அடுத்த வீட்டு 'மாமா' அந்த வாக்கை களவாடிவிடுவார். அதில் அவதானமாக இருக்க வேண் டும்.

காலை 7 மணிக்கும் 9 மணிக்கும் இடையில் கூட்டமாகச் சென்று வாக்களித்து விட வேண்டும். ஒரேஒரு சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும். அது வீட்டுச் சின்னமாக இருக்க வேண்டும்.

பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச சபையில்

உதயசூரியன் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் உதயசூரியனுக்கு அளிக்கும் வாக்கு வீட்டுக்கு அளித்ததாகவேயிருக்கும்.

**கே:** அரசு வழங்கி வரும் அன்பளிப்பு குறித்து...?

ப: தமிழகத்தில் நடந்த தேர்தலில் வாக்காளர்களுக்கு பெரிய அளவில் 'கையூட்டு' வழங்கப்பட்டதாக ஊடகங்கள் மூலம் அறிந்தோம்.

இன்று தமிழக அரசியல் வாதிகளை விஞ்சிய நிலையில் அரசு 'கையூட்டு' வழங்குவதை அவதானிக்க முடிகிறது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் பின் தங்கிய பிரதேச மக்களுக்கு தாராளமாக அரசு கையூட்டு வழங்குகிறது. கையூட்டை வாங்கிக் கொள்ளுங்கள். அது உங்களுக்குச் சொந்தமான பணம். நீங்கள் செலுத்தும் வரியில் இருந்து வழங்கப் படும் பணம். எனவே கையூட்டை பையில் போட்டு வாக்கை வீட்டுக்குப் போடுங்கள். ✱

## வாக்களிப்பது எப்படி?

எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெற உள்ள உள்ளூராட்சித் தேர்தலில் நேரகாலத்துடனேயே வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று வாக்களிப்பதே கள்ள வாக்குகள் போடுபவர்களிடம் இருந்து உங்கள் வாக்குகளைப் பாதுகாப்பதற்கான ஒரே வழிவகை என்ற நிலையில் வாக்களிப்பது எப்படி என்பதை இங்கு பார்க்கலாம்.

வாக்குச் சீட்டின் மாதிரி ஒன்று இங்கு காட்டப்பட்டுள்ளவாறு இருக்கும்.

**வாக்குச் சீட்டு**
உள்ளூராட்சித் தேர்தல் 2001, யாழ். மாவட்டம்

| | | |
|---|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | | |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | | |
| ஐக்கிய தேசியக் கட்சி | | |
| ஐக்கிய சோசலிசக் கட்சி | | |
| மக்கள் விடுதலை முன்னணி | | |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | | |
| சுயேச்சைக் குழு 1 | | |
| சுயேச்சைக் குழு 2 | | |
| சுயேச்சைக் குழு 3 | | |
| சுயேச்சைக் குழு 4 | | |
| சுயேச்சைக் குழு 5 | | |
| சுயேச்சைக் குழு 6 | | |
| சுயேச்சைக் குழு 7 | | |
| சுயேச்சைக் குழு 8 | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | 15 | | |
| 2 | | | 16 | | |
| 3 | | | 17 | | |
| 4 | | | 18 | | |
| 5 | | | 19 | | |
| 6 | | | 20 | | |
| 7 | | | 21 | | |
| 8 | | | 22 | | |
| 9 | | | 23 | | |
| 10 | | | 24 | | |
| 11 | | | 25 | | |
| 12 | | | 26 | | |
| 13 | | | 27 | | |
| 14 | | | | | |

இந்த வாக்குச் சீட்டில் முதலில் தாம் விரும்பிய கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு ஒருவர் வாக்களிக்க வேண்டும். அந்தக் கட்சியின் சினத்தின் அருகில் உள்ள பெட்டிக்குள் புள்ளடி போடுவதன் மூலம் ஒருவர் தான் ஆதரிக்கும் கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவைத் தெரிவு செய்ய முடியும்.

கட்சிக்கு அல்லது சுயேச்சைக்கு வாக்களிக்காத எந்த ஒரு வாக்குச்சீட்டும்செல்லுபடியற்றதாகும்.

அடுத்ததாக விருப்பு வாக்கைப் பிரயோகிக்க வேண்டும். அப்போது தாம் விரும்பும் வேட்பாளரின் இலக்கத்தின் மேல் புள்ளடி இடவேண்டும்.

ஒருவர் தனது மூன்று விருப்பு வாக்கையும் ஒரு வேட்பாளருக்கே கூடச் செலுத்தலாம். அல்லது மூன்று வேட்பாளர்களுக்கும் செலுத்தலாம்.

மூன்று விருப்பு வாக்குகளையும் ஒருவருக்கே செலுத்த வேண்டுமாயின் முதலில் அவருடைய இலக்கத்தின் மீது புள்ளடி இடல் வேண்டும். அதன் பின்னர் அருகில் உள்ள இரு பெட்டிகளுக்குள்ளும் புள்ளடியை இடல் வேண்டும்.

மூன்று வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்குகளை இட விரும்பின், மூன்று வேட்பாளர்களதும் இலக்கங்களின் மேல் புள்ளடியை இடல் வேண்டும்.

இலக்கங்களின் மேல் புள்ளடி இடப்படாத எந்தவொரு விருப்பு வாக்கும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாது.

கட்சிக்கு வாக்களித்து விருப்பு வாக்கு அளிக்கப்படாது இருந்தாலும் அந்த வாக்குச் சீட்டு கட்சியின் வாக்கு எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆனால், கட்சிக்கு வாக்களிக்காது விருப்பு வாக்கு மட்டும் அளிக்கப்பட்டால் அது செல்லுபடியற்றதாகிவிடும்.

## மனைவி சொல்லே மந்திரம் !



ஆண்களைப் போல பெண்கள் பெரியயாகங்களைச் செய்வதில்லை. ஆட்களைக் கூட்டி சர்ச்சை செய்வதில்லை. காட்டிலும், மேட்டிலும் கடும் தவம் செய்து மந்திர சித்திகளைப் பெறுவதில்லை. ஆனால் இப்படிப்பட்டவர்கள் எல்லாம் பெற்றிருக்கிறார்கள். அதனா ல்தான் உலகமே வணங்கும் சந்நியாசி ஆனாலும் அவன் தாயைப் பார்த்தால் விழுந்து வணங்க வேண்டும்.

ஆனால் தாய் அவனை வணங்கவே கூடாது என்று விதி வகுத்தார்கள். ஆர்ப்பாட்ட ஆன்மீகம் என்பது ஆண்களின் அலை வரிசை. அமைதியான ஆழமான முன்னேற்றம் என்பது வழிபடும் பெண்களின் பக்திக்குக் கிடைத்த பரிசளிப்பு. உதாரணம் சொல்லட்டுமா? வாலி என்கின்ற வானர வேந்தனுக்குத் தன்னைக் கொல்ல இராமன் என்கின்ற வீரன் வந்திருப்பது தெரியாது.

ஆனால் அவன் மனைவி தாரகைக்கோவாலிக்கு வரப்போகும் அழிவும் முன்கூட்டித் தெரிந்ததுவிட்டது. இராமன் வந்திருப்பதும் கூடத் தெரிந்துவிட்டது.

பெண்களின் சிறப்பம்சம் மனதின் உள்முகப் பயணத்தின் உச்சகட்ட பரிசளிப்பு, நடக்கப்போவதை முழுவதுமாக புரியத் தொடங்குதல். ஆனால் காரண காரியங்களைச் சொல்லி விவாதிக்கவோ விளங்கவைக்கவோ பெண்களால் முடியாது. குறிப்பாக எதற்கெடுத்தாலும் ஆதாரம் கேட்கும் ஆண்கள் ஏற்கும்படி அவர்களால் சொல்லமுடியாது.

''எனக்குக் காலையில் இருந்து மனமே சரியில்லை; என்னவென்றே தெரியவில்லை என்னவோ அழுகை அழுகையாக வருகிறது'' என்று அமங்கலமாகப் பேசுவார்கள் மங்கையர்கள். ஆண்களுக்கு இது அறவே பிடிக்காத விடயம். ''உளறாதே... வாயை முடிக்கொண்டு இரு'' என்று ஆணையிடுவது ஆணின் வழக்கம்.

உண்மை என்ன தெரியுமா? உள்ளுணர்வு என்னும் நடத்தை பெண்ணுக்கு வேலை செய்வதுபோல் ஆணுக்கு வேலைசெய்வதில்லை . விமான விபத்து முதல் விவாக விபத்துவரை பல உண்மைகளை உள்ளுணர்வின் மூலம் வெளியிடும் ஆற்றல் பெண்மையின் தனித்திறன். இது பெண்ணுக்கு இறைவன் கொடுத்த வரம்.

இராமன் வந்திருக்கிறான் என்று தாரை தடுக்கத் தடுக்கப் போருக்குப் போனான் வாலி. இறுதியில் தாரை தாரையாய் கண்ணீர் சொரியச் சொரிய இறந்து போனான். பெண்களின் ஆழ்மனம், மேல்மனதிற்கு உண்மைகளைத் தந்து கொண்டே இருக்கும். இது பெண்களுக்குப் பக்தி தருகிற பரிசு.

அலங்கார் கந்தசாமிப் பிள்ளை என்னும் தொழில் அதிபர் ஒரு முறை சொன்னவார்த்தை, ''எத்தனையோ காரண காரியம் எல்லாம் யோசித்துக் கணக்குப் பார்த்து நான் செய்யவேண்டும் என்று நினைத்த விடயத்தைக் கூட என் மனைவி வேண்டாம் என்று சொன்னால் அப்படியே விட்டுவிடுவேன். மீறிச் செய்தால் மிகவும் கஸ்ரப்படுவேன். எனது கணக்குத் தப்பாகப் போய்விடும்'' என்றார்.

''மனைவி சொல்லே மந்திரம்?'' என்று கேலி பேசுகிறீர்களா? மந்திரங்களே மனதின் உச்சநிலையிலிருந்து வெளிப்பட்டவைதான். பூரணமாக முழு மனதிலிருந்து மனைவி எது சொன்னாலும் மந்திரமாகி விடுகிறது!

ஆண்கள் அறிவை நம்புகிறார்கள். மனைவி மனதை நம்புகிறாள்! எனவே மனைவி சொல் மந்திரம் தான்!

பக்தியை பரம்பரைச் சொத்தாக்கி, தலைமுறை தலைமுறையாகப் பெண்கள் எப்படிக் காத்தார்கள்; எப்படிக்காக்கிறார்கள்; எப்படிக் காப்பாற்ற முடியும் என்பதை யெல்லாம் எனக்குத் தோன்றிய வகையில் சித்திரித்துள்ளேன். ஆன்மீக உணர்வு அழறாமல் காப்பதில் ஆள்களைவிடப் பெண்கள் அதிக பங்காற்ற முடியும் என்கின்ற எண்ணத்தின் வெளிப்பாடுதான் இந்தச் சின்னமுயற்சி.

மங்கையர் யாவரும் இந்த மாதவம் தொடர சங்கல்பம் செய்துகொள்ள வேண்டுகிறேன். பராசக்தியின் அம்சமாக வலம் வரும் தாய்க்குலத்தை

''நமஸ்தஸ்யை, நமஸ்தஸ்யை,நமஸ்தஸ்யை நமோ நமஹ '' என்று மனம்மெய் மொழிளால் நமஸ்க்ரிப்போம்.

சுகி.சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதயன் வெளியீடான
# கல்விச்சுடர்

தரம் 05 மாணவர்களை இறுதிப்பரீட்சைக்கு தயார்ப்படுத்துவதற்கான விசேட தொடர் வெளியீடு




எஸ். கபிலன்,
லோட்டஸ் அக்கடமி,
வவுனியா.


பரீட்சை இலக்கம்: 10

## தரம் 05 புலமைப் பரிசில் படிமுறைப் பரீட்சை - 2011

பெயர்/சுட்டெண்:........................ | **வினாத்தாள்-1** | நேரம்: 45 நிமிடங்கள்

* **எல்லா வினாக்களுக்கும் தரப்பட்ட அறிவுறுத்தல்களின்படி விடையளிக்குக.**
* **வித்தியாசமான உருவைத் தெரிவுசெய்க.**

01. 
1) 2) 3) 4)

02. 
1) 2) 3) 4)

* **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

03. அபிநாத் காலையில் எழுந்தான். பாடங்களைக் கற்றான். தூய நீராடினான். உணவை உண்டான். பாடசாலை ...............................
1) சென்றான் 2) உண்டான் 3) வந்தான் 4) செய்தான்

04. தினை விதைத்தவன் தினை அறுப்பான். வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்பதன் பொருள்,
1) ஒருவர் செய்த செயலின் பயனை அ[illegible]ப்பர.
2) முயற்சி உயர்ச்சி தரும்
3) முயற்சி திருவினையாக்கும் என்பதாகும்.
4) பயிற்சி உயர்ச்சி தரும்.

05. கடகம் என்பதனை △□△⊡ இவ்வாறு எழுதப்பட்டிருந்தது. "கந்தவனம்" எனும் சொல்லை சரியாக எழுதக்கூடிய விதத்தை தெரிவுசெய்க.
1) □⊡⊙○◬⊟ 2) △⊡⊙○◬⊟
3) ⊡△⊙○◬⊟ 4) △⊡⊙○◬△

* **பின்வரும் பிரசினங்களை விளங்கிக்கொண்டு அதற்கினங்க 6-8 வரையான வினாக்களுக்கு விடை தருக.**


| | | |
|---|---|---|
| க | ட | ம |
| க | ட | ம |
| | ட | ம |
| 8 | 6 | 9 |

06. க + ம =
1) 7 2) 10 3) 8 4) 6

07. ட × ம = வின் பெறுமதி
1) 8 2) 6 3) 8 4) 10

08. க ÷ ட = பெறுமதியாக வரும் எழுத்து,
1) க 2) ப 3) ட 4) ம

09. இவ் இரண்டு அடுக்குகளிலும் எத்தனை செங்கற்கள் உண்டு?



(...............................)

10. இங்கு நீர்நிரம்பிய போத்தல்களில் எத்தனை ml நீர் உண்டு (1 போத்தல் = 750ml)



= .....................ml

11. 

இத்தொழிற்பாடு காட்டுவது,
1) விவசாயி நிலத்தைக் கொத்துவது
2) நீர்ப்பாய்ச்சுவது
3) களை பிடுங்குவது
4) வரம்பு கட்டுவது

12. 

இங்கு காணப்படும் விளையாட்டின் மூலம் இலங்கைக்கு பெருமையைத் தேடித்தந்தவர். இவரின் பெயர் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.
1) முத்தையா முரளிதரன் 2) சங்கக்காரா
3) சனத் ஜெயசூரிய 4) மஹேல ஜயவர்த்தன

13. வாக்காளர் இடாப்பில் பிரதியொன்றைப் பெறுவதற்கு செல்லவேண்டிய இடம்.
1) மாவட்டச் செயலகம் 2) பிரதேச செயலகம்
3) பிரதேச சபை அலுவலகம்
4) மாவட்ட தேர்தல் ஆணையாளர் அலுவலகம்


* பின்வரும் அட்டவணையைக் கவனிக்குக.

| இந்திக்கா | சதீஸ் | ரமேஸ் | அபிநயா |
|---|---|---|---|
| 2kg அரிசி | 4kg அரிசி | 1kg அரிசி | 3kg அரிசி |
| 1kg பருப்பு | 2kg பருப்பு | 2kg பருப்பு | 4kg பருப்பு |
| 1kg மிளகாய் | 1kg மிளகாய் | 2kg மிளகாய் | 3kg மிளகாய் |


14. கடையில் கொள்வனவு செய்த பொருள்களில் அதிகளவு நிறையை வாங்கியவர்,
1) இந்திக்கா 2) சதீஸ் 3) ரமேஸ் 4) அபிநயா

15. ஒரு வகுப்பில் உள்ள நான்கு பிள்ளைகளின் பிறந்த தினங்கள் கீழே காட்டப்படுகின்றன.
அபிநாத் - 10.05.2002 அபிசாந் - 19.12.2002
பௌர்ணிமா - 20.06.2002 அன்பழகன் - 01.01.2002
இவர்களில் மூத்தவர் யார்?
1) அபிநாத் 2) அபிசாந் 3) பௌர்ணிமா 4) அன்பழகன்

* 16ஆம், 17ஆம் வினாக்களில் காட்டப்பட்டுள்ள எண் கோலங்களை அவதானித்து வெற்றிடத்துக்குப் பொருத்தமான பெறுமானத்தைத் தெரிவுசெய்க.

16. 


1) 50 2) 48 3) 45 4) 40

17. 


1) 60 2) 55 3) 78 4) 37

18. கீழே தரப்பட்ட பென்சிலைப் போல் மூன்று மடங்கு குமார் வாங்கிய பென்சில் ஆகும். குமார் வாங்கிய பென்சிலின் நீளம் யாது?



1) 7cm 2) 3.5cm
3) 10.5cm 4) 14cm


19. இவ் வீதிக்குறி வெளிப்படுத்துவது,
1) பாதசாரிகள் கடக்கும் இடம்.
2) மாணவர்கள் கடக்கும் இடம்.
3) பாதையைக் கடத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.
4) நடந்து செல்லக் கூடாது.




20. 

இக் காட்சி புலப்படுத்துவது,
1) மலைக்காட்சி 2) மாலைக்காட்சி
3) இரவுக்காட்சி 4) கடற்காட்சி

21. அருகிலுள்ள படம் காட்டுவது,
1) பாரம்பரிய கரை வடிவமைப்பு
2) நீரலை
3) சீப்பு
4) தனியிழை



22. உடற்கல்வி பாடத்தின்போது மாணவர்களுக்கு பயிற்றுவிக்கப்பட்ட சில காட்சிகள், இவை குறிப்பது,
1) விலங்கினங்களின் நடைகள்.
2) பறவைகளின் நடைகள்.
3) மனிதரின் நடைகள்.
4) மூத்தோரின் நடைகள்.



* பின்வரும் பாடலை வாசித்து விளங்கிய பின்பு வினாவுக்கு விடைதருக.

**"உழுத்தம் புலத்தானே**
**உத்தம விநாயகனே**
**பழுதின்றி கவிபாட**
**பாவிக்கு நீ காப்பு"**

- கவிஞர். த. நாகேஸ்வரன் (தென்மராட்சி)


23. "கவி" என்ற சொல்லின் பொருள்,
1) பாட்டு 2) கதை 3) நாடகம் 4) நாட்டியம்

24. இப் படங்கள் மூலம் புலப்படுத்தும் காட்சி,




1) சிறுவன் பாடசாலை சென்று கற்கும் காட்சி.
2) சிறுவர்கள் டெங்கு சிரமதானப் பணியில் ஈடுபடும் காட்சி.
3) சிறுவர்கள் விளையாடும் காட்சி.
4) ஆசிரியர் கற்பிக்கும் காட்சி.

25. தோலினால் ஆக்கப்பட்ட இசைக்கருவிகள் மூலம் காட்டப்படும் படம் யாது? பொருத்தமான உருவின் கீழ்க் கோடிடுக.




26. ஓட்ட வீரர் ஓடி முடிந்தவுடன் செய்ய வேண்டியது,
1) தண்ணீர் குடித்தல். 2) வெற்றியைக் கொண்டாடல்.
3) எளிய பயிற்சியில் ஈடுபடல். 4) உடலை நீரினால் நனைத்தல்.

(17ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நாய்கள் கவனம்" அண்ணன் வருகின்றான்



உங்கள் வீடுகளில்
நாய்கள் நிற்கிறதா என்பதை
அறியவே
அண்ணன் சைக்கிளில் வருகிறான்

உன் தங்கையவள் கற்பை
உன் கண்முன்னே
கடவாய் வழிய வழிய சுவைத்தவன்.
வெள்ளை வானில் வந்துன்
தம்பிதனை அள்ளிப்போனவன்.
பாலூட்டி சீராட்டி வளர்த்த தாயை
நீயே பார்த்திருக்க
சுவைத்துச் சுவைத்துச் சிதைத்தவன்.
எல்லோருக்கும் அடி வருடிப் பிழைப்பவன்
இப்போ ஈருருளி மிதித்துந்தன்
வாசல் வருகின்றான்,
மிஞ்சி நிற்கின்ற உன்வீட்டு
நாயின் தலை தேடி....

நன்றியுள்ள பிராணி - அது
உன்னை நம்பி நின்ற பிராணி
அதனால்; அதனையேனும்
காப்பாற்ற வீட்டோடு (வீடு)இரு

வெற்றிலை - அது வெறும் இலை;
வீணை - அது எம் தேசத்துக்கு இதுவரை
ஒப்பாரியையும் முகாரியையும்
மட்டுமே வாசித்திருக்கிறது
இனியும் ஒப்பாரியையா கேட்கப் போகிறோம்?

தெருத்தெருவாய் எங்கள்
உதிரங்களும், உடலங்களும்
சிந்தப்பட்டதும் சிதறப்பட்டதும்
காப்பெற் வீதிகளுக்கும்
களியாட்டங்களுக்கும் தானா?

எங்கள் பணத்தில் பாதியைக் கூட
செலவிடாது அமைக்கப்படும்
காப்பெற் வீதிகளும் வசதிகளும்
அவர்கள் இட்ட இலவசங்களா?

அது - எங்கள் உழைப்பு
அது - எங்கள் வரிப்பணம்
அது - எங்கள் உரிமை
அது எவனாவது போடும் பிச்சையல்ல!
அதற்கு எதற்கு கைமாறு..?

இப்போது வெளுக்கத் தொடங்குவது
எங்கள் தேசத்தின் இருளல்ல...
பேரினவாதத்தின் கோரமுகம்
எங்கள் நகரங்களின் "இதயங்களில்" படைமுகாம்
சந்திக்குச் சந்தி அரசமரமும் "அவதாரமும்"
புரிய மறுத்த சிலருக்கும் கூட இப்போ புரிகிறது
அனல் பறக்கும்
சனல் - 4 இன் கோரக் காட்சிகளில் இருந்து

சனல் - 4 காட்சிகளுக்கு
எம்மை நடிகர்களாக்குவதற்காகவே
இன்னும் வீணை வாசிக்கின்றான் அண்ணன்
என்பதை மறந்துவிடாதே

மானத் தமிழ்த் தாயின்
சிதை மீது நாயினைச் சுட்டுப்போட்ட
நாய்களுக்கா வாக்களிப்பீர்?

குழிகளில் உறங்கிய உங்கள் விழி
மணிகளைக்கிளறி உலகிலே இல்லாத
கேவலம் புரிந்த
நரிகளுக்கா வாக்களிப்பீர்?

நாய்களை நறுக்கி ஆங்காங்கே
தொங்கவிடும் நாகரிகம்
வேண்டுமென்றா வாக்களிப்பீர்?

இன்று நாய் தேடி அறுப்பவன்
நாளை உன் தாய் தேடி முலையறுப்பான்
தங்கை கற்பை உன் கண்முன் சுவைப்பான்
தம்பி தனயன் உயிர் குடிப்பான்
30 வருடத்துக்குப் பின்னர்
நீ வேண்டுவதெல்லாம் இதுதானா?

- சுதாகரன்

---

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)


27. வெற்றியடைய விரும்பும் மாணவனுக்கு எப்போதும் இருக்கவேண்டியது,
1) விடாமுயற்சியும் பயிற்சியும். 2) பாடசாலையும் நூலகமும்.
3) பாடசாலையும் ரியூசனும். 4) சைக்கிளும் புத்தகமும்.

28. அபிநாத் "அமாவாசை நாளில் சந்திரனைக் காணமுடியும்" என்று கூறினான். இது நடைபெற இயலாது. இதற்குக் காரணம்,
1) அமாவாசை நாளன்று பூரண இருட்டாக இருக்கும்.
2) அமாவாசை நாளன்று சந்திரனைக் காணலாம்.
3) பௌர்ணமி நாளன்று சந்திரனைக் காணலாம்.
4) இரவில் சந்திரனைக் காணமுடியாது.

29. இப்பாடலில் நன்றாக விவரிக்கப்பட்டுள்ள பொருள் எது? பொருத்தமான உரு யாது?
எக்காலமும் பெறலாம்
ஏழைகளின் ஆப்பிளாம்
இதில் பலவகை உண்டு
சிறுவர் விரும்பி உண்பார்களாம்.


1) 2) 3)

30. வேறு நிறங்கள் தீட்டப்பட்ட மரச் சதுரமுகி ஒன்றின் இரு நிலைகள் கீழே காட்டப்படுகின்றன.




இச் சதுரமுகியில் கறுப்பு நிறம் பூசப்பட்ட பகுதிக்கு எதிரான பக்கத்தின் நிறம் யாது? ..........................................................

31. இலங்கையில் பதிவுத்தபால் அனுப்புவதற்கு ஒட்டவேண்டிய முத்திரையின் பெறுமதி?
1) 30 ரூபா 2) 10 ரூபா 3) 40 ரூபா 4) 50 ரூபா

32. ஒரு பிஸ்கட் பையின் நிறை, ஒரு தேயிலைப் பைக்கற்றின் நான்கு மடங்காகும். ஒரு தேயிலைப் பைக்கற்றின் நிறை 375g எனின், பிஸ்கட் பையின் நிறை யாது?
1) 1500g 2) 1000g 3) 2000g 4) 4000g

33. சதீஸிடமுள்ள பணத்தின் நான்கு மடங்கு ரமேஸிடம் உள்ளது. சதீஸிற்கு ரமேஸ் ரூபா 150 கொடுத்தால் இருவரிடமுள்ள பணத்தொகை சமனாகும். இப்போது ரமேஸிடம் உள்ள பணம்,
1) 100 ரூபா 2) 200 ரூபா 3) 300 ரூபா 4) 500 ரூபா

34. ஒரு கட்டடத்துக்கு வர்ணம் பூசுவதற்கு 6 லீற்றர் 750ml வர்ணப் பூச்சு தேவை. ஒரு லீற்றர் வர்ணப்பூச்சின் விலை 220 ரூபா ஆகும். வர்ணப்பூச்சு வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை?
1) 1485 ரூபா 2) 1500 ரூபா 3) 1700 ரூபா 4) 2000 ரூபா

35. ஒரு குவியலில் உள்ள தோடம்பழங்களை ஒருவருக்கு ஆறு வீதம் பங்கிட்டு 12 பேருக்கு கொடுக்கலாம். அதனை ஒருவருக்கு 8 வீதம் கொடுத்தால், எத்தனை பேருக்கு கொடுக்கலாம்?
1) 9 பேர் 2) 10 பேர் 3) 12 பேர் 4) 100 பேர்

36. ஆமையின் முட்டையின் நிறம் யாது?
1) கறுப்பு 2) நீலம் 3) வெள்ளை 4) பச்சை

37. அயடீன் கலந்த உப்புப்பொதியில் பின்வரும் அடையாளம் இடப்பட்டிருந்தது. இதன் கருத்து,



1) உப்பை நீரில் கழுவலாம். 2) நன்கு கழுவவும்.
3) நீரில் கழுவிய பின்பு பாவிக்கவும்.
4) உப்பை நீரில் கழுவக் கூடாது.


* பின்வரும் கவிதையைக் கொண்டு 38 ஆம், 39ஆம் வினாக்களுக்கு விடை தருக.

**செக்கச் சிவந்த செங்கதிரோனும்**
**கிழக்கினில் வந்து விட்டான் - புவி**
**மக்கள் கண்விழித்துக் கிளம்பிட**
**வானில் உதித்து விட்டான்**

38. "செங்கதிரோன்" என்பதன் கருத்து யாது?
..........................................................

39. பெயராகவும் வினையாகவும் அமையக்கூடிய சொல் ஒன்று எழுதுக.
..........................................................

40. நீரைக்கொண்டுள்ள கண்ணாடிக்குவளையில் சிறிதளவு மண்எண்ணெயை இட்டு சிறிது நேரத்தில் அவதானிக்கக் கூடியது.



1) 2) 3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனேயே எமது மக்கள் எப்பொழுதும் நிற்கிறார்கள்

## வலி.மேற்கு வேட்பாளர் ராஜ்குமார் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஜூலை 19

தமிழ்மக்கள் யார் பக்கம் நிற்கின்றார்கள். எதிர்வரும் தேர்தல் முடிவுகளை எதிர்பார்த்து நிற்கும் சர்வதேசத்துக்கும் நாம் அளிக்கும் பதில் என்ன? தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன்தான் நிற்கின்றார்கள் என்பதை நாம் இன்றைய நிலையில் உலகுக்கு எடுத்துக் காட்டவேண்டும் எனக் கூறுகின்றார் வலி.மேற்கு உள்ளூராட்சிச் சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் நடராசா பிரான்சிஸ் ராஜ்குமார்.



அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை தொழில்நுட்ப நிறுவனத்தின் 21 வருடம் போதனாசிரியராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுள்ளேன். எனது ஓய்வு காலத்தில் எமது மக்களுக்கான சேவையை இச் சபை மூலம் செயற்படுத்துவதற்காக தமிழரசுக் கட்சியின் (த.தே.கூ.) வேட்பாளராகக் களமிறங்கியுள்ளேன்.

முள்ளிவாய்க்காலுடன் போர் முடிந்துவிட்டது என அரசு கூறுகின்றது. ஆனால் எமது தமிழ் மக்களின் எழுச்சிப் போர் தொடர்கின்றது. சர்வதேசமே எம் மீது முன்னரை விட தமது பார்வையைச் செலுத்துகின்றது.

தேர்தலுக்காக இங்கு முகாம் இட்டிருக்கும் அமைச்சர்கள் எம்மைப் பற்றிச் சிந்திக்கவில்லை. எம் இனத்தின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கவில்லை. பாதைகள் புனரமைப்பு, அடிக்கல் நாட்டுதல், அன்பளிப்புச் செய்தல் போன்றவை மட்டும் தமிழ் மக்களுக்கு இன்று தேவையில்லை. மக்களின் சுதந்திரம் தான் முக்கியமாகத் தேவைப்படுகின்றது. சுதந்திரமான மனிதன் எதையும் தீர்க்கதரிசனமாக செய்து கொள்வான். அந்தச் சுதந்திரம் மனிதனுக்கு இல்லாதபோது அபிவிருத்தி எதற்கு? - என்றார்.

(த)

# முள்ளிவாய்க்கால் வரை சென்றவர்கள் தில்லுமுல்லுகளுக்கு இடமளியாதீர்

## கூட்டமைப்பு வேட்பாளர் அமிர்தலிங்கம்

அரசின் தில்லுமுல்லுகள் நிறைந்த இந்தத் தேர்தலில் மக்கள் விழிப்போடு தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு வாக்களிக்க வேண்டும் என்கிறார் துணுக்காய் பிரதேச சபைக்கான தமிழ்த்தேசிய கூட் டமைப்பின் வேட்பாளர் செல்லையா அமிர்தலிங்கம்.



எங்கிருந்தோ வந்தவர்கள் எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்கிறேன் என்று தேர்தலில் குதித்திருதுக்கின்றார்கள். இவர்களது செயற்பாடுகள் குறித்து துணுக்காய் பிரதேச மக்கள் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும் என துணுக்காய் பிரதேச சபைக்கான தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர் செல்லையா அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உண்மையான அரசியல்வாதியாக இருந்தால், உண்மையான ஜனநாயகவாதியாக இருந்தால் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களின் அரசியல் செயற்பாடுகளில் எங்கிருந்தோ வந்தவர் தலையிட்டிருக்க மாட்டார். போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உண்மையாக சேவையாற்ற வேண்டுமானால், அரசுக்கு வால்பிடித்துக்கொண்டிருக்கும் அவர் அரசாங்கத்தின உதவியோடு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பதவியில் இருந்து கொண்டே காரியங்களைச் செய்யலாமே. அதைவிட்டு. முன்பின் அறிமுகமில்லாதவர்களையெல்லாம் தனது அணியில் சேர்த்துக்கொண்டு அவர்களை தேர்தலில் போட்டியிடச் செய்து வெற்றியடையச் செய்ய வேண்டும் என பிடிவாதமாக ஏமாற்று அரசியல் செய்து கொண்டிருக்கின்றார். இவரது அரசியல் நோக்கம் குறித்து மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

தில்லுமுல்லுகள் நிறைந்த இந்தத் தேர்தலில் மக்கள் மிகவும் விழிப்புடன் வாக்களிக்க வேண்டும். முள்ளிவாய்க்கால் வரை சென்ற எமது மக்கள் தாங்கள் அனுபவித்த துன்ப துயரங்களை மீண்டும் நினைவுபடுத்த வேண்டிய அவசியமில்லை. அந்தத் துயரங்களையும் அதற்கான நியாயமான காரண காரியங்களையும் மனதில் நிறுத்தி எதிர்வரும் 23 ஆம் திகதி அனைவரும் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பை வெற்றிபெறச் செய்ய வேண்டும்.

இப்படி அவர் கூறியுள்ளார்.

# பெண்கள் மீது திணிக்கப்படும் வன்முறைகளுக்கு எதிராக இந்தத் தேர்தலில் நாம் வாக்களிப்போம்

## கூட்டமைப்பு வேட்பாளர் திருமதி நா.ஐங்கரன்

காலம் காலமாகப் பெண்கள் மீது திணிக்கப்பட்டுவரும் வன்முறைகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பதற்கு உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகத்தைக் கைப்பற்றுதல் அவசியமாகின்றது. எனவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களியுங்கள் என வேண்டுகோள் விடுகின்றார் உள்ளூராட்சித் தேர்தலில் வலி.மேற்குப் பிரதேச சபைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் திருமதி நா.ஐங்கரன்.

போரினால் பாதிக்கப்பட்ட விதவைகள், உடல் அவயவங்களை இழந்த பெண்கள், குழந்தைகள், வறிய மாணவர்கள் ஆகியோருக்கு உரிய உதவிகள் வழங்கப்பட வேண்டும். வறிய நிலையிலுள்ள கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்வடையச் செய்தல் வேண்டும். இதேவேளை விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு உரிய சந்தை வசதிகள் வழங்கப்படுதல் வேண்டும்.

மேலும் வலி. மேற்குப் பிரதேசத்திலுள்ள வீதிகள் - உடனடியாகப் புனரமைக்கப்பட வேண்டிய நிலையிலுள்ளன.

மேலும் முன்பள்ளிகளுக்குரிய வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும். குடிதண்ணீர், சீரான மின்சாரம் ஆகியன மக்களுக்கு குறைவின்றி வழங்கப்பட வேண்டும்.

உள்ளூராட்சி அதிகார வரம்புக்குட்படாத வேலைத்திட்டங்கள் அரசு மற்றும் அரசசார்பற்ற மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கூடாக மேற்கொள்ளப்படவேண்டும்.



இவையெல்லாம் நிறைவேற்றப்படுவதற்கு ஏதுவாக உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகங்கள் எம்மிடத்தில் இருத்தல் வேண்டும்.

ஆகவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து வாக்காளர்கள் எம்மைத் தெரிவு செய்தல் வேண்டும்.

## தேர்தல் களம் 2011

# உரிமையை வென்றெடுப்பதற்கு கூட்டமைப்புக்கு வாக்களியுங்கள்

## வலி.தென்மேற்கு வேட்பாளர் மகேந்திரன் கூறுகிறார்

கடந்த கால போரினால் வடக்குப் பிரதேசம் முற்றாக அழிவடைந்துள்ளது. வலி. தென்மேற்கு பிரதேசத்தின் முழுமையான அபிவிருத்திக்கும் எமது உரிமையை வென்றெடுக்கவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களியுங்கள்.



இவ்வாறு வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்கு வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் பண்டத்தரிப்பு பிரான்பற்றைச் சேர்ந்த சி.மகேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

வலி.தென்மேற்கு பிரதேச சபை 28 கிராம அலுவலர் பிரிவைக் கொண்ட பரந்து விரிந்த பிரதேசம். இப்பிரதேசம் தற்போது வீதி, வீடமைப்பு, சன சமூக அபிவிருத்தி, சிறு பாலங்களின் அபிவிருத்தி, மின்சாரம், நீர் போன்ற விடயங்களில் பெரும் பின்னடைவை சந்தித்து அழிவடைந்து வருகின்றது.

அபிவிருத்தி, வளர்ச்சி என்பது இங்கு முற்றுமுழுதாகக் காணப்படவில்லை. தற்போது நெல்சிப் ஊடாக சொற்ப அளவு மில்லியன் ரூபாவே எமது பிரதேசத்தின் அபிவிருத்திக்கு செலவிடப்படுகின்றது.

மிகுதி 180 மில்லியன் ரூபாவை பயன்படுத்த வேண்டும் - என்றார்.

(த-302)

# தமிழ் மக்களின் அபிலாஷைகளை கூட்டமைப்பு விட்டுக்கொடுக்காது

## அதற்கு வாக்களிக்குமாறு கோருகிறார் லோகசிங்கம்

யாழ்ப்பாணம்,ஜூலை 19

எத்தனை சோதனைகள் வந்தாலும் தமிழ் மக்களது அபிலாஷைகளை விட்டுக்கொடுக்காத தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கே அனைவரும் வாக்களியுங்கள்.

பருத்தித்துறை பிரதேச சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களில் ஒருவரான மாணிக்கம் லோகசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.



நீங்கள் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதன் நோக்கம்.

தமிழ்மக்கள் தொடர்ந்தும் இன்னல்களை அனுபவிக்கக் கூடாது. அந்த வகையில் அவர்களது அபிலாஷைகளை எந்தனை சோதனைகள் வந்தாலும் விட்டுக்கொடுக்காத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர்களுடன் நான் இணைந்து அதற்கு வலுச்சேர்ப்பதுடன் 1948 ஆம் ஆண்டிலிருந்து சம உரிமைகளுக்காக மேற்கொண்டு வரும் பிரயத்தனம், அது எட்டும்வரை நின்றுவிடக்கூடாது என்பதற்காகவும் தமிழ் மக்களின் கரங்களை ஒன்று சேர்த்து ஆதரவு வழங்குவதே எனது நோக்கமாகும்.

இத்தேர்தலில் நீங்கள் வெற்றியடைந்தால் வீதிகள், ஒழுங்கைகளை செப்பனிடவும் மின்வசதிகளை உண்டாக்கவும் வழிவகுப்பீர்கள்.

சம உரிமைகள் நிலை நிறுத்தப்படுமாயின் பொருளியல் மேம்பாடு, கல்வி மேம்பாடு, உட்கட்டமைப்பு மேம்பாடு போன்றவை தானாகவே வந்து சேரும் ஆகவே பாதைகளைத் திருத்துவேன், மின்வசதியை உண்டாக்குவேன் போன்றவற்றைக் கூறி இத்தேர்தலில் நான் வேட்பாளனாக நிற்கவில்லை. இந்த நாட்டில் உள்ள அனைத்து மக்களும் சம உரிமைகளைப் பெற வேண்டும். தமிழ்மக்கள் தமது வாக்குப் பலத்தைப் பயன்படுத்தி நிலைப்பாட்டினை உள்ளூரிலும் வெளியூரிலும் தெரிவிக்கவேண்டும். அதுவே எமது குறைகளைத் தீர்ப்பதற்கு வழியை உருவாக்கும்.

முள்ளிவாய்க்கால் பகுதியில் இறுதிக் கட்ட யுத்தத்தில் சிக்கிய எமது உறவுகள், மாற்று உடையின்றி தவித்தபோது உடைகளை வழங்காத அரசு தற்போது வடபகுதியில் வாக்காளர்களுக்கு உடு துணிகளை வழங்குவது குறித்து நீங்கள் என்ன கூறுகின்றீர்கள்?

அவற்றைப் பற்றி புரியும் ஆற்றல் எமது மக்களுக்கு உண்டு. எனவே கூட்டமைப்புக்கு வாக்களிக்கும் மக்களின் நோக்கம் புலம் பெயர்ந்த தமிழ் உறவுகளின் காத்திரமான பங்களிப்பும் நிறைவேற்றப்படவேண்டும் என்று கூறினார் (த-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் சம்பவத்தை மூடிமறைக்கத் துணைபோகாதீர்



## கூட்டமைப்பின் வேலணை பிரதேச சபை வேட்பாளர் மு.சிவராசா

நடக்கப்போகும் தேர்தல் எமது பலத்தை சர்வதேசத்துக்கு வெளிக்காட்டப் போகும் தேர்தல். இந்த நிலையில் அரசு சார் கட்சிகளுக்கு வாக்களித்து முள்ளிவாய்க்காலில் இடம் பெற்ற சம்பவங்களை மூடி மறைக்கத் துணை போகாதீர். இவ்வாறு கூறியுள்ளார் தமிழரசுக் கட்சியின் வேலணை பிரதேச சபையில் போட்டியிடும் மு.சிவராசா

கடந்த 29 வருடங்களாக இலங்கைப் போக்குவரத்துச் சபையில் சாரதியாகவும் சாலைப் பரிசோதகராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள இவர் தேர்தலில் இறங்கியுள்ளமை தொடர்பாக உதயனுக்குக் கருத்துக் கூறியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்;

40 வருடங்களாகத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினராக இருக்கும் நான் 1970 களில் க.பொ. இரத்தினத்துடன் இணைந்து மக்கள் சேவையாற்றியுள்ளேன்.

வேலணைப் பிரதேச மக்களின் அபிவிருத்தி தொடர்பில் உரிய வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. பின்தங்கிய ஒரு பகுதியாகவே எமது பிரதேசங்கள் காணப்படுகின்றன. மக்களுக்குத் தேவையானவற்றை உரியவகையில் பெற்றுக் கொடுப்பதே எமது நோக்கம். குடிதண்ணீர் வசதிகளில் இருந்து ஏனைய அபிவிருத்தி வரை நிறைவாகச் செயற்படுத்தப்பட வேண்டும். இதற்கு நாம் முன்னின்று உழைப்போம்.

இந்த நிலையில் நாம் எமது பிரதேசத்தில் சுதந்திரமாகப் பிரசாரங்கள் செய்யவோ கூட்டங்களை நடத்தவோ முடியாத நிலைமையே காணப்படுகிறது.


ஒரு சில கட்சிகள் இதற்குப் பெரும் தடை விதித்துள்ளன. எனினும் நாம் எமது மக்களுடன் உரையாடி வாக்களிக்க வேண்டியதன் அவசியம் குறித்து விளக்கி வருகின்றோம். வீட்டுக்கு எமது மக்கள் ஒன்றிணைந்து வாக்களித்து வாக்குப் பலத்தைச் சர்வதேசத்துக்கு எடுத்துக் காட்ட வேண்டும்.

எம்மிடமுள்ள இறுதி ஆயுதம் இது ஒன்றுதான். இதை நாம் சரியான வகையில் பயன்படுத்த வேண்டும். எமது உரிமையை இதனூடாக வெளிப்படுத்த வேண்டும். எமது வாக்குகளைப் பலப்படுத்திப் புலம்பெயர்ந்துள்ள தமிழர்கள் எமது விடிவுக்காக மேற்கொண்டு வரும் போராட்டங்களுக்கு இன்னும் வலுச் சேர்ப்போம்.

முடிந்து போனவற்றை நினைத்துக் கொண்டிருக்கக்கூடாது. இதேவேளை முடிந்துபோன முள்ளிவாய்க்கால் பிரச்சினையை மூடி மறைக்க அரச தரப்பினர் மேற்கொள்ளும் சதி வலைக்குள் சிக்கி விடவும் கூடாது - என்றார். (ம-14)

# அரசு கிள்ளிப் போடும் தீர்வை பெறத் தமிழர் தயாராக இல்லை

## வலி.தெற்குப் பிரதேச சபை வேட்பாளர் இராசா குமாரசுவாமி



யாழ்ப்பாணம், ஜூலை 20

இன்றைய சூழலில் தமிழ் மக்களுக்கென ஒரு தனித் தலைமைத்துவம் தேவையில்லை என்று அரசு நினைக்கிறது. தாம் கொடுக்கும் தீர்வையே தமிழ் மக்கள் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று அரசு விரும்புகிறது.

அரசு கிள்ளிப்போடும் தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளத் தமிழ் மக்கள் ஒருபோதும் தயாராக இல்லை. எமக்கான ஒரு தீர்வை நாமே பெற்றுக் கொள்ள வேண்டும்.

இதற்குத் தமிழ் மக்கள் ஒன்றிணைந்து தேர்தலில் வாக்களிக்க முன்வரவேண்டும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் வலி. தெற்குப் பிரதேச சபையில் போட்டியிடும் வேட்பாளர் இராசா குமாரசுவாமி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உதயனுக்கு அவர் வழங்கிய செவ்வி ஒன்றிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். அவரது செவ்வியின் விவரம் வருமாறு:

இன்றைய அரசியல் சூழலில் அரசு தமிழ் மக்களுக்குக் கென ஓர் அரசியல் தலைமைத்துவம் தேவையில்லை. தமிழ் மக்கள் அரசு கொடுக்கும் தீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனும் அடிப்படையில் செயற்பட்டு வருகின்றது.

அதற்கான வாய்ப்பை நாம் வழங்கக்கூடாது என்பதற்காகவும் எமது பிரதேசத்தின் அபிவிருத்தியை நாமே மேற் கொள்வதற்கான பிரதேச ரீதியான அரசியல் தலைமைத்துவத்தையும் ஏற்படுத்தவேண்டும் என்பதற்காகப் போட்டியிடுகின்றேன்.

எமது பிரதேசத்தின் அபிவிருத்தியில் அக்கறை கொண்டவர்கள் என்பதால்தான் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுகின்றோம். நீதியான அரசியல் தீர்வுக்கு உழைப்பதோடு பிரதேச அபிவிருத்தியையும் முன்னெடுக்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம்.

பிரதேச சபையை ஒரு முன்னுதாரணமான சபையாகச் செயற்பட வைக்கவேண்டும் என்பது எனது இலட்சியம். அதற்காக அரசியல் வேறுபாடுகளின்றி அனைத்து உறுப்பினர்களையும், சமூக அக்கறை கொண்டவர்களையும் அங்கத்தவர்களாகக் கொண்டு நிதி மற்றும் கொள்கை வகுத்தல், வீடமைப்பு மற்றும் சனசமூக அபிவிருத்தி, கைத்தொழில் சேவைகள், சுற்றாடல் மற்றும் வசதிகள் என்பவற்றுக்கான ஆலோசனைக்குழுக்களை நிறுவி மக்கள் பங்களிப்புடன் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுப்பதில் முன்னின்று உழைப்பேன்.

தமிழ் மக்களின் செல்வாக்கு அரசுக்கு உள்ளது எனக் காண்பிப்பதற்கே அமைச்சர்கள் களம் இறக்கப்படுகின்றார்கள். வவுனியா மாவட்டத்தில் நடத்தப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 45 வீத வாக்குகளும் அரசுக்கு 49 வீத வாக்குகளும் கிடைத்தது எனப் பிரசாரம் செய்கின்றது.

அதன்மூலம் தமிழ் மக்களுக்கு அரசியல் தலைமைத் துவம் தேவையில்லை என்று உறுதிப்படுத்த விரும்புகின் றது. எமது பிரதேச சபைக்குட்பட்ட மக்கள் நமது மறுக்கப்பட்ட உரிமைக்களுக்காகக் குரல் கொடுத்து வரும் தமிழ்க் கட்சிகளையே ஆதரிப்பார்கள். அவர்களிடம் இன்று போதியளவு விழிப்புணர்வு உள்ளது. அமைச்சர்களின் பிரசாரம் மாற்றங்களை ஏற்படுத்தப் போவதில்லை. இது விடயத்தில் எமது மக்கள் மிகவும் தெளிவுடன் இருக்கிறார்கள் - என்றார். (ம)

தேர்தல் களம் 2011

# எமது இனத்தையும் மண்ணையும் காக்க வேண்டிய பொறுப்பு எம்மிடம்

## சுன்னாகம் பிரதேச சபை கூட்டமைப்பு வேட்பாளர் தியாகராஜா பிரகாஷ்



கடந்த காலத்தில் இடம் பெற்ற அநியாயமான கொலைகள், கடத்தல்கள் மற்றும் காணாமல் போதல் ஆகிய நடவடிக்கைகளினால் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட எம்மவர்கள் தயக்கம் காட்டி வருகின்றார்கள்.

இந்த நிலையில் எமது இனத்தையும் மண்ணையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் கடமையும் எமது இளைய தலை முறையினரின் கைகளில் தங்கியுள்ளது. இத்தகைய நிலைமையில் வலி. தெற்குப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் முகமாக இந்தத் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளேன்.

வலி.தெற்குச் சுன்னாகம் பிரதேச சபைக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் தியாகராஜா பிரகாஷ் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த காலத்தில் பல்வேறு துன்ப துயரங்களுக்கும் உள்ளாகிய எம்மக்கள் வசதியாகவும் வளமாகவும் வாழவேண்டும்.

இதற்கு இளைஞர்களுடைய அர்ப்பணிப்பும் சேவையும் எம் மக்களுக்கு முழுமையாகக் கிடைக்கவேண்டும்.

இந்தவகையில் உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் துடிப்புடன் செயற்படுவதற்காகவும் மக்களுடன் மக்களாக இளைஞர்களுடைய நண்பனாகவும் இருப்பதால் அனைவரதும் நல்வாழ்வுக்காக இந்தத் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளேன்.

வலி.தெற்கைப் பொறுத்தவரையில் இது விவசாயிகள் நிறைந்த பகுதியாகவும் காணப்படுகின்றது.

கடந்த காலத்தில் உள்ளூராட்சி சபையின் பிரதிநிதிகள் உரியமுறையில் மக்களுடைய தேவைகளை உணர்ந்து செயற்படவில்லை என்பதை மக்களும் உணர்ந்துள்ளனர்.

எமது கிராமப்புறங்களில் உள்ள பல வீதிகள் கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாமலும் குண்டும் குழியுமாகப் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் காணப்படுகின்றன.

வீதிகள் திருத்தப்படவும் முக்கிய இடங்களில் மின் குமிழ்களை அமைக்கவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இத்துடன் சுகாதாரச் சீர்கேடுகள் காணப்படுகின்றன. அவைகள் சீரமைக்கப்பட்டுச் சுகாதாரம் உரியமுறையில் பேண நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும்.

எமது பகுதியில் இரண்டு சந்தைகள் காணப்படுகின்றன. இவை உரியமுறையில் பேணப்படாமையாலும் கண்காணிக்காமையாலும் விவசாயிகள், நுகர்வோர், வியாபாரிகள் என அனைவரும் கஷ்டங்களுக்கு உள்ளாகின்றார்கள்.

ஒட்டுமொத்தமாக எமது பிரதேச அபிவிருத்தியில் நான் [illegible] செயற்படுவேன் என்று அவர் மேலும் கூறினார். (ம-86)

# எமது பிரதேச அபிவிருத்திக்காக முன்னின்று நாம் செயற்படுவோம்

## வலி.வடக்கு பிரதேச சபை வேட்பாளர் வ.முருகேசு



எமது பிரதே சபையின் அதிகார வரம்புக்கு உட்பட்ட அபிவிருத்தி வேலைகளையும் அதற்கு அப்பாற்பட்ட வேலைகளையும் அரச சார்பற்ற தனியார் நிறுவனங்கள் மற்றும் புலம் பெயர் தமிழர்கள் ஊடாகவும் நிறைவு செய்வேன்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வலி.வடக்குப் பிரதேச சபையின் வேட்பாளர் வ. முருகேசு 'உதயனுக்குத்' தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நான் ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். அத்துடன் காங்கேசன்துறையின் கட்சிக் கிளையின் முன்னாள் தலைவராகவும் இருந்துள்ளேன். இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில்தான் நான் முதன் முறையாகப் போட்டியிடுகின்றேன்.

தேர்தலில் போட்டியிடுவது காலத்தின் கட்டளை. அத்துடன் சர்வதேச எதிர்பார்ப்பும் ஆகும். தமிழினத்தின் விடிவுக்காகத் தமிழ்த் தேசியம் நிலைத்து நிற்க எமது கட்சி வென்றாக வேண்டும்.

எமது மக்கள் எமது பிரதேசத்தில் நிறைவான அபிவிருத்தியை அனுபவிக்க வேண்டும். அதற்காக எமது பிரதேச சபைக்கு உட்பட்ட சகல வகையான வேலைத் திட்டங்களையும் மேற்கொள்வேன். எமக்கு அப்பாற்பட்ட மக்களுக்குத் தேவையான விடயங்களைப் பிரதேச சபையில் ம்ன்மொழிந்து பிரேரணையைச் சமர்ப்பித்து அதனை உரியவர்கள் மூலம் நிறைவேற்ற முயற்சிப்பேன் - என்றார். (ம-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணியும் வீடும் விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியும் சுன்னாகம் வீதியும் இணையும் சந்தியில் (புத்தூரில்) சேச்சுக்குப் பின்னால் 7 ½ பரப்புக் காணியும் 8 அறைகளும் கொண்ட வீடும் உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:077 9563255, 077 8694980, 0041 564933287


## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் வளாக உரிமையாளரும், பிரபல தொழிலதிபருமான
திரு.தி.ஜெகசீலன் (Jegan Pharmacy, Green Grass Hotel உரிமையாளர்)
அவர்களின் பாசமிகு மாமி

**திருமதி பத்மநாதன் பத்மராணி**

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

228/10, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள்:
THIVI MATHS CENTER &
THIVI CHILD PARK.

## மரண அறிவித்தல்

**திருமதி சிவயோகச் செல்வம்-செல்லம்மா (செல்லம்)**

(முன்னாள் பணியாளர், கைதடி M.P.C.S)



கைதடி-நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவயோகச்செல்வம் செல்லம்மா கடந்த (18.07.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சிவயோகச்செல்வனின் அன்பு மனைவியும் ராதிகா (கனடா), ராகுலன் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கைதடி-நாவற்குழி,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்.


## பசு கன்றுடன் விற்பனைக்குண்டு

நல்ல இன கறவை J.C (கன்னி) பசு கன்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0779482799
S.சிவா,70, குருசோ வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

## தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள வீட்டில் கீழ்க்கண்ட வேலைகளுக்கு ஆள்கள் தேவை.

1, இரவுக் காவலாளி 45 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள்
2, தோட்டப்பராமரிப்பாளர்
(காலை 6 மணிமுதல் மாலை 6-மணிவரை)
45 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள்.
3, வீட்டுப் பணிப்பெண்
(30 வயதுக்கு மேற்பட்ட பெண்கள்)

சம்பளம் பேசித் தீர்க்கப்படும்
எதிர்பார்க்கும் சம்பளத்தையும் தொடர்புக்கு தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிடவும்.
C/O உதயன், விளம்பர இலக்கம்:4162,
361,கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.


## சாவகச்சேரி நகரசபைத் தேர்தல் (23.07.2011)





**திரு. பரமசாமி சிறீதரன்**

(பிரபல வர்த்தகர், மீசாலை)
விருப்பு வாக்கு இல-12

அன்பான வாக்காளப் பெருமக்களே!
தமிழ்த் தேசியத்தின் ஒற்றுமையை வலுப்படுத்தவும்
தமிழினம் உரிமையுடன் தலை நிமிரவும்
நம் நகரை நமதாக்கவும்
நம் நகரை நாமே அபிவிருத்தி செய்யவும்
"தமிழர் என்றால் அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே" என எடுத்துக் கூறவும்
உங்கள் வாக்குகள் என்றும் வீட்டுக்கே!

உங்கள் வாக்குகளை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சின்னமாகிய வீட்டுக்கு இட்டும் உங்கள் விருப்பு வாக்குகள் மூன்றையும் எனது இலக்கமாகிய 12 இற்கும் புள்ளடிகள் இட்டும் ஆதரவு தருமபடி அன்புடன் வேண்டுகின்றேன்.

திரு. பரமசாமி சிறீதரன்
மீசாலை.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி தமிழர்களின் வெற்றி"


12 ✕ ✕

(5995) (39)

## நல்லூர் பிரதேச சபை

உள்ளூராட்சி சபைத் தேர்தல் - 2011

இலங்கை தமிழரசுக் கட்சி
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



**பெரியதம்பி கனகசபை**

தன்னலமற்ற சமூக சேவையாளன்
பொது வாழ்வில் பல வருட அனுபவம் கொண்டவர்
அன்றும் இன்றும் மக்களுடன் வாழ்ந்தவர்
தொடர்ந்தும் அவரது சிறப்பான சேவையை
பெற்றிட-இந்த உள்ளூராட்சித் தேர்தலில்
வெற்றிபெறச் செய்வோம்

14 ✕ ✕

(J/1844) (39)

## எங்கள் பாசச்செல்வனின் ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்:
1952.06.10

ஆண்டவன் அடியில்:
2006.07.15

திதி: 20.07.2011

**அமரர் செல்லத்துரை சிவபாதம்**

எங்கள் ஆருயிர்ச் செல்வமே தம்பி, அண்ணா எங்களை விட்டுப் பிரிந்து ஆண்டுகள் ஐந்து ஆகிவிட்டதையா! ஆறுமோ எங்கள் மனம் தேறுமோ எங்கள் உடல் நாமும் இவ்வுலகை விட்டு உன்னிடம் வரும்வரை எங்கள் இதய ஜோதியை எம் உள்ளத்தில் நித்தமும் ஏற்றி உன்னை வணங்கிய பின்பே என் கடமையைச் செய்யத் தொடங்குகின்றேன்.

'அன்னை நிழல்', செட்டியார்மடம்,
வட்டுக்கோட்டை.

நித்தமும் உன் நினைவாக வாழும்:
உன் அருமை அக்கா - செ.தனலட்சுமி

## நீங்கா நினைவினில்....

41 ஆம் நாள் 31 ஆம் நாள்

தோற்றம்:
17.03.1942

தோற்றம்:
16.09.1958





மறைவு:
09.06.2011

மறைவு:
20.06.2011

**திருமதி வெள்ளையன் பொன்னம்மா** **திருமதி அருளம்பலம் தவமணி**

ஆயிரம் உறவுகள் அவனியில் இருந்தாலும்
உங்கள் இருவரினதும் பசுமையான நினைவுகளை
எங்களால் மறக்க முடியவில்லையே!
தரணி போற்ற நாம் உயர்ந்திடத் தளராது உழைத்தீர்கள்
உங்கள் இன்முகம் காணாமல் இன்சொல் கேளாமல்
பாரினில் தவிக்கின்றோம் பரமனிடம் சென்றீர்களோ?
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வன்னியசிங்கம் வீதி,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

என்றும் நினைவில்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமநல சேவை மற்றும் வன விலங்கு அமைச்சு
## தேசிய உர செயலகம்
# உரமானிய விரிவாக்கம்

மஹிந்த சிந்தனை முன்நோக்குக் கொள்கை வெளிப்படுத்துகையில் காட்டப்பட்டுள்ளவாறு முக்கியமாக நெற்பயிருக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த உரமானிய உதவித் திட்டத்தை ஏனைய அனைத்து விவசாய மற்றும் பெருந்தோட்டப் பயிர்களுக்கும் விரிவுபடுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

**புதிய உரமானிய உதவித் திட்டத்தின் அடிப்படைப் பண்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.**

1. நெல் உரமானியம் தொடர்ந்தும் மாற்றமின்றிக் காணப்படுவதோடு யூரியா, முக்கூட்டு சுப்பர் பொஸ்பேற் மற்றும் மியூரியேற் ஒப் பொற்றாஸ் என்பவற்றின் 50 கிலோகிராம் எடையுள்ள பசளையொன்றை விவசாயிகள் ரூபா 350/= மானிய விலையில் கொள்வனவு செய்ய முடியும்.
2. ஏனைய அனைத்து விவசாய மற்றும் பெருந்தோட்டப் பயிர்களுக்கான சகல நேரடி இரசாயன உரங்களுக்கான 50 கிலோகிராம் எடையுள்ள உறையொன்றை ரூபா 1200/= வீதம் மானிய விலையில் கொள்வனவு செய்ய முடியும். இங்கு கீழ்வரும் நேரடி இரசாயன உர வகைகள் மானிய விலையில் விற்பனை செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| ★ யூரியா | ★ டை அமோனியம் பொஸ்பேற் | ★ கல்சியம் அமோனியம் நைதறேற் |
| ★ முக்கூட்டு சுப்பர் பொஸ்பேற் | ★ அமோனியம் சல்பேற் | ★ சல்பேற் ஒப் பொற்றாஸ் |
| ★ மியூரியேற் ஒப் பொற்றாஸ் | ★ சிங்க் சல்பேற் | ★ எப்சம் சோல்ற் |
| ★ தனித்த (Single) சுப்பர் பொஸ்பேற் | ★ கீசறைற் | ★ சோடியம் போறேற் |

3. அந்தந்த பயிர்களுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ள உரக் கலவைகளின் 50 கிலோகிராம் எடையுள்ள உறையொன்று ரூபா 1300/= என்ற மானிய விலையில் விற்பனை செய்யப்படும்.
4. சகல கமநல சேவை நிலையங்களிலிருந்தும் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களிடமிருந்தும் மானிய விலையில் நேரடி இரசாயன உரங்களையோ அல்லது பரிந்துரை செய்யப்பட்ட உரக் கலவைகளையோ பெற்றுக்கொள்ள முடியும்.
5. ரூபா 1200/= விலையில் நேரடி இரசாயன உர வகைகளையும் ரூபா 1300/= விலையில் உரக் கலவைகளையும் கொள்வனவு செய்கின்ற போது விண்ணப்பங்களை நிரப்பவோ அல்லது பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ளவோ அல்லது அனுமதி பெற்றுக்கொள்ளவோ தேவையில்லை.
6. அனைத்து விவசாய மற்றும் பெருந்தோட்டப் பயிர்களிலிருந்து உயர்ந்த அறுவடையைப் பெற்றுக் கொள்வதற்காக சேதனப்பசளைகளின் பயன்பாடு, மட்பாதுகாப்பு முறைமைகள் என்பன பின்பற்றப்பட வேண்டியதோடு முறையான பயிர் முகாமைத்துவ பிரயோகமும் இன்றியமையாததாகும்.

உரமானியத் திட்டத்துக்காக அரசாங்கம் வருடாந்தம் சுமார் 50,000 மில்லியன் ரூபாக்களை ஒதுக்கீடு செய்வதோடு, அதனை சமூக மற்றும் பொருளாதார ரீதியாக விளைபயன் அளிக்கத்தக்க ஒரு முதலீடாக மாற்றிக் கொள்வதற்காக மானிய உரங்களை உரிய பயிருக்கு, உரிய நேரத்தில் உரிய அளவில் இட்டு அறுவடையை அதிகரிக்கச் செய்வதற்கான அனைத்து பொருத்தமான நடவடிக்கைகளும் எடுக்கப்படுமென இலங்கை வாழ் விவசாய சமூகத்திடமிருந்தும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தோடு தொடர்புடைய ஏனைய அனைத்துத் தரப்பினர்களிடமிருந்தும் தாழ்மையோடு எதிர்பார்க்கப்படுகிறது.

**புதிய உரமானிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக மேலும் விளக்கம் பெற வேண்டியிருப்பின் தேசிய உர செயலகத்தின் தொலைபேசி இலக்கம் 011-2885402, தொலைநகல் இலக்கம் 011-2887447 nfssrilanka@yahoo.com என்பவற்றினூடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.**

**செயலாளர், கமநல சேவை மற்றும் வனவிலங்கு அமைச்சு, பத்தரமுல்ல. 2011 ஜூன் 20 ஆம் திகதி**

# மரண அறிவித்தல்
# சிற்றம்பலம் இராமலிங்கம்



உடுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் இராமலிங்கம் நேற்று (19.07.2011) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலம் - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லையா - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், கலாவதி (சுவிஸ்), கலாறஞ்சன் (சுவிஸ்), கலாமோகன் (சுவிஸ்), கலாரூபன் (சுவிஸ்), கருணாகரன் (சுவிஸ்), கலாநாதன் (சிவா - ரக்ரர் உரிமையாளர்), கலாநிதி (லண்டன்), சிவகரன் (உள்ளூராட்சி அமைச்சு, வடக்கு மாகாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜசிங்கம் (சுவிஸ்), லிங்கேஸ்வரி (சுவிஸ்), சிவாணி (சுவிஸ்), செல்வ குமாரி (சுவிஸ்), சத்தியபாமா (சுவிஸ்), மாலினி, சிவகுமார் (லண்டன்), ஜெயவாணி ஆகியோரின் அன்பு மாமனும், நிரோன், நிரேஷ், நிவேத், ஆரபி, றமணன், சேயோன், மகிஷா, அனுஷா, விதுஷன், மிதுனன், கபிலன், கிஷானி, கிஷாந், ராகவி, சாருதா, கேஷாயினி, அபிஷேகினி, அச்சுதன், லக்ஷாயினி, அம்சவி, அக்சரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான நடராசா, இரத்தினராசா, குமாரகுலசிங்கம் மற்றும் கமலபூபதி, தேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நடராசா, இலட்சுமிப்பிள்ளை மற்றும் மாணிக்கம், கந்தசாமி, பத்மாவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2011) புதன்கிழமை நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பி.ப. 3 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**'சிவன் இல்லம்'**
**உடுவில் தெற்கு, சுன்னாகம்.** (6026)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது மண்ணில் சர்வதேச விளையாட்டரங்கு

•வட மாகாணம் •கிழக்கு மாகாணம் •வட மத்திய மாகாணம் மத்திய மாகாணம் •ஊவா மாகாணம் •சப்ரகமுவ மாகாணம் •தென் மாகாணம் •மேல் மாகாணம் •வடமேல் மாகாணம்



**இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் தலைவர் அதிமேன்மைதங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள்**

கிளிநொச்சி விளையாட்டுத் தொகுதியின் திறப்பு விழாவைக் குறிக்கும் இச்செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். விளையாட்டை மக்களிடம் எடுத்துச் செல்லும் அரசாங்கத்தின் கொள்கையில் குறிப்பாக கிராமப்புறத்தில் அதன் முன்னேற்றத்தின் முக்கிய கட்டமாக இது அமைகிறது.

இந்த விளையாட்டுத் தொகுதியானது ஒரு நாடென்ற ரீதியில் நாம் எட்டியுள்ள சமாதானத்தை வலுப்படுத்தும் எமது கடப்பாட்டை மேலும் சான்றுபடுத்துவதாக அமைகிறது. அத்துடன் சமாதானத்தின் பிரதிபலன்களை அனைத்துப் பிரிவுகளிற்கும் குறிப்பாக சுமார் மூன்று தசாப்தங்களாக மோதலினால் பாதிக்கப்பட்டு முன்னேற்றம் தடைப்பட்ட மக்களுக்கு எடுத்துச் செல்கிறது. இது சமாதானம், சுதந்திரம், ஆகியவற்றின் புதிய தாற்பரியத்தைக் குறிக்கிறது. அதாவது முன்னர் ஒரு காலத்தில் பயங்கரவாதத்தின் பலம் பொருந்திய கோட்டையாக இருந்த கிளிநொச்சி விரைவில் நாட்டின் வடபகுதியில் ஒரு பிரதான விளையாட்டு மைதானமாக அமையும்.

அரசாங்கத்தின் செயற்பாட்டினது ஒரு அங்கமாக மாவட்ட செயலாளர் மட்டத்தில் 324 விளையாட்டுத் தொகுதிகளும் மாவட்ட மட்டத்தில் 24 விளையாட்டுத் தொகுதிகளும் மாகாண மட்டத்தில் மிகவும் சிறப்பான வசதிகளுடன் 9 விளையாட்டுத் தொகுதிகளும் அமைப்படுள்ளன. இவை கிராமப்புற மக்களுக்கு விசேட பயன்களை வழங்கும்.

பலதரப்பட்ட விளையாட்டு அம்சங்களில் நாடளாவிய ரீதியில் உள்ள இளைஞர்கள் பயிற்சிபெறவும், திறன் அபிவிருத்தி மற்றும் போட்டிகளில் சிறப்பு வசதிகளைப் பெற்ற தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் வெற்றிவாகை சூடுவதற்கு இது வழிகாட்டும்.



**பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்கள்**

விளையாட்டினை சமூக அபிவிருத்திக்கு மாத்திரமன்றி பொருளாதார அபிவிருத்தியிலும் ஓர் முக்கிய அங்கமாக மாற்றும் மேன்மைதகு ஜனாதிபதி தலைமையிலான தேசிய கொள்கைக்கு அமைவாக விளையாட்டினைக் கிராமப்புறங்களுக்கும் கொண்டு செல்லும் வகையில் பிரதேசரீதியில் அமைக்கப்படும் விளையாட்டரங்குகள் வேலைத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி விளையாட்டு அரங்கின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கும் தினத்தில் வாழ்த்துச் செய்தி ஒன்றைத் தெரிவிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

30 வருடங்கள் யுத்தத்தின் பிடியில் இருந்த வடபகுதி மக்களுக்காகச் செய்யப்படும் அபிவிருத்திப் பணிகளுக்கு மத்தியில் விளையாட்டுத்துறை அபிவிருத்திக்காக அரசாங்கம் செய்யும் இவ்வர்ப்பணிப்புகள் காரணமாக இப்பிரதேசங்களில் திறமையான வீர வீராங்கனைகள் தோன்றி சர்வதேசத்தரம் வரை செல்ல வேண்டும் என வாழ்த்துகிறேன்.



**விளையாட்டுத்துறை அமைச்சர் கௌரவ மஹிந்தானந்த அளுத்கமகே அவர்கள்**

**விளையாட்டுத்துறையின் நாளைய மலர்ச்சி**

நாட்டில் ஐந்து தசாப்தங்களிற்கு மேலாக நிலைத்திருக்கின்ற விளையாட்டுத்துறையில் இலங்கையின் வரலாற்றில் முதற் தடவையாக "மஹிந்த சிந்தனை" எதிர்கால நோக்கு, என்பதன் கீழ், கிராமப் பகுதிகளிலிருந்து சர்வதேச மட்டத்திற்கு விளையாட்டுத்துறை என்ற நிலையான அபிவிருத்திக்கு ஒரு நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. விளையாட்டுத்துறை விடயங்களிற்குப் பொறுப்பான அமைச்சராக, இந் நோக்கை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புக் கிடைத்ததையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு ஆரோக்கியமானதும், ஐக்கியமானதுமான இலங்கை சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்காக "அனைவருக்கும் விளையாட்டு" என்ற கருப்பொருளின் கீழ் ஒரு நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதை இலக்காகக் கொண்டு மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டங்களில் பூரணமான கலைத்துவமுடைய நவீன விளையாட்டுக்கள் கட்டடத் தொகுதிகளிற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி மூலம் புதிய வழிகள் திறக்கப்பட்டுள்ளன.

குறித்த எத்தகைய விளையாட்டுக்களில் இலங்கை பதக்கங்களை வெல்ல முடியும் என்பதை அடையாளங்கண்டு அவைகளை மையப்படுத்துவதற்கும், தேசிய விளையாட்டுத்துறைக் கொள்கையை உருவாக்குவதற்கும் விளையாட்டுத்துறை அமைச்சானது எமது வரலாற்றில் முதற் தடவையாக விளையாட்டுத்துறையின் எதிர்கால நன்மைக்காக கல்வி, இளைஞர் விவகாரம் மற்றும் உயர் கல்வியமைச்சுக்களுடன் கை கோர்த்துள்ளது. கடந்த நான்கு தசாப்தங்களிற்கு மேலாக கொடிய யுத்தத்தைச் சந்தித்துள்ள நாட்டின் விளையாட்டுத்துறைக்கு நாம் ஒரு குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்ய முடிந்ததையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். பொதுநலவாய விளையாட்டுக்கள் 2018 இன் இலக்காக உள்ள இலங்கையின் பொருளாதாரத்திற்கு விளையாட்டுத்துறை ஒரு திருப்புமுனையாக இருக்கும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.

பல தசாப்தங்களாகப் போரினைச் சந்தித்த கிளிநொச்சியின் நகரப்பகுதியில் நவீன விளையாட்டுக்கள் கட்டடத் தொகுதியை நிர்மாணிப்பதன் மூலம் வட மாகாணத்திலுள்ள மக்கள் எதிர்காலத்தில் அதிகபட்ச பயனைப் பெறுவதுடன், நாம் இப் பிராந்தியத்திலிருந்து அநேகவை வெற்றிகளைக் காணலாம் என நம்புகின்றேன்.

பல தசாப்தங்களாக நீடித்திருந்த போர் காரணமாக இதுவரையில் தமது திறமைகளை வெளிக்கொணர முடியாதிருந்த தனித்திறன் மிக்க விளையாட்டு வீரர்கள், எதிர்காலத்தில் வெற்றிபெற்ற ஒரு மைதானமாக கிளிநொச்சி விளையாட்டுக்கள் கட்டடத் தொகுதி திகழ வேண்டுமென நான் மனப்பூர்வமாகப் பிரார்த்திக்கின்றேன். அதி மேதகு ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் வடக்கின் நீண்ட காலப் போரை இலங்கை முடிவுக்கு கொண்டு வந்துள்ளது. இப் பெரு முயற்சியின் காரணகர்த்தாவாகவுள்ள அதி மேதகு ஜனாதிபதிக்கு நான் எனது உண்மையான நன்றியையும் மரியாதையையும் செலுத்துகின்றேன். வட மாகாண விளையாட்டுத்துறையின் அபிவிருத்தியில் தொடர்ச்சியான ஆதரவை வழங்கிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ச, பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ நாமல் ராஜபக்ச, பாரம்பரிய கைத்தொழில்கள், சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா ஆகியோரிற்கு நான் எனது உண்மையான பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றேன்.



**பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்கள்**

**கிளிநொச்சி விளையாட்டரங்கின் மூலம் வடக்கில் வாழும் சிறுவர்கள் சர்வதேச ரீதியில் விளையாட்டு வீரர்களாகலாம்**

"மஹிந்த சிந்தனையின்" எதிர்கால நோக்கின்படி விளையாட்டுத்துறையினை கிராமங்களுக்குக் கொண்டு செல்வதற்கான தேசிய வேலைத் திட்டத்திற்கமைய, பிரதேச செயலாளர் பிரிவுகளில் 324 விளையாட்டு கட்டடத் தொகுதிகளும், மாவட்ட ரீதியில் 25 விளையாட்டு கட்டடத் தொகுதிகளும், மகாண ரீதியில் நவீன வசதிகள் கொண்ட 09 கட்டடத் தொகுதிகளும் அமைக்கப்படவுள்ளன. இதன் மூலம் விளையாட்டு வீரர்களுக்கு சிறந்த பயிற்சிகள், சிறந்த வழிகாட்டல்கள் கிட்டுவதுடன், எமது நாட்டில் சர்வதேச ரீதியாக இருப்பவருக்கும் பல வெற்றிக் கிண்ணங்களையும், பதக்கங்களையும் வெல்வதற்கும் வாய்ப்புக் கிட்டும்.

மேலும், யுத்தம் காரணமாக அமைதியற்ற வடக்கு வாழும் இளைஞர் யுவதிகளின் விளையாட்டுத் திறமைகளை சர்வதேச ரீதியில் வெளிக்கொணரும் எண்ணத்தில் அவர்களின் எதிர்கால நலன் கருதி 2011 ஜூலை 20ஆம் திகதி பல்வேறு நவீன வசதிகள் கொண்டு அமைக்கப்படும் கிளிநொச்சி விளையாட்டரங்கின் ஆரம்பப் பணிகள் அதிமேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். வடக்கு பகுதியில் நிலைகுலைந்த மக்களின் மேம்பாட்டிற்காக விளையாட்டரங்கினை நிர்மாணிப்பதற்கு பேராதரவினை வழங்கிய அதிமேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களுக்கும், விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே அவர்களுக்கும் எனது மனம்கனிந்த நன்றியினை தெரிவித்துக்கொள்வதுடன், இவ் வாழ்த்துச் செய்தியினைத் தெரிவிப்பதற்கு எனக்கு வாய்ப்பு தந்தமைக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.



**பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ நாமல் ராஜபக்ஷ அவர்கள்**

விளையாட்டுத்துறையினை கிராமங்களுக்குக் கொண்டு செல்வதற்கான எமது தேசிய வேலைத் திட்டத்திற்கமைய, பிரதேச மட்டத்தில் விளையாட்டரங்குகள் நிர்மாணிக்கப்படும் இச் சந்தர்ப்பத்தில், கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்படவுள்ள விளையாட்டரங்கின் நிர்மாணிப்பிற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

விளையாட்டுத்துறையானது பொருளாதார ரீதியிலான அபிவிருத்தியில் பங்கெடுப்பதாயின், எமது நாட்டின் வீர வீராங்கனைகள் சர்வதேச ரீதியில் வெற்றி பெற வேண்டும். அதற்கு, சிறந்த பயிற்சிகள் உட்பட, விளையாட்டில் முழுமையாக ஈடுபடுவதற்குரிய சுற்றுச் சூழலையும் நாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென எண்ணுகிறேன்.

அதன்படி "மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கின்" மூலமாக விளையாட்டுத்துறையினை கிராமங்களுக்குக் கொண்டு செல்வதுடன், கிராமங்களின் திறமைசாலிகளை இனங்கண்டு, அவர்களை உலக அரங்குகள் வரை கொண்டு செல்வதே எமது அவாவாகும். எனவே கிராமங்களுக்கு விளையாட்டுத்துறையினைக் கொண்டு செல்வதற்கு ஒவ்வொரு பிரதேசங்களிலும் விளையாட்டரங்குகளை நிர்மாணித்திட வேண்டுமென அரசு தீர்மானித்திருப்பதற்குக் காரணம், எமது நாட்டின் கிராமங்களிலுள்ள விளையாட்டு வீரர்களுக்கு சிறந்த பயிற்சிகளை வழங்குவதற்கேயாகும்.

விளையாட்டுத்துறை அமைச்சானது தற்பொழுது நாடெங்கிலும் விளையாட்டு அபிவிருத்திக்கான வேலைத் திட்டங்களை ஆரம்பித்துள்ளது. அதற்கேற்ப சகல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் ஒரு விளையாட்டுக் கட்டடத் தொகுதி என்ற வகையில் 324 கட்டடத் தொகுதிகள் அமைக்கப்படவுள்ளன. மாவட்ட ரீதியில் 25, மற்றும் மாகாண ரீதியில் 09 கட்டடத் தொகுதிகள் அமைக்கப்படவுள்ளன. இதன் மூலம் 2018ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் இலங்கை அதிகூடிய வெற்றிப் பதக்கங்களை வெல்வதற்கான வாய்ப்புக் கிட்டும் என நம்புகிறேன். 30 வருடங்களுக்கும் அதிகமாக வடக்கில் காணப்பட்ட யுத்த நிலையின் காரணமாக பாதிக்கப்பட்டிருந்த மக்களின் மேம்பாட்டிற்காக விளையாட்டரங்கினை நிர்மாணிப்பதற்கு அதிமேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்கள் வழங்கிய பேராதரவினையும் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அவர்களின் அர்ப்பணிப்பினையும் இத் தருணத்தில் நினைவுகூர வேண்டும்.

"எமது மண்ணில் சர்வதேச விளையாட்டரங்கு" வேலைத் திட்டம் வெற்றி பெற பிரார்த்திக்கிறேன்.



**விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் உதய ஆர். செனவிரத்ன அவர்கள்**

விளையாட்டு ஆற்றலை மேம்படுத்துதல் மூலம் ஆரோக்கியமான ஒற்றுமையான சமுதாயம் ஒன்றை உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் உள்ள விளையாட்டுத்துறை அமைச்சு மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விளையாட்டுத்துறையினை அபிவிருத்தி செய்வது எதிர்கால சந்ததிக்கான சிறப்பான முதலீடு என்பதை கருத்திற் கொண்டு, 2018 ஆம் ஆண்டை இலக்காக கொண்டு ஏழு ஆண்டுகள் தேசிய விளையாட்டுக் கொள்கையை செயற்படுத்துதல் ஊடாக விளையாட்டுத்துறையை கிராமங்களுக்கு கொண்டு செல்லும் பணியின் முதற்கட்டமாக விளையாட்டரங்குகள் அமைக்கும் வேலைத்திட்டத்திற்கு வாழ்த்து தெரிவிக்க கிடைத்தமையை பெரும் பாக்கியமாக கருதுகிறேன்.

எமது மண்ணில் சர்வதேச விளையாட்டரங்கம் எனும் தொனிப்பொருளில் பிரதேசத்திலுள்ள திறமையான வீரவீராங்கனைகளுக்கு முறையான பயிற்சிகள் அளித்து, தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டல்களை வழங்க பிரதேச, மாவட்ட மற்றும் மாகாணரீதியில் அனைத்து விளையாட்டுக்களுக்கும் பயிற்சி பெறக்கூடிய முழுமையான விளையாட்டுத் தொகுதியாக திட்டமிடப்பட்டு நிர்மாணிக்க விளையாட்டுத்துறை அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதுடன், 30 ஆண்டுகளுக்கு மேல் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடபகுதி மக்களின் விளையாட்டு ஆற்றலை மேம்படுத்த ரூ.325 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்படும் கிளிநொச்சி விளையாட்டரங்கின் நிர்மாணப்பணிகள் அதிமேன்மைதங்கிய ஜனாதிபதியின் தலைமையில் ஆரம்பிக்கப்படுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

2018 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை மையமாகக் கொண்டு நடைபெறவுள்ள விளையாட்டுத்துறை அபிவிருத்தியின் தங்கப் பதக்கங்கள் பலவற்றை வெல்ல நாம் நம்பிக்கை கொண்டுள்ளதுடன் விளையாட்டிற்கு, கிராமத்திலிருந்து சர்வதேசதரம் வரையுள்ள அனைத்து பிரிவினரினதும் அர்ப்பணிப்பை நாம் எதிர்பார்க்கின்றோம்.

அதிமேன்மைதங்கிய ஜனாதிபதியின் தலைமையில் இதனை வெற்றிகரமாக செயற்படுத்த அர்ப்பணிப்புடன் உள்ள விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே அவர்களையும், பிரதான விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம், விளையாட்டு அமைப்புகள் மற்றும் வீர வீராங்கனைகளை இத்தருணத்தில் நினைவுகூருகின்றேன்.


கிளிநொச்சி விளையாட்டரங்கம் தேசத்தின் பிள்ளைகளுக்கு மிகப்பெரிய சக்தியாகத் திகழவேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

நவீன உலகில் விளையாட்டுத்துறை இளைஞர் சமுதாயத்திற்கு மாத்திரமன்றி முழுச்சமுதாயத்திற்கும் பொதுவானதாகும். உள, உடல் சக்தியினை பெருமளவில் கொண்ட மக்கள் சமுதாயம் ஒன்றிற்கு விளையாட்டு அவசியமாகும். விளையாட்டை அபிவிருத்தி செய்வது எதிர்கால சந்ததிக்கு செய்யும் முதலீடு என மஹிந்தவின் சிந்தனை எதிர்கால நோக்கில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று விளையாட்டை கிராமப்புறங்களுக்குக் கொண்டு சென்று திறமையான வீர வீராங்கனைகளை சர்வதேசத் தரத்திற்கு உருவாக்குவதும், பிரதேச, மாவட்ட, மாகாணரீதியில் விளையாட்டரங்குகளை நிர்மாணிப்பதன் மூலம் விளையாட்டுக் கலாச்சாரம் ஒன்றை ஏற்படுத்துவதே விளையாட்டு அமைச்சின் நோக்கமாகும்.

"எமது மண்ணில் சர்வதேச விளையாட்டரங்கு" எனும் தொனிப்பொருளில் 2018 ஆம் ஆண்டு பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் அதிக தங்கப் பதக்கங்கள் வெல்லுவதை இலக்காகக் கொண்டு, எதிர்காலத்தில் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள், ஆசிய விளையாட்டுப் போட்டிகள், ஒலிம்பிக் போட்டிகள் ஆகியவற்றை நடாத்தும் தரம்மிக்க இந்த 09 விளையாட்டரங்குகள் மூலம் விளையாட்டுத் திறமையுள்ள எமது தேசத்தின் வீரவீராங்கனைகளின் போட்டியாற்றலை வெளிக்கொணர்ந்து, சர்வதேசத் தரத்திற்கு அமைவான பயிற்சியினை வழங்குவதுடன், தேசியமட்ட விளையாட்டுப் போட்டிகளைத் தகுந்த பயிற்சியுடன் பிரதிநிதித்துவப்படுத்தச் செய்வதும் விளையாட்டு அமைச்சின் நோக்கமாகும்.

இன்றைய தினம் வடபகுதியில் கிளிநொச்சி நகரில் நிர்மாணிக்கப்படவுள்ள சர்வதேச விளையாட்டரங்கின் அடிக்கல் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் ஜனாதிபதி அதிமேன்மைதகு மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் நாட்டப்படும். இச்சர்வதேச விளையாட்டரங்கின் ஊடாக சர்வதேசத் தரத்திற்கு தயாராகும் வீரவீராங்கனைகள் போட்டிகள் பலவற்றை வெற்றிகண்டு தேசத்தை மிளிரச் செய்ய வேண்டும் என்பதுவே விளையாட்டுத்துறை அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு அதிகாரிகளின் எதிர்பார்ப்பாகும்.

ரூபா 325 மில்லியன் செலவில் நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ள பிராந்திய விளையாட்டரங்கம்





### திறந்தவெளி விளையாட்டரங்கு

- 08 ஒழுங்கைகள் கொண்ட 400 மீட்டர் ஓடுபாதை - 5000 இருக்கைகள்
- சகல வசதிகளும் கொண்ட கிரிக்கட் விளையாட்டரங்கம் - 2000 இருக்கைகள்
- சகல வசதிகளும் கொண்ட பிரதான பார்வையாளர் கூடம் - 1500 இருக்கைகள் 200 விசேட இருக்கைகள்

### உள்ளக விளையாட்டரங்கம்

- 25 விதமான போட்டிகளில் ஈடுபடக்கூடிய விளையாட்டரங்கம் 500 இருக்கைகள்

### நீச்சற்தடாகம்

- 08 ஒழுங்கைகள் கொண்டது (FINA standard) நியதிகளுக்கு உட்பட்டது - 500 இருக்கைகள்

### தங்குமிடம்

- வீரவீராங்கனைகளுக்கு சகல வசதிகளும் கொண்ட தங்குமிட வசதி

### உணவகம்

- சகல வசதிகளும் கொண்ட உணவகம்

விளையாட்டுத்துறை அமைச்சு  hambantota 2018  நிர்மாணம்: அரச பொறியியல் கூட்டுத்தாபனம்

(சி/1817)

வளமான எதிர்காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாபெரும் தேர்தல் பிரசாரக் கூட்டமும் இசை நிகழ்ச்சியும்

இடம்:
வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலய முன்றில்

காலம்: இன்று (20.07.2011) புதன்கிழமை
நேரம்: மாலை 06.00 மணி

தலைமை: இம்மானுவேல் ஆனோல்ட்

உரையாற்றுவோர்
1. திரு.மாவை.சேனாதிராசா (நாடாளுமன்ற உறுப்பினர்)
2. திரு.அ.விநாயகமூர்த்தி (நாடாளுமன்ற உறுப்பினர்)
3. திரு.சுரேஸ் பிரேமச்சந்திரன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
4. திரு.ஈ.சரவணபவன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
5. திரு.சிவஞானம் ஸ்ரீதரன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
6. திரு.சி.வி.கே.சிவஞானம் (முன்னாள் மாநகரசபை ஆணையாளர்)

யாழ் நகரின் முன்னணிப் பாடகர்களும்,
முன்னணி இசைக்குழுவும் இணைந்து வழங்கும்

**புரட்சி கானங்கள்**

'தியாகங்களுக்கு தோள் கொடுத்த இனம்
துரோகங்களுக்கு துணை நில்லாது'

**இலங்கைத் தமிழரசுக் கட்சி**
(தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு)

---

## பருத்தித்துறை பிரதேச சபை - 2011
## உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் 23-07-2011



சலுகைக்காக சலாட் அடிப்பவர்கள் நாமல்ல
உரிமைக்காகக் குரல் கொடுப்பவர்கள்
**அன்பான வாக்காளர்களே!**
உங்கள் பொன்னான வாக்குகளை
வீட்டுச் சின்னத்துக்கும், இளம் சேவகனின்
இலக்கம் 7 இற்கும் இட்டு அமோக
வெற்றியடையச் செய்யுங்கள்

**பூபாலசிங்கம் சஞ்சீவன்**

இலங்கைத் தமிழரசுக் கட்சி
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

7

---

## உள்ளூராட்சித் தேர்தல் - 23.07.2011
## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை - மானிப்பாய்

### இலங்கைத் தமிழரசுக் கட்சியின் (த.தே.கூ.) மக்கள் வேட்பாளர்



**ஆறுமுகம் சின்னையா கணேசவேல்** J.P
(ஓய்வு நிலை உபதபாலதிபர்,
அகில இலங்கை சமாதான நீதிவான்,
உப செயலாளர் இலங்கைத் தமிழரசுக் கட்சி,
மானிப்பாய் தொகுதி)

தமிழ் மக்களின் ஒற்றுமையை அரசுக்கும்
சர்வதேசத்துக்கும் காண்பிக்க,
வலி.தென்மேற்குப் பிரதேசத்தை நவீன நகரமாக்கிட
முதலில் போடுங்கள் புள்ளடி வீட்டுக்கு நேரே.
அடுத்து விருப்பு வாக்குகளை வெற்றி இலக்கம்
இரண்டுக்கும் நேரே அளித்து இலக்கினை அடைய
அணி திரள்வோம் வாரீர்

2

---

## துளிர்கள் நிறுவனத்தின்
## 7ஆவது ஆண்டு நிறைவு விழாவும்
## "றிங் றிங்" குறுந்திரைப்பட வெளியீட்டு விழாவும்
## 20.07.2011




இன்று சேர்.பொன்.இராமநாதன் வீதி,
ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில்
காலை 9.30 மணிக்கு பணிப்பாளர்
கே.எஸ்.ரகு தலைமையில் நடைபெறும்.
இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர்
திருமதி இமெல்டா சுகுமார் பிரதம
விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கின்றார்.
துளிர்களின் பழைய மாணவர்கள்,
விரிவுரையாளர்கள், நலன்விரும்பிகள்,
அன்புக்குரியோர் அனைவரையும் கலந்து
சிறப்பித்து ஆதரவு வழங்குமாறு அன்புடன்
வேண்டுகின்றோம்.

நிகழ்ச்சித் தொகுப்பாளர்:
சுரேஸ் ஆனந்த், A.L ஜபீர்
தென்றல் அறிவிப்பாளர்

நன்றியுடன்,
துளிர்கள் குடும்பத்தினர்.
30, கம்பஸ் லேன்,
திருநெல்வேலி.

---

## மரண அறிவித்தல்

### இராசையா பஞ்சலிங்கம் (B. A.) (இரா.பஞ்சு)



பருத்தித்துறை பூதவராயர் கோயிலைப் பிறப்பிடமாகக் கொண்ட இராசையா பஞ்சலிங்கம் கடந்த (18.07.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் இராசையா - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இரத்தினவடிவேல் - சந்திரக்கண்ணு தம்பதியரின் அன்பு மருமகனும் சுசிலாதேவியின் அன்புக் கணவரும் கல்யாணி (ஜேர்மனி), வரதன் (லண்டன்), ஜனனி (கொழும்பு), நிரோஷினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராஜ்குமார் (ஜேர்மனி), சஞ்சிதாப் (கொழும்பு) ஆகியோரின் மாமனும் ஷாரபி, சரண் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆதிமூலம், தியாகலிங்கம், ஸ்ரீபத்மவேணி, சேதுலிங்கம், ஈஸ்வரலிங்கம், சத்தியவேணி, காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், கிருஸ்ணவேணி, கமலவேணி, சாரதாவேணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இலட்சுமிகாந்தன், ரதிமோகன் (சுவிஸ்) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும் ஜெயராணி, பத்மாதேவி, கிருஸ்ணபிள்ளை, தங்கதுரை, மங்களேஸ்வரி (யா/வல்லை மகளிர் ம.வி.), சிறிகாந்தி, ஆதித்தன், விமலாதேவி, இந்துமதி (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான இராஜ்குமார், ஏரம்பமூர்த்தி, குகதாஸ் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.07.2011) வியாழக்கிழமை பி.ப. 3.30 மணியளவில் பருத்தித்துறை, பூதவராயர் கோயில் ஒழுங்கை, ஸ்ரீ கிருஸ்ணா இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பஞ்சலிங்கம் - வரதன்
(மகன்).

பூதவராயர் கோயில் ஒழுங்கை,
பருத்தித்துறை.

---

# உள்ளூராட்சித் தேர்தல் - 2011

## தமிழர் விடுதலைக் கூட்டணி
### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

**பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச சபைகள்**
**உங்கள் வாக்கு உரிமைக்கே**

**உரிமையை நிலைநிறுத்த உதய சூரியனுக்கு வாக்களிப்போம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கிருஸ்ணசாமி தயேந்திரராசா



மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் கல்வயலை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணசாமி தயேந்திரராசா 18.07.2011 அன்று டோகாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணசாமி - நகுலேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைரவநாதன் - நாகம்மா தம்பதியரின் மருமகனும் வசந்தாவின் (ஆசிரியை, கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்ததியாலயம்) அன்புக் கணவரும் கஜேனி, கஜானா ஆகியோரின் அன்புத் தந்தையும் இந்திரலோகன், பூங்கோதை, குலசிங்கம், அருள்மலர், கனகராசா (டோகா), நடராசா, சீதாலட்சுமி, உமாதேவி, றஞ்சிதமலர்(ஆசிரியை, உசன் இராமநாதன் வித்தியாலயம்), சுதாகரன் (டோகா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அருள்மணி, சத்தியவர்ணன், சாரதாமணி, மயில்வாகனம், உதயகுமாரி (ஆசிரியை வரணி ம.வி.), குகனேஸ்வரி (சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்), சந்தனகுமாரன், சிவகுமார், இராஜேஸ்வரன், அருள்நேசன், கமலேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2011) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்வயல், சாவகச்சேரி. தகவல்: மனைவி, சகோதரர்கள்.

## ஹரிஹர சாஸ்திரிகள் தெய்வானை அம்மா (பூரணம்)

காரைநகர், மணற்காடு அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், நல்லூர் மூத்தவிநாயகர் கோயிலடியை வசிப்பிடமாவும் கொண்ட திருமதி தெய்வானைஅம்மா (பூரணம்) 18.07.2011 திங்கட்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேயஐயர் (சின்னப்பு ஐயர்) சௌந்தராம்பிகைஅம்மா தம்பதியரின் கனிஷ்ட மகளும், காலஞ்சென்ற ஹரிஹரசாஸ்திரிகளின் அன்பு மனைவியும், சந்திரமௌலீஸ்வரக் குருக்கள் (கொழும்பு), சரஸ்வதி, சிவஞானசுப்பிரமணிய சர்மா (ரமணி), வசந்தாதேவி ஆகியோரின் அன்புத் தாயும், யோகீஸ்வரசர்மா (நல்லூர் பாணன்குளம் நாச்சி அம்மன் கோயில்), கலாவதி ஆகியோரின் அன்பு மாமியும், சுஹன்பாபுவின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2011) புதன்கிழமை நடைபெற்று, காலை 9 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

56, மூத்தவிநாயகர் கோயில்
1 ஆவது ஒழுங்கை, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## எழுது மட்டுவாழ் தெற்கில் இன்று மீள்குடியமர்வு

தென்மராட்சி, ஜூலை 20

தென்மராட்சி கிழக்கின் எல்லைப் பகுதியான எழுதுமட்டுவாழ் தெற்கு கிராம அலுவலர் பிரிவு மக்கள் இன்று புதன் கிழமை பி.ப. 3 மணிக்கு மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர்.

இந்தப் பிரிவைச் சேர்ந்த அனைத்து குடும்பங்களையும் பிற்பகல் 3 மணிக்கு முன்னர் எழுதுமட்டுவாழ் சந்திக்கு வருகை தருமாறு பிரிவு மீள்குடியமர்வு சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

பிரிவில் வசித்த 287 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-207)

## தவறவிடப்பட்டுள்ளது

கோப்பாய் தெற்கு, இருபாலை, மடத்தடி என்னும் முகவரியை உடைய தனபாலசிங்கம் தினேஸ் என்பவருடைய புதிய செம்மணி வீதிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. அதனை கண்டு எடுத்தவர்கள் 0776184286, 0213206153 மேற்படி தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

## ஆள் தேவை

வடமராட்சியில் உள்ள பார்மசிக்கு ஆள் தேவை. அனுபவமுள்ளவருக்கு முன்னுரிமை.
தொடர்பு: 021 222 2888

## வீடு வாடகைக்கு

இல. 17/1, BROWN ROAD இல் நாவலர் வீதிக்கு அருகாமையில் 10 அறைகள் உள்ள மாடி வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள், வங்கிகள் விரும்பத்தக்கது. தொடர்பு:- 0778072985.

## காணியுடன் வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி, பல்கலைக்கழகத்துக்கு அருகில் பலாலி வீதியை முகப்பாகக் கொண்ட 6 அறைகளைக் கொண்ட வீட்டுடன் கூடிய 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. புதிய வியாபார நிலையம் கட்டுவதற்கு உகந்தது.
தொடர்பு: 0112 580118, 0777 374423

## உள்ளூராட்சித் தேர்தல் 2011
## வலி. வடக்கு பிரதேச சபைத் தேர்தல்



வலி.வடக்கு மக்களின் மீள் குடியமர்வுக்காய் சத்தியாக்கிரகம் இருந்த சத்தியத் தலைவன் சிவமகாராஜாவின் வழியில் தம் பணிதொடர...

**வேலும்மயிலும் சண்முகநாதன்**

# மரண அறிவித்தல்

## திருமதி பத்மநாதன் பத்மராணி



உசன் கந்தசாமி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் இராமநாதன் வீதி திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் பத்மராணி நேற்று (19.07.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னையா பத்மநாதனின் (நிளஅளவையாளர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான உசன் நல்லதம்பி- இராசம்மா தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான மீசாலை பொன்னையா - காசிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் சுகந்தி, சுகிர்தா (சுவீடன்), பத்மவேணி, பத்மராஜினி (அமெரிக்கா), பத்மலோஜினி (கனடா), பத்மறமணி ஆகியோரின் அன்புத் தாயாரும் ரவீந்திரன், ஜெயசீலன் (ஜெகன் பார்மசி, யாழ்ப்பாணம்), சுதாகரன் (சுவீடன்), உருத்திரன் (அமெரிக்கா), குகச்சந்திரன் (கனடா), ஈஸ்வரன் (ஓட்டோ சப்ளையர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமியும். ரஜீபன், நிஷாந்தி, லர்சனன், சுகர்ணன், பிரவீன், அகாஷ், அபிஷா, சிந்தியா, அக்சயா, கவீனா, காவியா, உபநயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தனுஸ்ரிகாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(20.07.2011) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.288/10, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி. (6007)

தகவல்:
மருமகன் (ஜெகன்)
(ஜெகன் பார்மசி).

# மரண அறிவித்தல்

## சோமசுந்தரம் ஆனந்த சிவராசா



வேலணை 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் ஆனந்த சிவராசா 18.07.2011 திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் லோகராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சோமசுந்தரம் - பாக்கியலட்சுமி தம்பதியரின் புதல்வனும், பாலாம்பாள் காலஞ்சென்ற ஆனந்தநடராசா மற்றும் மணிமேகலை, ஆனந்த தவராஜா, ஆனந்தகுணராசா (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரரும், பாலசிங்கம், விஜியரட்ணம், அமுதகௌரி, சாந்தகுமாரி, பேரின்பராணி, சரவணபவன் (நோர்வே), இலட்சுமிகாந்தன் (பிரான்ஸ்), கிருஷ்ணகாந்தன் (பிரான்ஸ்) காலஞ்சென்ற ஜெயகாந்தன் மற்றும் ஜெயராணி, ராஜகாந்தன் (பிரான்ஸ்), ஜெயவாணி ஆகியோரின் மைத்துனரும், ரஜாணந்தன் (நோர்வே), பிரதீசன், ஜசிந்தன் (இந்தியா), ஜதர்சன் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிருந்தாவின் (நோர்வே) அன்பு மாமனும், கருஷிகாவின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற நாக ராஜா - ராஜமணி தம்பதியரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (21.07.2011) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நல்லடக்கத்துக்காக அம்பலவி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6 ஆம் வட்டாரம்,
வேலணை. (6033)

தகவல்:
குடும்பத்தினர்.

## வலி. வடக்கு பிரதேச சபைத் தேர்தல்




கோப்பாய் கோமான் வன்னியசிங்கம்
த்ளபதி அமிர்தலிங்கம் வழியில்
தமிழரசுப் பாசறையில் வளர்ந்த

**த.வேல்ராஜா (அம்பி)**

அவர்களை
(தலைவர், கருகம்பனை அபிவிருத்திச் சபை) வெற்றிபெற வைப்போம்

கருகம்பனை வாழ் மக்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும், அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
**பொன்னர் வீரவாகு**

அன்னை மடியில்
11.05.1930



அம்பிகை அடியில்
20.06.2011

குடும்பத்தின் குலவிளக்காய் வாழ்ந்து எம்மை அன்புடன் அரவணைத்து நன்நெறிகாட்டி வாழ வைத்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மசாந்திக்காக என்றென்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தியறிந்து ஓடோடி வந்து உதவி, ஒத்தாசைகள் புரிந்தவர்கள், மற்றும் நேரிலும், தொலைபேசியிலும், துண்டுப்பிரசுரங்கள், பத்திரிகைகள் மூலம் அனுதாபங்களைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், மலர்வளையங்கள் சாத்தியவர்களுக்கும், மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (20.07.2011) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

“[illegible]கம்”
7 ஆம் வட்டாரம்
நயினாதீவு. (1853)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

## பருத்தித்துறை நகரசபைத் தேர்தல் - 2011

### தேர்தல் பிரசாரக் கூட்டம்

காலம்: 2011.07.20 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 5 மணி

இடம்: தும்பளை "நெல்லண்டை அம்மன் கலை அரங்கு" (தும்பளை நெல்லண்டை அம்மன் கோயிலடி)

தலைவர்: திரு. சபா ரவீந்திரன் (J.P.U.M) சட்டத்தரணி அவர்கள்

பேச்சாளர்கள்: திரு. மாவை சேனாதிராசா (பா.உ.) அவர்கள்
திரு. அ.விநாயகமூர்த்தி (பா.உ.) அவர்கள்
திரு.ஈ.சரவணபவன் (பா.உ) அவர்கள்
திரு.எஸ்.சிறீதரன் (பா.உ) அவர்கள்
திரு.சி.வி.கே.சிவஞானம் (முன்னாள் யாழ்.மாநகர ஆணையாளர்)

முக்கிய நிகழ்வாக எமது கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரும் அறிமுகம் செய்து வைக்கப்படுவார்கள்.

**அனைவரும் வருக; ஆதரவு தருக!**

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 28 . 05 . 1953



உதிர்வு 20 . 06 . 2011

## கணபதிப்பிள்ளை பாலசிங்கம்

எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து உதவியவர்களுக்கும் நேரிலும், தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் வார்த்தைகள் கூறியவர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் பங்கு கொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (20.07.2011) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

புத்தூர் மேற்கு,
புத்தூர். - குடும்பத்தினர்.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டம்

சாவகச்சேரி பிரதேச சபை
18.07.2011 உதயனில் 18ஆம் பக்கத்தில் பிரசுரமான மேற்படி விளம்பரத்தில் -

இடம்:- வரணி, இயற்றாலை அமெரிக்கன் மிஷன் பாடசாலை முன்பாக என வாசிக்கவும்.

# தொடர்பு கொள்ளவும்

